வடக்கின் முதல் நாளிதழ் – Estd 1959

Reg. No. : P. 1632

விலை ரூ. 30/=

# ஈழநாடு

Eelanadu

Email : news@eelanadu.lk | மலர் : 04 | 08.05.2023 திங்கட்கிழமை | இதழ் : 150 | பக்கங்கள் : 16




மாருதி
Money Exchange (Pvt) Ltd.
இல.285, காலி வீதி, வெள்ளவத்தை, கொழும்பு 06
T.P: 011 236 2086
இல.390, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
T.P: 021 221 4433
076 284 4443
MoneyGram — மணிகிராம் பணப்பரிமாற்றம்
Ria — றியா பணப்பரிமாற்றம்
WESTERN UNION — வெஸ்ரேண் யூனியன் பணப்பரிவர்த்தனை
இவ் அனைத்து சேவைகளையும் இங்கு பெற்றுக் கொள்ளலாம்.

# பணத்துக்காக மாற்றினத்தவர்களுக்கு காணிகளை விற்பனை செய்யாதீர்கள்!

## சித்தார்த்தன் எம். பி. கோரிக்கை

- 10 பேரின் போராட்டங்களால் நெருக்கடி ஏற்படாது!
- கந்தரோடை, நல்லூரில் காணிகள் விற்பனை
- இராணுவமும் காணி வாங்கும் செயல்பாட்டில்




யாழ்ப்பாணம், மே 08

“சிறிதளவு பணம் அதிகமாகக் கிடைக்கிறது என்பதற்காக உங்கள் காணிகளை மாற்று சமூகத்தினருக்கு விற்காதீர்கள்”, என்று கோரிக்கை விடுத்துள்ளார் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் யாழ். மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் த.சித்தார்த்தன் எம். பி.

அத்துடன்,10 பேருடன் நடக்கும் போராட்டங்களால் அரசாங்கத்துக்கு நெருக்கடி ஏற்படாது. பெருமெடுப்பிலான போராட்டங்களை அனைவரும் இணைந்து நடத்த வேண்டும் என்றும் கோரியுள்ளார்.

கந்தரோடையில் உள்ள அவரின் இல்லத்தில் நேற்று நடத்திய செய்தியாளர் சந்திப்பிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இதன்போது அவர் மேலும் கூறியவை வருமாறு,

சில காலத்தின்

15

## கந்தரோடையில் விகாரை; எதிர்த்து நேற்று போராட்டம்!





யாழ்ப்பாணம், மே 08

கந்தரோடையில் பௌத்த விகாரை கட்டுவதற்கு எதிராக நேற்று ஞாயிற்றுக்கிழமை கவனவீர்ப்புப் போராட்டம் நடத்தப்பட்டது.

கந்தரோடையில் உள்ள தமிழ் பௌத்த எச்சங்களின் வரலாற்றை மாற்றியமைத்து, சிங்கள - பௌத்த தலமாக்கும் முயற்சிகள் தீவிரமாக இடம்

15

## மின்சாரம் தாக்கி இளைஞர் மரணம்!

யாழ்ப்பாணம், மே 08

மழை பெய்தபோது மின்குமிழ் மூலமாக ஏற்பட்ட மின்னொழுக்கால் தாக்குண்டு மாணவன் ஒருவர் உயிரிழந்தார்.

யாழ்ப்பாணம் - வண்ணார்ப ண்ணையில் நேற்று அதிகாலை 2 மணியள

15

## கிளிநொச்சியில் 7,313 குடும்பங்கள் உணவின்மை பிரச்னையால் பாதிப்பு

கிளிநொச்சி, மே 08

பொருளாதார நெருக்கடியால் கிளிநொச்சி மாவட்டத்தில் 7 ஆயிரத்து 313 குடும்பங்கள் உணவின்மை பிரச்னைகளை எதிர்கொண்டு வருகின்றன என்று தரவுகள் மூலமாகத் தெரிய வந்துள்ளது.

கிளிநொச்சியில் பெரும்பாலான குடும்பங்கள் வறுமைக்கோட்டின் கீழ் உள்ளன. இந்த நிலையில், 7ஆயிரத்து 313 குடும்பங்கள் உணவு நெருக்கடியை எதிர் கொண்டு வருகின்றன.

கரைச்சி பிரதேச செயலாளர் பிரிவில் 4 ஆயிரத்து 50 குடும்பங்களும், கண்டாவளை பிரதேச செயலாளர் பிரிவில் ஆயி ரத்து

15

## வடக்கு உட்பட 4 மாகாணங்களுக்கு புதிய ஆளுநர்கள் நாளை நியமனம்?

கொழும்பு, மே 08

பிரித்தானிய பயணத்தை முடித்துக் கொண்டு நாடு திரும்பும் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க நாளை புதிய ஆளுநர்களை நியமிப்பார் என்று அறிய வருகின்றது.

முன்னதாக, வடக்கு, கிழக்கு, வடமேல், சப்ரகமுவ ஆகிய மாகாணங்களின் ஆளுநர்களை பதவி விலகுமாறு உத்தரவிடப்பட்டுள்ளது. இந்த மாகாணங்களின் ஆளுநர் பதவிகளுக்கு ஐந்து பேர் பரிந்துரைக் கப்பட்டுள்ளனர்.

முன்னாள் அமைச்சர்களான நவீன் திஸநாயக்க, லக்ஷ்மன் யாப்பா அபே வர்த்

15

## வெடுக்குநாறிமலையில் நாளை சங்காபிஷேகம்!

### சகலரையும் பங்கேற்க அழைப்பு

வவுனியா, மே 08

வவுனியா - நெடுங்கேணி - ஒலுமடு - வெடுக்கு நாறி மலை ஆதிசிவன் ஆலய சங்காபிஷேகம் நாளை செவ்வாய்க்கிழமை அதிகாலை 3 மணி முதல் நடை பெறவுள்ளது.

15

## வைகாசி பௌர்ணமி இந்துகளுக்கு உரியது!

### யாழ். பல்கலை துணைவேந்தர்

யாழ்ப்பாணம், மே 08

வைகாசி பௌர்ணமி என்பது எமக்கு உரியது. ஆனால் யாரோ கொண்டாடுகிறார்கள். வைகாசி விசாகம் முருகப் பெருமான் பிறந்த நாள் - என்று தெரிவித் திருக்கிறார் யாழ். பல்கலைக்கழக பேராசி

15

## “தேசிய அரசு சாத்தியமில்லை”

கொழும்பு, மே 08

“இருக்கின்ற அரசே கவிழும் நிலையில் உள்ள போது எப்படி தேசிய அரசாங்கம் சாத்தியப்படும்?” - என்று கேள்வி எழுப்பியுள்ளார் ஐக்கிய மக்கள் சக்தியின் பொதுச் செயலாளர் ரஞ்சித் மத்தும பண்டார எம்.பி.

தேசிய அரசு உருவாக் கப்பட்டால்அதில்ஐக்கிய

15

## தேர்தல்கள் ஆணைக்குழுவுக்கு அடுத்தவாரம் புதிய உறுப்பினர்கள்!

கொழும்பு, மே 08

தேர்தல்கள் ஆணைக் குழுவுக்கு புதிய உறுப்பினர்கள் நியமிக்கப்படவுள்ளனர். இந்த நிலையில், நியமிக்கப்பட முடியாத ஆணைக்குழுக்களுக்கான உறுப்பினர் நியமனங்கள் அடுத்த வாரத்தில் நடைபெறும் என்று சபாநாயகர் மகிந்த யாப்பா அபேவர்த்தன தெரிவித்துள்ளார்.

புதிய தேர்தல் ஆணைக்குழு ஒன்றை நியமிக்க வேண்டும் என்று அரசமைப்பு சபையில் முன் மொழியப்பட்ட போது, உள்ளூராட்சி சபைத் தேர்தல் முடியும் வரை புதிய ஆணைக்குழுவை நியமிக்கக்கூடாது என்று கட்சித் தலைவர்கள் கருத்து வெளியிட்டிருந் தனர்.

15

## மக்கள் உணவை குறைக்க நேர்ந்தால் பெரும்பாலானவர்கள் மரணமடைவர்

### பேராதனை பல்கலைக்கழகம் எச்சரிக்கை

கொழும்பு, மே 08

வரிச்சுமையை சமாளிக்க நாட்டில் உணவு நுகர்வு அளவு பாதியாகக் குறைக்கப்பட நேரும். இது இடம்பெற்றால் பெரும்பாலான மக்கள் உணவுப் பற்றாக்குறையால் நோய்வாய்ப்பட்டு மரணமடைவார்கள் என்று பேராதனை பல்கலைக்கழகத்தின் பொருளாதார மற்றும் புள்ளியியல் கற்கைகள் பிரிவு எச்சரிக்கை விடுத்துள்ளது.

இது தொடர்பில் அந்தப் பல்கலைக்கழகத்தின் துறைசார் பேராசிரியர் வசந்த அத்துகோரள தெரிவித்தவை வருமாறு,

2022ஆம் ஆண்டு முதல் 2028ஆம் ஆண்டு வரையிலான பணத்தின் பெறுமதியை ஒப்பிடும் போது, 2022 ஆம் ஆண்டில் ஆயிரம் ரூபாயின் பெறுமதி 2028ஆம் ஆண்டளவில் 567 ரூபாயாக குறையும்.

2023 ஆம் ஆண்டு வருமானத்தை 43வீதத்தை

15

**உண்மைகள் புனிதமானவை; கருத்துக்கள் சுதந்திரமானவை**

# இப்படியும் நடக்கிறது...!

இந்தப் பத்தியில் நேற்று முன்தினம் மாகாண சபை தேர்தல் நடக்கும்வரை ஆலோசனை சபை ஒன்றை நியமிக்கக்கோரும் கடிதம் தொடர்பாக எழுதியிருந்தேன்.

அவ்வாறு ஆலோசனை சபைக்கான கோரிக்கையை முன்வைப்பதற்கு இது பொருத்தமான நேரமல்ல என்ற எமது கருத்துக்கு லண்டனிலிருந்து நண்பர் தம்பா எதிர்வினையாற்றியிருக்கிறார்.

அது குறித்து அவர் அனுப்பி வைத்துள்ள சிறிய குறிப்பு ஒன்றை முதலில் தருகின்றேன்.

"தமிழ் தேசிய தரப்பு என்று சொல்லிக்கொள்வோர்களும் சிங்கள இனவாத கட்சிகளும் மாகாண சபையை நிராகரிக்கிறார்கள் அல்லது அக்கறையில்லாமல் இருக்கிறார்கள் அல்லது வெளிப்படையாக ஆதரிக்க துணிச்சல் இன்றி இருக்கிறார்கள் என்பதே உண்மை.

இந்திய பிரதருக்குக் கடிதம் எழுதியவர்கள்கூட ஒரு வருடத்துக்கு மேலாகியும் அதுபற்றி எதுவும் செய்யவில்லை என்பதும் இந்திய பிரதமர் அழைத்த போதுகூட அழைப்பை நிராகரித்தார்கள் என்பதும் இரகசியமானதல்ல. இந்தியாவுக்கும் இது தெரியாததல்ல.

இன்றைக்கும் ஜனாதிபதி எதிர்வரும் 11, 12 ,13ஆம் திகதிகளில் தமிழ் எம். பிக்களை பேச அழைக்கிறார். இதில், கலந்து கொண்டாலும்கூட தமிழ்த் தேசிய தரப்பு என்று சொல்லிக்கொள்வோர் ஆக்கபூர்வமாகப் பேசி விடயங்களை நகர்த்துவதற்கு அவர்களிடம் எந்த திட்டமும் இல்லை.

அங்கு போனால் ஏப்ரல் 25ஆம் திகதி பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்ட மாகாண சபை தேர்தல் திருத்த சட்ட மூலத்தை உடனடியாக சட்டமாக்குங்கள், மூன்று மாதத்துக்குள் மாகாண சபை தேர்தல்களை நடத்துங்கள் என்ற ஒரே நோக்குடன் ஒற்றுமையாக கோரிக்கையை முன்வைக்கக் கூடிய துணிச்சல் இவர்களுக்கு உண்டா?

மாகாண சபை தேர்தல்கள் 2018இல் கிடப்பில் போடப்பட்டதில் கூட்டமைப்பின் வகிபாகமும் தெரியாததல்ல. இந்த யதார்த்தத்தை புரிந்து கொண்டுதான் அதாவது, தமிழ் தேசிய தரப்பு என்று கூறிக்கொள்வோரும் சிங்கள இனவாத சக்திகளும் மாகாண சபை தேர்தல்கள் நடத்துவதை அனுமதிக்கமாட்டார்கள் என்பதை தெரிந்து கொண்டுதான் இரண்டு வருடங்களுக்கு முன்னரே எந்திரி விக்னேஸ்வரன் அவர்களும் மற்றும் சங்கரி அண்ணன், சந்திரகாந்தன், சந்திரகுமார், சுகு சிறீதரன் ஆகியோரின் கட்சிகள் தேர்தல்கள் நடக்கும்வரை அரசியலமைப்பு சட்டத்தின் பிரகாரம் ஆலோசனை சபைகள் அமைக்கப்படல் வேண்டும் என்ற செயல்திட்டத்துடன் அதற்காக 13ஆவது திருத்தத்தை முழுமையாக அமுல்படுத்த வேண்டும் என்ற இயக்கத்தை ஆரம்பித்தார்கள் என்பதும் தெரிந்ததே.

இவர்கள் கோரும் ஆலோசனை சபைகள் என்பதே தேர்தல்களை நடத்தும்வரையான ஒரு ஏற்பாடே அன்றி தேர்தலுக்கு பதிலான ஏற்பாடல்ல. இன்றைய நிலையில் மாகாண சபை தேர்தல்கள் நடப்பதாயின் அது ஜனாதிபதியும் ஆளும் மொட்டு கட்சியினரும் குறைந்தபட்சம் வடக்கு - கிழக்கில் மாகாண சபை தேர்தல்களை நடத்துவது தமக்கு ஏதோவொரு வகையில் அனுகூலமாக இருக்கும் என்று நினைத்தாலொழிய நடைபெறாது என்பதே உண்மை. அது மாத்திரமல்ல எப்போது நடத்தப்படல் வேண்டும் என்பதுகூட அவர்களால் தான் தீர்மானிக்கப்படும் என்பதே உண்மை. இதில் தமிழ்த் தேசிய தரப்பினரின் பங்கு தேர்தல்களில் நிற்பதை தவிர வேறு எதுவும் இருக்காது."

இதுவே, லண்டனிலிருந்து தம்பா அனுப்பிய கருத்து.

இங்கே அவர் சொல்ல வருவது, ஆலோசனை சபையை அமைக்க வேண்டும் என்ற கோரிக்கையை அவர்கள் முன்வைத்தது இரண்டு வருடங்களுக்கு முன்னர் என்றும் தேர்தல் நடத்தும்வரை ஓர் இடைக்கால ஏற்பாடாகவே அதனை செய்ய கேட்டார்கள் என்றும் தெரிவித்திருக்கிறார்.

ஆனால், ஆலோசனை சபை எப்போது அமைக்கலாம் என்பதும் அரசியலமைப்பு சட்டத்தில் மிக தெளிவாக தெரிவிக்கப்பட்டிருக்கின்றது. மக்களால் தெரிவு செய்யப்பட்ட பிரதிநிதிகளால் மாகாண சபை நடந்து கொண்டிருக்கும்போது மாகாணத்தை கொண்டு நடத்த முடியாத ஒரு நிலைமை ஏற்படும் போது-

அதாவது சுனாமி போன்ற பேரழிவு, மக்கள் பட்டினியால் இறக்கின்ற அளவுக்கு ஒரு பெரும் அனர்த்தம் அல்லது நாட்டின் தேசிய பாதுகாப்புக்கு அச்சுறுத்தல் போன்ற காரணங்களால் மாகாண சபைகளை கொண்டு நடத்த முடியாது என்று ஆளுநர் கருதுகின்றபோது, அது குறித்து ஆளுநர் ஜனாதிபதிக்கு அறிவிக்கவேண்டும். ஆளுநரின் இந்த ஆலோசனையை ஜனாதிபதி பாராளுமன்றத்தில் சமர்ப்பித்து அதன் அனுமதியைப் பெற்றே ஓர் ஆலோசனை சபையை நியமிக்கலாம்.

யுத்தம் நடந்துகொண்டிருந்த போது, வடக்கில் மாகாண சபை இயங்காமல் இருந்தது. அப்போது இதுபோன்ற யோசனை ஒன்றை சிலர் முன்வைத்தபோது, அப்போது அரசாங்கத்தில் அமைச்சராக இருந்த சட்டப் பேராசிரியரான ஜி. எல். பீரிஸ், அப்படியொரு நிலைமை நாட்டில் இப்போது இல்லை என்று கூறி அதனை நிராகரித்திருந்தார்.

இவை எல்லாம் அப்படியோர் ஆலோசனை சபை அமைக்கப்பட்டால் அதில் தங்களுக்கும் இடம் கிடைக்கும் என்று நம்புகின்றவர்களுக்கு வேண்டுமானால் விருப்பமானதாக இருக்கலாம்.

ஆனால், இப்போது அவசரமான தேவை மாகாண சபைகளுக்கு தேர்தல் நடத்தப்படுவதே. இவ்வாரம் ஆரம்பமாகும் பேச்சுகளில் தீர்வுக்காக அரசு உண்மையான ஆர்வம் காட்டுகின்றது என்றால், முதலில் மாகாண சபைகளுக்கான தேர்தலைகளை ஆக்ககுறைந்தது வடக்கிலாவது உடனடியாக நடத்த வேண்டும் என்ற கோரிக்கையை வடக்கு எம். பிக்கள் விடுக்க வேண்டும்.!

- ஊர்க்குருவி

# அதிநவீன அடையாள அட்டைகள் வழங்கலை செயல்படுத்த திட்டம்!

## சூரிய சக்தி மின் திட்டம் தொடர்பிலும் கவனம்

கொழும்பு, மே 08

அதிநவீன அடையாள அட்டைகள் வழங்குதல் உள்ளிட்ட மூன்று திட்டங்களை உடனடியாக இலங்கையில் செயல்படுத்துவதில் இந்திய அரசு கவனம் செலுத்தி வருகிறது.

நவீன தொழில்நுட்பத்துடன் கூடிய அடையாள அட்டை வழங்குவதை செயல்படுத்த இந்திய அரசு விருப்பம் தெரிவித்ததுடன் அது தொடர்பான நடவடிக்கைகள் தற்போது செயலில் உள்ளன.

மேலும், சூரிய சக்தி திட்டம், இந்தியா - இலங்கை இடையே படகு சேவை ஆகிய திட்டங்களும் இவற்றில் அடங்கும்.

இதில், யாழ்ப்பாணத்தில் மூன்று தீவுகளில் சூரிய சக்தி மின் திட்டங்கள் ஆரம்பிக்கப்படவுள்ளன. இந்தியாவின் இராமேஸ்வரம் - தலைமன்னாருக்கு இடையில் படகு சேவையை ஆரம்பிக்கவும் கலந்துரையாடப்பட்டுள்ளது.

ஜனாதிபதியின் பணிப்பாளர் பிரதானி சாகல ரத்நாயக்கவிற்கும் இந்திய உயர்ஸ்தானிகருக்கும் இடையில் இடம்பெற்ற சந்திப்பில் இது தொடர்பில் கலந்துரையாடப்பட்டுள்ளது. (ஐ)

# அதிகரிக்கும் சீனி விலை; நுகர்வோர் சபை அவதானம்!

கொழும்பு, மே 08

சீனி விலை அதிகரிப்பு தொடர்பில் நுகர்வோர் விவகார அதிகார சபை விசேட கவனம் செலுத்தியுள்ளது.

சீனியின் விலையை அதிகரிப்பதற்காக வர்த்தகர்கள் கையிருப்புகளை மறைத்து வைத்திருப்பது கண்டுபிடிக்கப்பட்டால், அது தொடர்பில் துரித சட்ட நடவடிக்கை எடுக்க அதிகாரசபை எதிர்பார்த்துள்ளது.

இவ்வாறு சீனி கையிருப்புகளை மறைத்து வைத்தால், அவை நுகர்வோருக்கு விநியோகிக்கப்படும் என நுகர்வோர் விவகார அதிகார சபையின் சிரேஷ்ட பேச்சாளர் தெரிவித்தார்.

எவ்வாறாயினும், எதிர்காலத்தில் இறக்குமதி செய்யப்படும் சீனியின் விலை மேலும் அதிகரிக்கலாம் என அத்தியாவசிய பொருட்கள் இறக்குமதியாளர்கள் சங்கம் தெரிவித்துள்ளது.

இந்த வகையில் நாட்டில் சுமார் இரு மாதங்களுக்கு போதுமான சீனி கையிருப்பில் உள்ள பின்னணியில் சீனியின் விலை அவ்வப்போது அதிகரிக்கின்றது. (ஐ)

# உரத்துக்கு வவுச்சர் திட்டம் இன்று அமைச்சரவைக்கு!

கொழும்பு, மே 08

இந்தமுறை சிறுபோகத்துக்கு தேவையான உரத்தை கொள்வனவு செய்வதற்காக விவசாயிகளுக்கு வவுச்சர் வழங்குவது தொடர்பான யோசனையை இன்று திங்கட்கிழமை அமைச்சரவை அனுமதிக்காக முன்வைக்கவுள்ளதாக விவசாய அமைச்சர் மகிந்த அமரவீர தெரிவித்துள்ளார்.

இதற்கான அனுமதியை ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க வழங்கியுள்ளதாக அமைச்சர் கூறியுள்ளார். (ஐ)

# ஏ. எல். பரீட்சை விடைத்தாள்களை 15 நாட்களில் திருத்தி முடிக்க முடிவு

கொழும்பு, மே 08

2022 ஆம் ஆண்டுக்கான உயர்தரப் பரீட்சையின் விடைத்தாள்களை விரைவில் திருத்தி முடிக்க பரீட்சை திணைக்களம் எதிர்பார்க்கிறது.

பல்கலைக்கழக விரிவுரையாளர்கள் மற்றும் விடைத்தாள்களின் தலைமைப் பரீட்சார்த்திகளும் இந்த நடவடிக்கைகளில் பங்கேற்பார்கள். ஒவ்வொரு பாடத்துக்கும் தொடர்புடைய விடைத்தாள்களுக்கு மதிப்பெண்கள் வழங்கும் முறை குறித்து ஆலோசிக்கப்படும் என தெரிவிக்கப்படுகின்றன.

அதன்பின், எதிர்வரும், 15ஆம் திகதி முதல், பரீட்சை விடைத்தாள்கள் திருத்தும் பணிகள் ஆரம்பிக்க முடிவு செய்யப்பட்டது. இந்நிலையில், 15 நாட்களுக்குள் பணிகளை முடிக்க எதிர்பார்க்கப்படுகின்றது. (ஐ)



'திராவிட மாதிரியும் தமிழ்நாடும்' என்ற தலைப்பில் கொக்குவில் தேசிய கலை இலக்கியப் பேரவையில் கடந்த வெள்ளிக்கிழமை இடம்பெற்ற சமூக விஞ்ஞானப் படிப்பு வட்டத்தின் கலந்துரையாடலின் போது...!

# கூடுதல் பேருந்துகள் சேவையில்!

கொழும்பு, மே 08

வெசாக் விடுமுறைக்காக கிராமங்களுக்குச் சென்ற மக்கள் மீண்டும் கொழும்பு திரும்புவதற்கு போதிய பேருந்துகளை சேவையில் ஈடுபடுத்துமாறு பிராந்திய அலுவலகங்கள் மற்றும் இலங்கை போக்குவரத்து சபை பணிமனைகளுக்கு பணிப்புரை விடுத்துள்ளதாக இலங்கை போக்குவரத்து சபை தெரிவித்துள்ளது.

இதேவேளை, தனியார் பேருந்துகள் நேற்று வழமை போன்று சேவையில் ஈடுபடும் என இலங்கை தனியார் பேருந்து உரிமையாளர்கள் சங்கத்தின் தலைவர் கெமுனு விஜயரத்ன தெரிவித்துள்ளார்.

இதேவேளை, வெசாக் விடுமுறையை முன்னிட்டு அநுராதபுரம் மற்றும் பதுளைக்கு இரண்டு விசேட புகையிரதங்கள் சேவையில் ஈடுபடுத்தப்பட்டுள்ளதாக புகையிரத போக்குவரத்து பிரதி பொது முகாமையாளர் குறிப்பிட்டார். (ஐ)

# ரூ. 25 இலட்சம் மோசடி செய்த பெண் கைது!

கொழும்பு, மே 08

ருமேனியாவில் தொழில் வாய்ப்பு பெற்றுத் தருவதாக கூறி கொழும்பு பகுதியில் இளைஞர்களிடம் பணத்தைப் பெற்று மோசடி செய்தார் என்ற குற்றச்சாட்டில் பெண் ஒருவர் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

கொலன்னாவை பிரதேசத்தை சேர்ந்த குறித்த பெண், பத்தரமுல்லை பிரதேசத்தில் உள்ள பிரபல ஹோட்டல் ஒன்றில் தங்கியிருந்தபோதே கைதுசெய்யப்பட்டுள்ளார்.

கொழும்பில் உள்ள 5 இளைஞர்களிடம் சந்தேக நபரான பெண் 25 இலட்சம் ரூபாய் மோசடி செய்துள்ளார் என்று வெளிநாட்டு வேலை வாய்ப்பு பணியகத்துக்கு முறைப்பாடு கிடைத்துள்ளது.

பண மோசடியில் சிக்கிய இளைஞர்கள் பணியகத்தின் சிறப்பு புலனாய்வு பிரிவுக்கு வழங்கிய முறைப்பாடுகளின் அடிப்படையில் குறித்த பெண் கைதுசெய்யப்பட்டுள்ளார். (ஐ)

ஈழநாடு
Eelanadu
08.05.2023 திங்கட்கிழமை
சோபகிருது வருடம், சித்திரை 25

**"ஏசுவார்கள், எரிப்பார்கள், அஞ்சவேண்டாம்
உண்மையை எழுதுங்கள்; உண்மையாய் எழுதுங்கள்"**
- யோகர் சுவாமிகள்.

E-mail: eelanaduweekly@gmail.com
தொலைபேசி : 021 205 2300

# கிழக்கை அழைத்தல் ?

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க மீண்டும் தமிழ் கட்சிகளுடன் பேசவுள்ளார் என்று அறிவிக்கப்பட்டிருக்கின்றது. முன்னர் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பாக சந்தித்தவர்கள் தற்போது இரண்டு அணிகளாக இருக்கின்றனர். இவ்வாறானதொரு பின்புலத்தில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர்கள் கிழக்கு மாகாண பாராளுமன்ற உறுப்பினர்கள் அழைக்கப்படவில்லையாயின், சந்திப்பில் கலந்துகொள்ளப் போவதில்லையென்று அறிவித்திருக்கின்றனர். ஆனால், கட்சிகளின் தலைமைகள் அழைக்கப்படும்போது பாராளுமன்ற உறுப்பினர்களுக்கான அழைப்பை எவ்வாறு முன்னெடுப்பதென்று ஜனாதிபதியின் பக்கத்தில் கேள்விகள் வரவும்கூடும். அவ்வாறு கேள்வி முன்வைக்கப்பட்டால் அதில் தவறில்லை. ஏனெனில், கட்சிகளுக்கான அழைப்பு என்பது அதன் தலைமைகளுக்கானது.

ஆரம்பத்தில் விடயங்களை வடக்கு மாகாணத்துக்கான ஒரு பிரச்னையாகவே ரணில் அணுக முற்பட்டார். பின்னர் தேசிய பிரச்னைக்கான தீர்வை காணப்போவதாக நிகழ்ச்சிநிரலை மாற்றினார். உண்மையில், சிங்கள ஆடசியாளர்களைப் பொறுத்தவரையில் தமிழ் மக்களின் பிரச்னையை அவர்கள் வடக்கு தமிழர்களுக்கான – குறிப்பாக யாழ்ப்பாணத்து மக்களின் பிரச்னையாகவே நோக்குகின்றனர். கிழக்கு மாகாணத்தை மூன்று இனங்களுக்கான மாகாணமாகவே நோக்குகின்றனர். எனவே, கிழக்கு விடயமென்றால் அதனை மூவின அரசியல்வாதிகளுடன் பேச வேண்டும். வடக்கு பிரச்னை என்றால் – அதனை அனைத்து தமிழ் கட்சிகளுடன் பேச வேண்டும் என்றவாறான அணுகுமுறையையே அரசாங்கம் கைக்கொள்ள முயற்சிக்கின்றது. இதனை எவ்வாறு எதிர்கொள்வது? தமிழ்த் தேசிய கட்சிகளிடமுள்ள பொறிமுறை என்ன?

பேச்சில் கிழக்கு மாகாணத்தை சேர்ந்த பாராளுமன்ற உறுப்பினர்கள் இருப்பதால் மட்டும் கிழக்கு பிரச்னை உள்ளடக்கப்பட்டுவிடாது. தமிழ் மக்கள் ஒரு தரப்பு என்னும் அடிப்படையிலான வேலைத்திட்டத்தின் ஊடாகத்தான் இந்தப் பிரச்னையை எதிர்கொள்ள முடியும். கிழக்கு மாகாணத்தின் சனப்பரம்பல் மாறிவிட்டது. இந்தப் பின்புலத்தில் கிழக்கு மாகாணத்தில் தமிழர் அரசியலும் ஒப்பீட்டடிப்படையில் பலவீனமாகவே இருக்கின்றது. ஏற்கனவே, அம்பாறை மாவட்டத்தில் தமிழ்த் தேசிய பிரதிநிதித்துவம் பறிபோய்விட்டது. அடுத்த தேர்தலில் திருகோணமலையின் நிலைமையும் கேள்விக்குறியாகியுள்ளது. இந்த நிலையில், கிழக்கு நிலைமைகளை எதிர்கொள்வதற்கு பிரத்தியேக பொறிமுறை தொடர்பில் தமிழ்த் தேசிய கட்சிகள் சிந்திக்க வேண்டும். முதலில் கிழக்கின் தமிழ் மக்களை ஒரு திரட்சியாகப் பாதுகாப்பதற்கான வேலைத்திட்டம் தொடர்பில் சிந்திக்க வேண்டும்.

கிழக்கின் நிலைமைகள் தொடர்பில் தமிழ்த் தேசிய அரசியல் பரப்பில்கூட எந்தளவுக்கு சரியான புரிதல் இருக்கின்றது என்பது கேள்வியாகும். அரசாங்கத்தின் அணுகுமுறைகள் ஒருபுறமிருக்க, தமிழ்த் தேசிய கட்சிகளின் அணுகுமுறையிலும் கிழக்கு தமிழ் மக்களின் பிரச்னைகள் தொடர்பில் பிரத்தியேக அவதானம் இல்லை. இன்றைய தமிழ்த் தேசிய அரசியல் என்பது, பெருமளவுக்கு யாழ்ப்பாணத்து – அதற்குமப்பால் கிளிநொச்சி, மன்னார் என்னும் நிலையில்தான் சுருங்கிக் கிடக்கின்றது. கட்சிகளின் தலைவர்களின் தேர்தல் இலக்குகள் வடபுலத்தை அடிப்படையாகக் கொண்டிருப்பதால் தேர்தல் காலத்தில் கிழக்கை, எட்டிப்பார்க்கும் நிலையிலேயே தலைவர்களின் கிழக்கு நோக்கிய பார்வை இருக்கின்றது.

வடக்கில் கடல் அட்டை பண்ணை தொடர்பில் பேசிய – அனலைதீவில் சீனாவின் திட்டங்களுக்கு எதிர்ப்பு வெளியிட்ட – தமிழ்த் தேசிய அரசியல்வாதிகள் கிழக்கில் சீனாவின் பிரசன்னம் தொடர்பில் ஏன் கவனம் செலுத்தவில்லை. கிழக்கின் ஆளுநர் சீனாவின் யுனான் மாகாணத்துடன் உடன்பாடொன்றை செய்வதற்கு திட்டமிட்டிருக்கின்றார். இவைகள் தொடர்பில் வடபுலத்திலிருந்து எவருமே பேசவில்லை. கிழக்கின் தமிழ் தேசியர்களும் பேசவில்லை. கிழக்கு தொடர்பில் கரிசனையிருந்தால், இவைகள் தொடர்பில் தமிழ்த் தேசிய கட்சிகளின் தலைமைகள் என்போர் அவதானம் செலுத்தியிருக்க வேண்டுமல்லவா? தமிழ்த் தலைவர்கள் என்போரிடமே கிழக்கு தொடர்பில் கரிசனையில்லாதபோது ரணில் விக்கிரமசிங்கவிடம் அதனை எவ்வாறு எதிர்பார்க்க முடியும்?

# மோசமடைகிறது டெங்கு பரவல் கட்டுப்படுத்த விசேட நடவடிக்கை!

கொழும்பு, மே 08

நாடளாவிய ரீதியில் பரவி வரும் டெங்கு நோயை கட்டுப்படுத்த சுகாதார அமைச்சு துரித நடவடிக்கைகளை முன்னெடுத்துள்ளது. இந்த ஆண்டில் இதுவரையான காலப் பகுதியில் 31 ஆயிரத்து 98 டெங்கு நோயாளர்கள் பதிவாகியுள்ளனர். இந்நிலையில் இந்நிலைமை மோசமடைய முன்னர் பல்வேறு டெங்கு ஒழிப்பு வேலைத்திட்டங்கள் முன்னெடுக்கப்பட்டுள்ளதாக சுகாதார அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் கூறுகையில்,

இந்தப் பிரச்னைக்கு தீர்வு காண்பதற்கு உடனடியாக மேற்கொள்ள வேண்டிய நடவடிக்கைகள் குறித்து நிபுணர் அறிக்கை ஒன்றை வழங்குமாறு அமைச்சின் செயலாளருக்கு பணிப்புரை விடுக்கப்பட்டுள்ளது. மேலும், டெங்கு பரவுவதை கட்டுப்படுத்த தேசிய டெங்கு கட்டுப்பாட்டுப் பிரிவு உள்ளிட்ட நிபுணர்களைக் கொண்ட குழுவும் நியமிக்கப்பட்டுள்ளது.

டெங்கு வைரஸ் பரவுவதை கட்டுப்படுத்தும் முயற்சிகளை ஒருங்கிணைக்க ஜனாதிபதி செயலணியொன்று ஸ்தாபிக்கப்பட்டுள்ளது. தொற்று நோய்களைத் தடுக்க தேவையான நடவடிக்கைகளை செயல்படுத்த சுகாதார அதிகாரிகளுடன் பணிக்குழு செயல்படும்.

கம்பஹா மாவட்டத்தில் அதிகபட்சமாக 6 ஆயிரத்து 953 நோயாளிகளும், கொழும்பு மாவட்டத்தில் 6 ஆயிரத்து 500 நோயாளிகளும் பதிவாகியுள்ளனர். டெங்கு பரவாமல் தடுக்க நுளம்பு பரவும் இடங்களை அகற்றுதல், பாதுகாப்பு ஆடை அணிதல் உள்ளிட்ட அனைத்து முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளையும் மேற்கொள்ளுமாறு பொதுமக்களை அமைச்சர் வலியுறுத்தியுள்ளார்.

(ஐ)

# தினேஷ் ஷாப்டர் மர்மமரணம்; மீண்டும் விசாரணைகள் தீவிரம்!

கொழும்பு, மே 08

ஜனசக்தி குழுமத்தின் பணிப்பாளராக இருந்த தினேஷ் ஷாப்டர் பொரளையில் கொலை செய்யப்பட்டமை தொடர்பில் மீண்டும் விசாரணைகள் தீவிரப்படுத்தப் பட்டுள்ளன.

கொழும்பை சேர்ந்த பிரபல தமிழ் வர்த்தகர் தினேஷ் ஷாப்டர் பொரளை பொது மயானத்தில் காரில் கழுத்து நெரிக்கப்பட்ட நிலையில் மீட்கப்பட்டார். தேசிய மருத்துவமனையின் அதிதீவிர சிகிச்சைப் பிரிவில் சேர்க்கப்பட்டு சிகிச்சையளிக்கப்பட்ட நிலையில் அவர் உயிரிழந்தார்.

இவ்வாறு, மர்மமான முறையில் படுகொலை செய்யப்பட்ட தினேஷ் ஷாப்டரின் காரின் அருகே நின்ற மெலிந்த, உயரமான நபர் தொடர்பில் மயான ஊழியர் ஒருவர் அளித்த வாக்குமூலத்தின் அடிப்படையில் விசாரணை தீவிரப்படுத்தப்பட்டுள்ளன.

இந்நிலையில், தினேஷ் ஷாப்டரின் வர்த்தக நண்பர் பிரையன் தோமஸ் மற்றும் ஷாப்டரின் நெருங்கிய உறவினர்கள் பயன்படுத்திய 20 கைபேசிகள் மற்றும் மடிக்கணினிகளை அரசாங்க பரிசோதகருக்கு அனுப்பி வைக்குமாறு கொழும்பு பிரதான நீதிவான் பிரசன்ன அல்விஸ் கடந்த 4ஆம் திகதி அரசாங்க பரிசோதகருக்கு உத்தரவிட்டிருந்தார்.

தொழில்நுட்ப அறிக்கையில் வெளியான தகவல்

இதற்கமைய, ஷாப்டர் பயன்படுத்திய மடிக்கணினி, கைபேசி, அவரது வர்த்தக நண்பர் பிரையன் தாமஸ் பயன்படுத்திய மடிக்கணினி, கையடக்கத்தொலைபேசி, ஷாப்டரின் உறவினர்கள் பயன்படுத்திய 20 கைபேசிகள் மற்றும் மடிக்கணினிகள் என்பன நீதிமன்றில் சமர்ப்பிக்கப்பட்டுள்ளன.

குறித்த அறிக்கைகள் மற்றும் அரசாங்கத்தின் அறிக்கை ஆகியவை ஆய்வாளரின் அறிக்கைகள் ஒப்பிடத்தக்கதா என்பதை விசாரிக்க சம்பந்தப்பட்ட வழக்குகளை அரசாங்க தணிக்கையாளருக்கு அனுப்புமாறு நீதிமன்றில் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

இந்த கோரிக்கையை பரிசீலித்த நீதிவான், குற்றப்புலனாய்வு திணைக்களத்தால் நீதிமன்றில் முன்வைக்கப்பட்ட வழக்கு பொருட்களை அரச பரிசோதகரிடம் சமர்ப்பிக்குமாறு உத்தரவு பிறப்பித்தார்.

(ஐ)

# முன்பள்ளி மாணவர்களுக்கு பிஸ்கெற் வழங்கும் திட்டம்!

கொழும்பு, மே 08


சிறு குழந்தைகளின் போசாக்கு மட்டத்தை அதிகரிப்பதற்கு விசேட வேலைத்திட்டம் ஒன்று திட்டமிடப் பட்டுள்ளது என்று சிறுவர் மற்றும் மகளிர் விவகார இராஜாங்க அமைச்சர் கீதா குமாரசிங்க தெரிவித்துள்ளார்.

இந்தத் திட்டத்தின் கீழ் முன்பள்ளிச் சிறார்களுக்கு உயர் போசாக்குடன் கூடிய பிஸ்கெற் வகைகளை வழங்க திட்டமிடப்பட்டுள்ளதாகவும் அவர் சுட்டிக் காட்டியுள்ளார்.

அடுத்த மாதம் முதல் இந்த வேலைத்திட்டம் அமுல்படுத்தப்படும் என இராஜாங்க அமைச்சர் கீதா குமாரசிங்க தெரிவித்துள்ளார்.

(ஐ)

## அப்புக்குட்டி அண்ணையின் 'டவுட்'



மே - 08 திங்கட்கிழமை
சோபகிருது வருடம் - சித்திரை 25
நல்ல நேரம் : 06.00 - 07.30
ராகு காலம் : 07.30 - 09.00
திதி : திரிதியை




**மேடம்**
சந்திராஷ்டமம் இருப்பதால் சிலர் விமர்சனங்களுக்கும் கேலி பேச்சிற்கும் ஆளாவீர்கள். பண விஷயத்தில் சாக்கு போக்கு சொல்லி சமாளிப்பீர்கள். உத்தியோகத்தில் ஈகோ அதிகரிக்கும்.

**இடபம்**
மறைந்து கிடந்த திறமைகள் வெளிப்படும். உங்கள் பிள்ளைகளால் மகிழ்ச்சியும் உறவினர்களால் ஆதாயமும் உண்டாகும். வாகனத்தை சீர் செய்வீர்கள். நன்மை கிட்டும் நாள்.

**மிதுனம்**
குடும்பத்தில் உள்ளவர்களின் உணர்வுகளை புரிந்துக் கொண்டு அதற்கேற்ப உங்களை மாற்றிக் கொள்வீர்கள். வியாபாரத்தில் வரவு உயரும். உழைப்பிற்கு பாராட்டு கிடைக்கும். அமோகமான நாள்.

**கடகம்**
மற்றவர்களை நம்பி எந்த வேலையையும் ஒப்படைக்கக் கூடாது என்று முடிவெடுப்பீர்கள். கடையை விரிவுபடுத்துவீர்கள். அதிகாரிகள் வலிய வந்து உதவுவார்கள். புதுமை படைக்கும் நாள்.

**சிம்மம்**
திட்டமிட்ட காரியங்கள் சிறப்பாக நடக்கும். வீடு வாகன பராமரிப்புச் செலவுகள் வந்து போகும். வியாபாரத்தில் அதிரடி மாற்றம் செய்து லாபம் ஈட்டுவீர்கள். ஊழியர்களால் நிம்மதி கிட்டும்.

**கன்னி**
துணிச்சலாக சில முக்கிய முடிவுகள் எடுப்பீர்கள். வியாபாரத்தில் ரெட்டிப்பு லாபம் உண்டு. உத்தியோகத்தில் உங்களின் திறமையை வெளிப்படுத்த நல்ல வாய்ப்புகள் வரும். தைரியம் கூடும் நாள்.

**துலாம்**
கணவன் - மனைவிக்குள் அன்யோன்யம் பிறக்கும். பழைய பிரச்சினைகளுக்கு மாறுபட்ட அணுகுமுறையால் தீர்வு காண்பீர்கள். சக ஊழியர்கள் மதிப்பார்கள். புத்துணர்ச்சி பெருகும் நாள்.

**விருட்சிகம்**
ராசிக்குள் சந்திரன் இருப்பதால் வெளுத்ததெல்லாம் பாலாக நினைத்து சிலரிடம் சிக்கிக் கொள்ளாதீர்கள். வியாபாரத்தில் அலைச்சல் இருக்கும். அதிகாரிகளிடம் அதிக உரிமை எடுத்துக்கொள்ள வேண்டாம்.

**தனுசு**
கணவன் - மனைவிக்குள் மனஸ்தாபம் வந்து நீங்கும். யாரையும் தூக்கி எறிந்து பேசாதீர்கள். வியாபாரத்தில் லாபம் வரும். ஊழியர்களிடம் விவாதம் வேண்டாம். விவாதங்களை தவிர்க்க வேண்டிய நாள்.

**மகரம்**
எதிர்பார்ப்புகள் நிறைவேறும். பெற்றோரின் ஒத்துழைப்பு அதிகரிக்கும். மனை வாங்குவது விற்பது லாபகரமாக அமையும். அதிகாரிகள் பாராட்டும்படி நடந்து கொள்வீர்கள். உழைப்பால் உயரும் நாள்.

**கும்பம்**
கடந்த கால சுகமான அனுபவங்கள் எல்லாம் நிழலாடும். நல்ல செய்தி வரும். வியாபாரத்தில் எதிர்பார்த்ததை விட லாபம் அதிகரிக்கும். அலுவலகத்தில் மரியாதை கூடும். மதிப்பு மரியாதை கூடும் நாள்.

**மீனம்**
குடும்பத்தில் கலகலப்பான சூழல் உருவாகும். குலதெய்வப் பிரார்த்தனைகளை நிறைவேற்றுவீர்கள். வியாபாரத்தில் பழைய வேலையாட்களை மாற்றுவீர்கள். இன்று மகிழ்ச்சியான நாள்.

# தேசிய அரசியலை நோக்கி காய்நகர்த்தும் ஸ்டாலின்!

*சென்னை, மே 08*

தேசிய அரசியலில் தமிழ்நாடு முதல்வர் ஸ்டாலினின் பங்களிப்பு இருக்கும் என்று தி. மு. க. கட்சியின் மூத்த தலைவர்கள் தொடர்ந்து பேசி வருகின்றனர்.

இந்நிலையில், தி.மு.கவின் மறைந்த தலைவர் கருணாநிதியின் பிறந்த நாளை, அடுத்த மாதம் சென்னையில் கொண்டாடத் திட்டமிடப்பட்டுள்ளது. இந்த நிகழ்வில் அனைத்து தலைவர்களுக்கும் அழைப்பு அனுப்பப்பட்டு வருகின்றது.

தி. மு. கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர்கள் அனைத்து மாநிலங்களுக்கும் சென்று அங்குள்ள எதிர்க்கட்சித் தலைவர்களுக்கு முதல்வரின் அழைப்பிதழ்களை வழங்கி வருகின்றனர்.

அந்தக் கட்சியின் மூத்த தலைவர்களுள் ஒருவரும் பாராளுமன்ற உறுப்பினருமான டி. ஆர். பாலு, எதிர்க்கட்சிகளின் மாநில முதல்வர்களை சந்தித்து அழைப்பிதழ் வழங்கியுள்ளார் என்று அறிய வருகின்றது. இந்த விழாவில், பீஹார் முதல்வர் நிதிஷ் குமார், லாலுவின் மகனும் பீஹாரின் துணை முதல்வருமான தேஜஸ்வி யாதவ், மேற்கு வங்க முதல்வர் மம்தா பனர்ஜி ஆகியோர் வருகை தர வாய்ப்புள்ளது.



காங்கிரஸ் கட்சியின் சார்பாக ராகுல் பங்கேற்பாரா அல்லது வேறு தலைவர்கள் வருவரா என்பது இன்னும் முடிவு செய்யப்படவில்லை. விழா நன்றாக நடக்க வேண்டும். இது, எதிர்க்கட்சிகளின் சங்கமமாக இருக்க வேண்டும் என ஸ்டாலின் விரும்புகிறார் என்று அவருக்கு நெருக்கமான வட்டாரங்கள் தெரிவித்தன.

அடுத்த ஆண்டு நடக்கவுள்ள பாராளுமன்ற தேர்தலுக்கு முன்னதாக இந்த ஒற்றுமை தேவை என்பதால், அனைத்து எதிர்க் கட்சித் தலைவர்களும் முதல்வர்களும் இந்த விழாவில் பங்கேற்கும் வகையில் ஸ்டாலின் விரிவான ஏற்பாடுகளை முன்னின்று கவனித்து வருகிறார் என்றும் தெரிய வருகின்றது.

(ஐ)

# இலங்கைக்கு கடத்தவிருந்த கஞ்சா இராமேஸ்வரத்தில் மீட்பு!

*இராமேஸ்வரம், மே 08*

இலங்கைக்கு கடத்தப்படவிருந்த 158 கிலோ கஞ்சா இராமநாதபுரம் - இராமேஸ்வரத்தில் மீட்கப்பட்டுள்ளது.

சம்பவம் தொடர்பில் தெரியவருவதாவது,

இராமேஸ்வரம் தேவஸ்தானத்தில் வாகன தரிப்பிடத்தில் கார் ஒன்று மர்மமான முறையில் நிறுத்தி வைக்கப்பட்டுள்ளதாக மத்திய புலனாய்வு பிரிவுக்கு இரகசிய தகவல் கிடைத்துள்ளது.

இதனையடுத்து வாகன தரிப்பிடத்தில் காரை எடுக்க யாரேனும் வருவார்களா எனப் பொலிஸார் எதிர்பார்த்து காத்திருந்தனர்.

இந்நிலையில் வெகு நேரமாகியும் காரைத் தேடி யாரும் வராததால் சந்தேகமடைந்த பொலிஸார் காரை மண்டபம் காவல் நிலையத்துக்கு கொண்டு சென்று பரிசோதித்த போது கார் முழுவதும் இலங்கைக்கு கடத்துவதற்காக பொதி செய்யப்பட்டு சுமார் 158 கிலோ கஞ்சா பொதிகளை பொலிஸார் மீட்கப்பட்டுள்ளனர்.

பொலிஸார் சி. சி. ரீ. வி. கமெராக்களை ஆய்வு செய்து குற்றவாளியை கண்டுபிடிக்க தீவிரமாக தேடி வருகின்றனர்.

மேலும் காரில் கடத்திவரப்பட்ட கஞ்சாவின் மதிப்பு சுமார் 2 கோடி ரூபாய் வரை இருக்கும் என பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

மேலும், மர்மமான முறையில் தரித்து நின்ற காரின் உள்ளே வெடிகுண்டு இருப்பதாக பரபரப்பு ஏற்பட்டு வந்த நிலையில் பொலிஸார் காரை உடைத்து பொதுமக்களின் அச்சத்தை போக்கியதோடு, வதந்திகளுக்கும் முற்றுப்புள்ளி வைத்தனர்.

# ஆளுநர் பதவிக்கு ரவி தகுதியே இல்லாதவர்!

## வைகோ சாடல்



*சென்னை, மே 08*

ஆளுநர் பதவிக்கு ஆர். என். ரவி தகுதி இல்லாதவர் அவர் பா. ஜ. கவுக்குத்தான் வேலை செய்து கொண்டிருக்கிறார் என்று ம. தி. மு. க. பொதுச் செயலாளர் வைகோ தெரிவித்துள்ளார்.

மறுமலர்ச்சி திராவிட முன்னேற்றக் கழகத்தின் 30ஆம் ஆண்டு தொடக்க விழா சென்னையில் நடைபெற்றது. இதிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

“ஆளுநர் பதவிக்கு தகுதி இல்லாதவர் ஆர். என். ரவி. அவர் பா. ஜ. கவுக்குத்தான் வேலை செய்து கொண்டிருக்கிறார். ராஜ் பவனில் இருந்து கொண்டு என்ன பேசுவது என்று தெரியாமல் உளறிக் கொண்டு கொண்டிருக்கிறார்.

காலாவதியாகி போன ஒரு மனிதர் தமிழ்நாட்டில் வந்து குழப்பம் செய்து கொண்டிருக்கிறார். மூன்று பெரிய தலைவர்கள் எத்தனையோ சோதனைகள் கடந்து வளர்ந்த வரலாறு தெரியாமல் ஆளுநர் உளறிக் கொண்டிருக்கிறார். தற்போது காலாவதியாகிப்போன அவர் காலாவதி பற்றி பேசுகிறார்.

இதுவரை இருந்த ஆட்சிகளிலே இது சிறப்புமிக்க ஆட்சியாக தி. மு. க. அரசின் இரண்டாண்டு ஆட்சி இருக்கிறது. அனைத்து தரப்பு மக்களுடைய ஆவலை பூர்த்தி செய்கின்ற ஆட்சியாக ஸ்டாலின் தலைமையில் வெற்றிகரமான ஆட்சியாக திராவிட மொடல் ஆட்சி நடைபெற்று வருகிறது.

ஆளுநர் ராஜ்பவனை விட்டு வெளியேற்றப்பட வேண்டியவர். இந்த பதவிக்கு லாயக்கற்றவர். அவர் இந்த பதவியை இராஜினாமா செய்ய வேண்டும் அல்லது மத்திய அரசு அவரை இந்த பதவியில் இருந்து நீக்க வேண்டும். திராவிட மொடல் என்று சொன்னாலே ஆளுநருக்கு அச்சமும் ஏற்பட்டுள்ளது. கூச்சமின்றி என்ன பேசுகிறோம் என்று தெரியாமலேயே ஆளுநர் உளறிக் கொண்டிருக்கிறார் - என்றார்.

(ஐ)

# தையிட்டி விகாரையை அகற்றவே மாட்டோம்!

## படைகளின் பிரதானி சவேந்திர சில்வா



கொழும்பு, மே 08

"தையிட்டியில் இராணுவத்தினரின் வழிபாட்டுக்காக அமைக்கப்பட்டுள்ள விகாரையை ஒருபோதும் அகற்றமாட்டோம் என படைகளின் பிரதானி ஜெனரல் சவேந்திர சில்வா தெரிவித்துள்ளார்.

தையிட்டியில் பொதுமக்களின் காணியில் அடாத்தாக அமைக்கப்பட்டுள்ள விகாரையை அகற்றக்கோரியும், காணிகளை விடுவிக்க கோரியும் மக்கள் பிரதிநிதிகளாலும், மக்களாலும் மூன்று நாட்களாக போராட்டம் நடைபெற்றது. இது தொடர்பில் அவரிடம் தென்னிலங்கை ஊடகம் ஒன்று அவரிடம் வினவியது. இதன் போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அத்துடன், "தையிட்டியில் அமைக்கப்பட்டுள்ள திஸ்ஸ விகாரை அரசாங்கத்தின் முழுமையான அனுமதியுடன் இராணுவத்தினரின் வழிபாட்டுக்காக அமைக்கப்பட்டுள்ளது.

இனவாத, மதவாத கண்ணோட்டதுடன் இதனை நோக்குவதை தமிழ்க் கட்சிகளும் அவர்களின் ஆதரவாளர்களும் நிறுத்த வேண்டும். இந்த விகாரை சட்ட விரோதமானது அல்ல. அமைக்கப்பட்ட இந்த விகாரை எந்தக் காரணத்துக்காகவும் அகற்றப்படாது." - என்றார். (ஐ)

# கிளிநொச்சி விபத்தில் ஒருவர் படுகாயம்!



கிளிநொச்சி, மே 08

கிளிநொச்சி ஏ-09 வீதியில் நேற்று ஞாயிற்றுக் கிழமை இடம்பெற்ற வீதி விபத்தில் ஒருவர் படுகாயமடைந்து கிளிநொச்சி மாவட்ட பொது மருத்துவ மனையில் சேர்க்கப்பட்டுள்ளார்.

கிளிநொச்சி நகரில் இருந்து பரந்தன் நோக்கி பயணித்துக் கொண்டிருந்த பட்டா ரக வாகனம் ஒன்று சமிக்ஞை எதுவுமின்றி திடீரென திருப்பியபோது பின்னால் வந்த மோட்டார் சைக்கிள் அதனுடன், மோதி விபத்துக்குள்ளானது.

இந்த விபத்தின் போது மோட்டார் சைக்கிளில் பயணித்தவர் படுகாயமடைந்த நிலையில் கிளிநொச்சி மாவட்ட பொது மருத்துமவனையில் சேர்க்கப்பட்டார். (ஐ)

# இன்புளுவன்ஸா பரவல் தீவிரம் வீட்டிலும் முகக்கவசம் அணியுங்கள்

## மருத்துவர் தீபால் பெரேரா அறிவுறுத்து

கொழும்பு, மே 08

நாட்டில் இன்புளுவன்ஸா வைரஸ் பரவும் நிலை அதிகரித்துள்ளது. இதனால், குடும்ப உறுப்பினர்கள் அல்லது நெருக்கமானவர்கள் யாருக்காவது காய்ச்சல் இருந்தால் அது தொடர்பில் அவதானமாக இருக்கவேண்டும். அவர்கள் வீட்டுக்குள்ளேயே முகக்கவசம் அணிந்திருப்பது பாதுகாப்பானதாகும் என்று கொழும்பு சீமாட்டி சிறுவர் மருத்துவ மனையின் சிறுவர் நோய் தொடர்பான விசேட மருத்துவ நிபுணர் தீபால் பெரேரா தெரிவித்தார்.

நாட்டில் நிலவிவரும் சீரற்ற காலநிலையை தொடர்ந்து பரவிவரும் வைரஸ் காய்ச்சல் தொடர்பாகக் கருத்து தெரிவிக்கையிலேயே இவ்வாறு குறிப்பிட்டார். இது குறித்து அவர் தொடர்ந்து தெரிவிக்கையில்,

நாட்டில் இந்த காலப் பகுதியில் டெங்கு நோய் மற்றும் இன்புளுவன்ஸா வைரஸ் காய்ச்சல் பரவி வருகிறது. மழையுடனான காலநிலையுடன் டெங்கு நோயாளர்களின் அதிகரிப்பை நாங்கள் எதிர்பார்க்கிறோம். தற்போது டெங்கு நோய் அதிகரித்து வருகிறது.

டெங்கு நோய் அறிகுறிகளாக இரண்டு தினங்களுக்கு கடினமான காய்ச்சல், இருமல், தொண்டை வலி, உடல் வலி, தலைவலி போன்ற அடையாளங்களையே காண்கிறோம். இரண்டு தினங்களுக்கு அதிக நாட்கள் காய்ச்சல் இருந்தால் டெங்கு பரிசோதனை செய்துகொள்ள வேண்டும்.

இதேபோன்று இன்புளுவன்ஸா நோயும் அதிகரித்துச் செல்கிறது. அதன் அறிகுறிகளாக காய்ச்சலும் இருமல், தடிமல், ஒரு சிலருக்கு வாந்தி ஏற்படுவது போன்ற அறிகுறிகளை காணலாம். இந்த நோயுடைய சில சிறுவர்கள் மயக்கமடைந்து விழுவார்கள். அதேநேரம் வீடுகளில் மிக விரைவாக இந்த நோய் பரவுவதாக கண்டால், அது இன்புளுவன்ஸா வைரஸாகும்.

இவ்வாறான நோய் அறிகுறி இருப்பவர்கள் முகக்கவசம் அணிந்துகொள்ள வேண்டும். அதிக மக்கள் நடமாடும் இடங்களுக்குச் செல்வதை தவிர்த்துக்கொள்ள வேண்டும். அத்துடன், இந்த நோய் அறிகுறி இருக்கும் பிள்ளைகளை பாடசாலைகளுக்கு அனுப்ப வேண்டாம். அவர்களை முடியுமான வரையில் ஓய்வாக இருக்கச்செய்ய வேண்டும் - என்றார். (ஐ)

# 3 மணி நேரத்தில் திருநெல்வேலியில் 39.9 மி. மீற்றர் மழைவீழ்ச்சி பதிவானது

யாழ்ப்பாணம், மே 08

திருநெல்வேலியில் நேற்று முன்தினம் காலை 08.30 மணி தொடக்கம் 11.30 மணி வரையான மூன்று மணித்தியால காலப்பகுதியில் 39.9 மில்லி மீற்றர் மழைவீழ்ச்சி பதிவானதாக யாழ். மாவட்ட வானிலை அவதான நிலையத்தின் அதிகாரி ரி. பிரதீபன் தெரிவித்துள்ளார்.

நற்று ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கும் போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

நேற்று முன்தினம் காலை 08.30 மணியிலிருந்து நேற்று காலை 08.30 மணிவரையான காலப் பகுதியில் அச்சுவேலி பகுதியில் 8.4 மில்லிமீற்றர் மழைவீழ்ச்சியும், பருத்தித்துறை பகுதியில் 0.6 மில்லிமீற்றர் மழைவீழ்ச்சியும், கிளிநொச்சி பகுதியில் 0.9 மில்லிமீற்றர் மழைவீழ்ச்சியும், ஆனையிறவு பகுதியில் 1.0 மில்லிமீற்றர் மழைவீழ்ச்சியும் மற்றும் தெல்லிப்பழை பகுதியில் 3.5 மில்லிமீற்றர் மழைவீழ்ச்சியும் பதிவாகின.

நேற்றுமுன்தினம் பெரும்பாலான பகுதிகள் முகில் மூட்டத்துடன் காணப்பட்டதை அவதானிக்க முடிந்தது. நாட்டை சூழவுள்ள கடற்பரப்புகளின் வானிலையை பொறுத்த மட்டில், அடுத்த சில நாட்களில் தென்கிழக்கு வங்களா விரிகுடாவின் கடல்பரப்புக்கு மேலாக ஓர் கீழ் வளிமண்டல தளம்பல் நிலை விருத்தியடையக்கூடிய சாத்தியம் காணப்படுகின்றது.

அத்துடன், நாட்டை சூழவுள்ள கடற்பரப்புகளில், காற்றானது தென்மேற்கு திசையில் வீசக்கூடுவதுடன் காற்றின் வேகமானது மணித்தியாலத்திற்கு 20-30 கிலோமீற்றர் வேகத்தில் காணப்படும்.

ஆகையால், கடலில் பயணம் செய்வோரையும் மீனவ சமூகத்தினரையும் இது குறித்து வளிமண்டல திணைக்களம் விடுக்கின்ற ஆலோசனைகளை கருத்தில்கொண்டு செயல்படுமாறு வேண்டப்படுகின்றனர்.

இன்று திங்கட்கிழமை மேல், சப்ரகமுவ, வடமேல் மற்றும் தென் மாகாணங்களிலும் கண்டி மற்றும் நுவரெலியா மாவட்டங்களிலும் அவ்வப்போது மழை பல தடவைகள் பெய்யுமென எதிர்பார்க்கப்பட்டுள்ளது.

வடக்கு, கிழக்கு மற்றும் ஊவா மாகாணங்களிலும் பொலநறுவை மாவட்டத்திலும் பல இடங்களில் பிற்பகலில் அல்லது மழை அல்லது இடியுடன் கூடிய மழை பெய்வதற்கான வாய்ப்புள்ளது.

மேற்கு மற்றும் தெற்கு கரையோர பிரதேசங்களில் அவ்வப்போது மணித்தியாலத்திற்கு 40-50 கிலோமீற்றர் வரையான வேகத்தில் காற்றின் வேகம் அதிகரிக்க கூடும்.

இடியுடன் கூடிய மழை பெய்யும் வேளைகளில் அப்பிரதேசங்களில் தற்காலிகமாக பலத்த காற்று வீசக்கூடும்.

எனவே இடி, மின்னல் தாக்கங்களிலிருந்து ஏற்படக்கூடிய இழப்புகளை குறைத்து கொள்வதற்காக முன்னேற்பாட்டு நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு பொதுமக்கள் அறிவுறுத்தப்படுகின்றனர் எனவும் தெரிவித்தார்.

# உள்ளூராட்சி எல்லை நிர்ணயகுழுவின் இறுதி அறிக்கை இந்தமாத இறுதியில்!

## மகிந்த தேசப்பிரிய



கொழும்பு, மே 08

தமது இடைக்கால அறிக்கை தொடர்பில் பல்வேறு தரப்பினரிடமும் இருந்து தற்போதுவரையில் 400இற்கும் மேற்பட்ட யோசனைகள் கிடைக்கப்பெற்றுள்ளன என்று உள்ளூராட்சி மன்ற எல்லை நிர்ணயக்குழு தெரிவித்துள்ளது.

இந்த யோசனைகள் தொடர்பான தமது பதில்களை விரைவில் பெற்றுக்கொடுக்க எதிர்பார்த்துள்ளதாக உள்ளூராட்சி மன்ற எல்லை நிர்ணயக்குழுவின் தலைவர் மகிந்த தேசப்பிரிய குறிப்பிட்டுள்ளார்.


உள்ளூராட்சி மன்ற எல்லை நிர்ணயக்குழுவின் இடைக்கால அறிக்கை கடந்த 11ஆம் திகதி பிரதமர் தினேஷ் குணவர்த்தனவிடம் கையளிக்கப்பட்டது.

அரசியல் கட்சி உறுப்பினர்கள், சிவில் செயல்பாட்டாளர்கள், இது தொடர்பில் கூடிய கவனம் செலுத்தும் பொதுமக்கள், தமது யோசனைகளை முன்வைக்க முடியும் என வழங்கப்பட்ட காலஅவகாசம் கடந்த 27ஆம் திகதியுடன் முடிவடைந்தது.

இவ்வாறு முன்வைக்கப்படும் யோசனைகள் ஆராயப்பட்டு, அதில் உள்ள காரணிகள் இறுதி அறிக்கையில் சேர்க்கப்படுமென உள்ளூராட்சி மன்ற எல்லை நிர்ணயக்குழு குறிப்பிட்டுள்ளது.

இதேவேளை, உள்ளூராட்சி மன்ற எல்லை நிர்ணயக்குழுவின் இறுதி அறிக்கை மே மூன்றாம் வாரத்தில் இறுதி செய்யப்பட்டு கையளிக்கப்படுமென அதன் தலைவர் மகிந்த தேசப்பிரிய தெரிவித்துள்ளார்.

உள்ளூராட்சி மன்ற உறுப்பினர்களின் எண்ணிக்கையை 4000ஆக குறைக்கும் நோக்கில் இந்த எல்லை நிர்ணய நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ஐ)



# வீதியில் மரம் வீழ்ந்ததால் போக்குவரத்து பாதிப்பு!

யாழ்ப்பாணம், மே 08

கொக்குவில் பிறவுண் வீதியில் அமைந்துள்ள தொழிநுட்பக் கல்லூரிக்கு முன்பாக நின்ற மரம் சாய்ந்து வீதிக்கு குறுக்கே வீழ்ந்ததில் நேற்று நெடுநேரம் போக்குவரத்து தடைப்பட்டிருந்தது.

நேற்று முன்தினம் பெய்த காற்றுடன் கூடிய கனமழை காரணமாக இந்த மரம் வேரோடு பெயர்ந்து வீழ்ந்தது.

மரம் வீழ்ந்ததால் மூன்று மின்கம்பங்கள் முறிவடைந்தன. அத்துடன், தொழிநுட்பக் கல்லூரிக்கு முன்பாக உள்ள கடை ஒன்றும் பகுதியளவில் சேதமடைந்தது.

நேற்றைய தினம் இந்த மரம் வெட்டியகற்றப்பட்டது. (ஐ)

# அதிவேக வீதியில் விபத்து; சிறுமி உட்பட ஐவர் காயம்!

கொழும்பு, மே 08

தெற்கு அதிவேக நெடுஞ்சாலையின் வெளிவெல்கொல பிரதேசத்தில் நேற்று பகல் இடம்பெற்ற வான் - கார் விபத்தில் சிறுமி உட்பட ஐந்து பேர் காயமடைந்தனர் என்று தெற்கு நெடுஞ்சாலை போக்குவரத்து பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இந்த விபத்தில் காயமடைந்தவர்களில் ஓர் ஆண், 3 பெண்கள் மற்றும் ஒரு சிறுமி அடங்குவார் என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

காயமடைந்தவர்கள் ஒரே குடும்பத்தை சேர்ந்தவர்களாவர். இவர்கள், மாத்தறை பிரதேசத்தில் நடைபெற்ற திருமண நிகழ்வில் கலந்துகொண்ட பின்னர் வானில் அத்தனகல்லை பிரதேசத்துக்கு திரும்பிக் கொண்டிருந்தபோது மாத்தறையிலிருந்து கொழும்பு நோக்கி பயணித்த காரொன்று வானின் பின்பகுதியில் மோதியதாகக் கூறப்படுகின்றது.

இதில், வான் சுழன்று இரும்பு வேலியுடன் மோதுண்டு விபத்துக்கு உள்ளானதாகக் கூறப்படுகின்றது. (ஐ)

# ஐஸ் போதைப்பொருளுடன் இருவர் மன்னாரில் கைது!

மன்னார், மே 08

**மன்னாரில் ஒரு கோடியே 20 இலட்சம் ரூபாய் பெறுமதியான ஐஸ் போதைப் பொருளுடன் இரு சந்தேகநபர்களை இராணுவ புலனாய்வு பிரிவினர் கைது செய்துள்ளனர்.**

அத்துடன், இந்தக் கடத்தலுக்கு பயன்படுத்தப்பட்ட காரும் கைப்பற்றப்பட்டதாகப் பொலிஸார் தெரிவித்தனர்.

மன்னார் - மதவாச்சி வீதியில் குஞ்சுக்குளம் பகுதியில் வைத்து இந்த சந்தேகநபர்கள் கைது செய்யப்பட்டனர்.

தள்ளாடி இராணுவ புலனாய்வுப் பிரிவினருக்கு கிடைத்த இரகசிய தகவலின்பேரில் குறித்த காரை பின்தொடர்ந்து சென்ற புலனாய்வாளர்கள் காரை குஞ்சுக்குளம் பகுதியில் வழிமறித்து சோதனைக்கு உட்படுத்தினர்.

இதன்போது, காருக்குள் சூட்சுமமாக மறைத்து வைத்திருந்த ஐஸ் போதைப் பொருள் கைப்பற்றப்பட்டது. கைப்பற்றப்பட்ட போதைப் பொருளின் பெறுமதி ஒரு கோடியே 20 இலட்சம் ரூபாய் என்று தெரிவிக்கப்பட்டது.





இந்தச் சம்பவம் தொடர்பில் கல்பிட்டியை சேர்ந்த 38 வயது நபரும், மன்னார் - அடம்பனை சேர்ந்த 27 வயது நபருமே கைது செய்யப்பட்டனர். இவர்கள் மேலதிக விசாரணைக்காக மன்னார் பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளனர். (ஐ)

# கோதுமை மாவுக்கான இறக்குமதி வரி நீக்கம்!

கொழும்பு, மே 08

கோதுமை மாவுக்கான இறக்குமதி வரி விலக்கு உடனடியாக அமுலுக்கு வரும் வகையில் திரும்பப் பெறப்பட்டுள்ளது என்று நிதி இராஜாங்க அமைச்சர் ரஞ்சித் சியம்பலாபிட்டிய தெரிவித்துள்ளார்.

கடந்த 2020 ஜனவரியில் கோதுமை மா மாவுக்கான சுங்க இறக்குமதி வரி கிலோவுக்கு 3 ரூபாயால் குறைக்கப்பட்டுள்ளதாக அவர் தெரிவித்தார். இந்த நிலையில், புதிதாக எடுக்கப்பட்டுள்ள முடிவை நிதி, பொருளாதார உறுதிப்படுத்தல் மற்றும் தேசிய கொள்கைகள் அமைச்சு சுங்க திணைக்களத்துக்கு அறிவித்துள்ளது.

2019 டிசெம்பரில் அப்போதைய அரசாங்கம் ஆட்சிக்கு வந்த சிறிது காலத்திலேயே இறக்குமதி செய்யப்படும் ஒரு கிலோ கோதுமை மாவுக்கு நடைமுறையில் இருந்த 36 ரூபாய் என்ற ஒருங்கிணைந்த வரியை, வர்த்தமானி அறிவிப்பின் மூலம் ஒரு கிலோவுக்கு 8 ரூபாய் என்ற விசேட பண்ட வரியாக மாற்றியது.

இதன் காரணமாக பல கோடி ரூபா வருமானம் திறைசேரிக்கு கிடைக்கவில்லை என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

எவ்வாறாயினும், இந்த வரி விலக்கு நீக்கப்பட்டதையடுத்து, கோதுமை மாவின் விலை அதிகரிக்கலாம் என சந்தை தகவல்கள் தெரிவிக்கின்றன. (ஐ)



# கெப் தடம்புரண்டதில் சாரதி படுகாயம்!

மன்னார்,

தள்ளாடி பாலத்துக்கு அண்மையாக கெப் ரக வாகனம் தடம் புரரண்டு விபத்துக்கு உள்ளானதில் அதன் சாரதி படுகாயமடைந்துள்ளார்.

மன்னார், சிலாவத்துறை, வேப்பங்குளம் பகுதியிலிருந்து கடலுணவை ஏற்றிவந்த வாகனமே இவ்வாறு விபத்துக்கு உள்ளானது. சாரதிக்கு ஏற்பட்ட நித்திரைக் கலக்கமே வாகனம் கற்களில் மோதுண்டு தடம்புரண்டதாக விசாரணைகளில் தெரிய வந்துள்ளது.

படுகாயமடைந்த வாகன சாரதி மன்னார் பொது மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளார்.

மூத்தவர்களின் பதவி ஆசையால்

# பொலிஸ் மா அதிபருக்கு மீண்டும் பதவி நீடிப்பு?

கொழும்பு, மே 08

மூத்த பொலிஸ் அதிகாரிகளின் பதவி ஆசையால் தற் போதைய பொலிஸ் மா அதிப ருக்கு மீண்டும் பதவி நீடிப்பு வழங்கப்பட்டுள்ளதாக கொழும்பு தகவல்கள் தெரிவிக்கின்றன.

கடந்த மார்ச் மாதம் 26ஆம் திகதி தொடக்கம் மூன்று மாத கால சேவை நீடிப்பு பெற்ற பொலிஸ் மா அதிபர் சி. டி. விக்கிரமரத்னவின் அதிகாரபூர்வ பதவிக்காலம் மேலும் ஒரு தவ ணைக்கு நீடிக்கப்படவுள்ளது.

பொலிஸ் மா அதிபருக்கு வழங்கப்பட்ட மூன்று மாத சேவை நீடிப்பு ஜூன் 26ஆம் திகதியுடன் முடிவடைகின்றது.

இந்தப் பதவிக்கு ஆசைப்படும் பல மூத்த பிரதிப் பொலிஸ் மா அதிபர்கள் தொடர்பான சட்ட சிக்கல்கள் தீர்க்கப்படாததால் அவரின் சேவை மீண்டும் ஒருமுறை நீட்டிக்கப்படவுள்ளது.

இதனால், பொலிஸ் மா அதி பருக்கு அடுத்த வருடம் வரை சேவை நீடிப்பு வழங்கப்படும் என்று தெரிய வருகின்றது. (ஐ-சி)

# எமக்கு ஏற்பட்ட சொத்து அழிவுகளுக்கு நீதி தேவை

## இராஜாங்க அமைச்சர் பிரசன்ன

கொழும்பு, மே 08

கடந்த வருடம் போராட்டக்காரர்களால் எமது சொத்துகளுக்கு ஏற்பட்ட அழிவுகளுக்காக எமக்கும் நீதி தேவை என்று நகர மற்றும் வீடமைப்பு அபிவிருத்தி அமைச்சர் பிரசன்ன ரணதுங்க தெரிவித்துள்ளார்.

அவர் அளித்துள்ள நேர்காணல் ஒன்றிலேயே இந்த விடயத்தைத் தெரிவித்துள்ளார்.

போராட்ட நாளில் அழிக்கப்பட்ட எனதும் மற்றவர்களினதும் சொத்துகளுக்கு எனக்கும் மற்றவர்களுக்கும் நீதி வழங்குவதற்கு முழு அதிகாரம் கொண்ட சிறப்பு ஜனாதிபதி ஆணைக்குழு ஒன்று நியமிக்கப்படல் வேண்டும்.

இது தொடர்பாக சம்பவத்தை முழுமையாக விசாரித்து குற்றவாளிகளை தண்டிக்கும் திறனை ஆணைக்குழு கொண்டிருக்க வேண்டும். நான் உட்பட அநீதி இழைக்கப்பட்ட எவருக்கும் நீதி கிடைக்காததால்தான் ஜனாதிபதி ஆணைக்குழுவை நியமிக்க கோருகிறேன் - என்றும் இதன்போது அவர் குறிப்பிட்டார். (ஐ)

# இளைஞருடன் விடுதியில் தங்கிய 16 வயது சிறுமி சடலமாக மீட்பு!

கொழும்பு, மே 08

களுத்துறை தெற்கு - காலி வீதியில் உள்ள விடுதி ஒன்றின் பின்புறம் உள்ள தொடருந்து பாதைக்கு அருகில் சிறுமி ஒருவரின் சடலம் கண்டெடுக்கப்பட்டது.

உயிரிழந்தவர் களுத்துறை - நாகொடை பிரதேசத்தை சேர்ந்த 16 வயது சிறுமி என்று அடையாளம் காணப்பட்டுள்ளார்.

உயிரிழந்தவரும் வேறொரு பெண்ணும் இரு ஆண்களும் விடுதி ஒன்றில் இரு அறைகளை எடுத்து தனியாக தங்கியிருந்துள்ளனர்.

பக்கத்து அறையில் தங்கியிருந்த பெண்ணும் ஒரு ஆணும் விடுதியை விட்டு முதலில்வெளியேறினர். இதன் பின்னர் சடலமாக மீட்கப்பட்ட சிறுமியுடன் தங்கியிருந்த மற்றைய இளைஞரும் வெளியேறியுள்ளார் என்று பொலிஸாரின் முதற்கட்ட விசாரணையில் தெரியவந்துள்ளது.

இதன் பின்னர், விடுதிக்கு பின்னால் உள்ள தொடருந்து பாதைக்கு அருகில் சடலம் கண்டெடுக்கப்பட்டதாக பொலிஸார் மேலும் தெரிவித்தனர்.

இந்தச் சம்பவம் தொடர்பில், மற்றோர் அறையில் தங்கியிருந்த ஆணும் பெண்ணும் கைது செய்யப்பட்டுள்ளனர். சிறுமியுடன் தங்கியிருந்த இளைஞரை பொலிஸார் தேடி வருகின்றனர். (ஐ)

# இராஜாங்க அமைச்சரின் குழு தாக்கியதால் ஆடை தொழிற்சாலை மூடப்படுகின்றது!

கொழும்பு, மே 08

கம்பஹா மாவட்டத்தில் இராஜாங்க அமைச்சர் ஒருவரின் கும்பலால் தாக்கப்பட்ட ஆடைத் தொழிற்சாலை இழுத்து மூடப்படுகிறது. இதனால் அங்கே பணி புரிந்தோர் நிர்க்கதியாகும் நிலைக்கு உள்ளாகியுள்ளனர் என்று அங்கிருந்து கிடைக்கும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

கட்டானை அல் ஒபெய்டன் ஆடை தொழிற்சாலை அண்மையில் கம்பஹா மாவட்டத்தை பிரதிநிதித்துவப்படுத்தும் இராஜாங்க அமைச்சர் ஒருவரின் கும்பலால் தாக்கப்பட்டது.

இதையடுத்து, அந்த ஆடை தொழிற்சாலையின் உரிமையாளர் தொழிற்சாலையை அகற்றும் நடவடிக்கையை முன்னெடுத்துள்ளார். கடந்த 4ஆம் திகதி முதல் இதற்கான பணிகள் இடம்பெறு வருகின்றன என்று கூறப்படுகின்றது.

தொழிற்சாலையை அகற்றுவதற்கு எதிர்ப்புத் தெரிவித்து அதன் பணியாளர்கள் குழு அண்மையில் எதிர்ப்பு நடவடிக்கையில் ஈடுபட்டது.

தொழிற்சாலையில் இருந்து பொருட்களை வெளியே எடுத்துச் செல்ல முடியாதவாறு அவர்கள் தடுத்தனர். எனினும், பொலிஸாரின் தலையீட்டால் போராட்டக்காரர்கள் அங்கிருந்து விலத்தப்பட்டு, தொழிற்சாலை பொருட்கள் ஓமானுக்கு ஏற்றப்பட்டன.

முன்னதாக, கடந்த மார்ச் மாதம் 30 ஆம் திகதி இரவு இராஜாங்க அமைச்சரின் ஆதரவாளர்கள் எனக் கூறிய சிலர் தொழிற்சாலை உரிமையாளரையும் பாதுகாப்பு உத்தியோகத்தரையும் கடுமையாகத் தாக்கியிருந்தனர். அத்துடன், சொத்துகளையும் சேதப்படுத்தியிருந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ-சி)

# நாட்டின் நெருக்கடி, வறுமை இரட்டிப்பாக அதிகரித்துள்ளன!

## உலக வங்கி எச்சரிக்கை

கொழும்பு, மே 08

**இலங்கையின் தற்போதைய பொருளாதார நெருக்கடி, வறுமை வீதம் 13.1 சதவீதத்தில் இருந்து 25 சதவீதமாக இரட்டிப்பாகியுள்ளதாக உலக வங்கி அறிவித்துள்ளது.**

அத்துடன், குடும்பங்களின் வாழ்வாதாரத்துக்கு ஏற்படும் பல அபாய நிலைமைகளால் அடுத்த சில வருடங்களில் இது 25 சதவீதத்திற்கு மேல் இருக்கும் என்று கணிக்கப்பட்டுள்ளதாக உலக வங்கி தெரிவித்துள்ளது.

பொருளாதார நெருக்கடியானது வறுமை குறைப்பு மற்றும் மனித மூலதன மேம்பாடு ஆகியவற்றில் பெரும் பின்னடைவுகளை ஏற்படுத்தியுள்ளது.

இந்தநிலையில், நாட்டின் பொருளாதாரம் இந்த ஆண்டும் அதற்கு அப்பாலும் குறிப்பிடத்தக்க சவால்களை எதிர்கொள்ளும் என்றும் உலக வங்கி கணித்துள்ளது.

இதன்படி நாட்டின் பொருளாதாரம் இந்த ஆண்டு 4.3 சதவீதம் சுருங்குகிறது.

எனவே, நாட்டின் வளர்ச்சி வாய்ப்புகள், நிதி ஒருங்கிணைப்பு மற்றும் கடன் மறுசீரமைப்பின் முன்னேற்றத்திலேயே தங்கியுள்ளது.

அதுவே வலுவான மற்றும் நெகிழ்வான பொருளாதாரத்தை கட்டியெழுப்ப ஒரு வாய்ப்பாகவும் அமையும் என்றும் உலக வங்கி குறிப்பிட்டுள்ளது. (ஐ)

# சீனாவிலிருந்து பொருட்கள் இறக்குமதியில் பெரும்வீழ்ச்சி!

கொழும்பு, மே 08

2023 ஜனவரி முதல் மார்ச் வரை இலங்கையில் இருந்து சீனாவின் இறக்குமதிகள் 93.74 மில்லியன் அமெரிக்க டொலர்களாகக் குறைந்துள்ளன.

சீனா 93.74 மில்லியன் அமெரிக்க டொலர் மதிப்புள்ள பொருட்களை இலங்கையிடமிருந்து இறக்குமதி செய்துள்ளதுடன் இது 3.9 சதவீத வீழ்ச்சியாகும்.

எனினும், சீனா 759.80 மில்லியன் அமெரிக்க டொலர் பெறுமதியான ஏற்றுமதிகளை குறித்த மூன்று மாதங்களில் இலங்கைக்கு மேற்கொண்டுள்ளது.

இதில் மோட்டார் வாகன உதிரிப்பாகங்கள் மற்றும் மின்சார பொருட்களும் அடங்குகின்றன. சீனாவுடனான இந்த ஏற்றத்தாழ்வு பல ஆண்டுகளாக நிலவுகின்றபோதும் இன்னும் அது நிவர்த்திக்கப்படவில்லை.

அதேநேரம், சீனாவின் இந்த வர்த்தக உறவுடன் ஒப்பிடும்போது, அமெரிக்கா ஐரோப்பிய ஒன்றியம், இலங்கையின் மிகப்பெரிய இருதரப்பு வர்த்தக பங்காளியாக உள்ளது 2020-2021 ஆம் ஆண்டில், சீனாவின் ஏற்றுமதி சந்தையில் இலங்கையின் பங்கு வெறும் 2.19 சதவீதமாக இருந்தது, எனினும் அமெரிக்காவுக்கான ஏற்றுமதி 24.5 சதவீதமாக இருந்தது.

# துப்பாக்கியுடன் வெளியேறிய பாதுகாப்பு அதிகாரி கைது!

கொழும்பு, மே 08

சென்னை நோக்கி புறப்படவிருந்த விமானம் ஒன்றின் பாதுகாப்பு அதிகாரி ஒருவர் (ஸ்கை மார்ஷல்) துப்பாக்கியுடன் கட்டுநாயக்கா விமான நிலையத்தின் போக்குவரத்துப் பயணிகள் முனையத்துக்கு வந்தபோது பாதுகாப்பு அதிகாரிகளால் அவரின் துப்பாக்கி கைப்பற்றப்பட்டது.

இதன் காரணமாக விமானம் சுமார் நான்கு மணி நேரம் தாமதமாகப் புறப்பட்டதாக விமான நிலைய வட்டாரங்கள் தெரிவித்தன.

ஒவ்வொரு விமானத்திலும் விமானம், பயணிகள் மற்றும் பணியாளர்களின் பாதுகாப்புக்காக ஒரு பாதுகாப்பு அதிகாரி நியமிக்கப்பட்டுள்ளார்.

இந்நிலையில், அவருக்கு வழங்கப்பட்டுள்ள துப்பாக்கியை பாதுகாப்பு அதிகாரி தனது விமானத்திலிருந்து வெளியே கொண்டுவருவது தடை செய்யப்பட்டுள்ளது.

பாதுகாப்பு அதிகாரி விமானத்தை விட்டு வெளியே செல்ல விரும்பினால், அவர் துப்பாக்கியை விமானத்தின் தலைமை விமானியிடம் ஒப்படைக்க வேண்டிய நிலையிலேயே இந்த அதிகாரி தனது துப்பாக்கியுடன் வெளியே வந்து மீளவும் உட்செல்ல முயன்றபோதே இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

# சமூகநல சட்டம் வெள்ளிக்கிழமை பாராளுமன்றில் சமர்ப்பிக்கப்படும்!

## நிதி இராஜாங்க அமைச்சர்

கொழும்பு, மே 08

நாட்டில் எதிர்வரும் 3 ஆண்டுகளுக்குள் குறைந்த வருமானம் பெறும் குடும்பங்களின் பொருளாதார நிலையை பலப்படுத்துவதற்கான திட்டங்களை நடைமுறைப்படுத்தக் கூடிய சமூக நலச்சட்டம் எதிர்வரும் வெள்ளிக்கிழமை பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படவுள்ளதாக நிதி இராஜாங்க அமைச்சர் ரஞ்சித் சியம்பலாபிட்டிய தெரிவித்தார்.

குறித்த சட்ட மூலம் தொடர்பில் அவர் மேலும் தெளிவுபடுத்துகையில் ,

, எதிர்வரும் வெள்ளிக்கிழமை சமூக நலச்சட்டம் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படவுள்ளது. இந்த சட்டத்தை நடைமுறைப்படுத்துவதன் ஊடாக சமூகத்தில் குறைந்த வருமானம் பெறும் குடும்பங்களின் எண்ணிக்கையைக் குறைக்க முடியும். அத்தோடு அரசாங்கத்தினால் அறிமுகப்படுத்தப்பட்டுள்ள சமூக நலத்திட்டங்களில் உள்வாங்கப்படுவதற்கு பொருத்தமானவர்களும் இதன் ஊடாக தெரிவு செய்யப்படுவர்.

இதேபோன்று எவரேனுமொருவர் இதனைப் பெற தகுதியுடையவராக இருந்தும், அவருக்கு அவை கிடைக்கப் பெறாவிட்டால் மேன்முறையீடு செய்து தமது உரிமைகளைப் பெற்றுக்கொள்ளக் கூடிய வாய்ப்பும் இதில் காணப்படுகிறது. 1945ஆம் ஆண்டு முதல் நாட்டில் சமூக நலத்திட்டங்கள் நடைமுறைப்படுத்தப்பட்டு வருகின்றன. அவ்வாறிருந்தும் தற்போது நாட்டிலுள்ள மொத்த குடும்பங்களில் 50 சதவீதமானோர் இவற்றை எதிர்பார்த்துள்ளனர்.

எனவே, தற்போது அறிமுகப்படுத்தப்பட்டுள்ள சமூக நலத்திட்டங்களை குறிப்பிட்டவொரு காலப் பகுதியில் மாத்திரம் நடைமுறைப்படுத்தி , குறைந்த வருமானம் பெறும் குடும்பங்களின் பொருளாதாரத்தை பலப்படுத்துவதே இதன் இலக்காகும். மிகக் குறைந்த வருமானம் பெறும் குடும்பங்களுக்கு 15ஆயிரம் ரூபாயும் அதற்கு அடுத்த கட்டத்திலுள்ள குடும்பங்களுக்கு 8 ஆயிரத்து 500 ரூபாயும் வழங்கப்படும்.

இந்த நலன்புரி தொகையைப் பெறும் குடும்பங்களை 3 ஆண்டுகளுக்குள் அரசாங்கத்திடமிருந்து உதவிகளை எதிர்பார்க்காத குடும்பங்களாக மாற்றுவதே அரசாங்கத்தின் நோக்கமாகும் - என்றார்.

# மாணவன் செலுத்திய ஜீப்பால் விபத்துகள்!

கொழும்பு, மே 08

பம்பலப்பிட்டி கடற்கரை வீதியில் 18 வயது மாணவன் செலுத்திய சொகுசு ஜீப் இரண்டு கார்கள் மற்றும் மின் கம்பத்துடன் மோதி விபத்தை ஏற்படுத்தியது என்று பம்பலப்பிட்டி பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

இந்தச் சம்பவம் கடந்த வெள்ளிக்கிழமை இடம்பெற்றுள்ளது.

இந்தப் பல்கலைக்கழக மாணவன் பாராளுமன்ற உறுப்பினர் ஒருவரின் மகன் என்ற உத்தியோகபூர்வமற்ற தகவல் கிடைத்துள்ளது.

இந்த விபத்தில் யாருக்கும் காயம் ஏற்படவில்லை. ஜீப்பை செலுத்திய மாணவன் அதிர்ச்சியடைந்த நிலையில் தனியார் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளார். (ஐ)

# கோவிட் தொற்றால் மூன்று பேர் மரணம்!

கொழும்பு, மே 08

கோவிட் தொற்றினால் கடந்த வெள்ளிக்கிழமை மூவர் உயிரிழந்தனர் என்று சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் விடுத்த செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டது.

இதேவேளை, நேற்று முன்தினம் 8 பேருக்கு புதிதாக கோவிட் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளதாக சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் தெரிவித்துள்ளார்.

அத்துடன், 13 பேருக்கு கொவிட் தொற்று உறுதி செய்யப்பட்டதாக சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகத்தின் அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஐ)

# கட்டணத்தை செலுத்தத் தவறின் நீர் விநியோகம் துண்டிக்கப்படும்!

## அரச நிறுவனங்களுக்கு எச்சரிக்கை

கொழும்பு, மே 08

கட்டணம் செலுத்தாத அரச நிறுவனங்களுக்கு எதிர்காலத்தில் தண்ணீர் விநியோகம் துண்டிக்கப்படும் என தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபை தெரிவித்துள்ளது.

மேலும், 90 நாட்களுக்குப் பின்னர் அரச நிறுவனங்களுக்கும் தாமதக் கட்டணம் அறிமுகப்படுத்தப்படும் என தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபையின் பிரதிப் பொது முகாமையாளர் பியல் பத்மநாத தெரிவித்துள்ளார்.

இலங்கையில் மொத்த தண்ணீர் நுகர்வோர் எண்ணிக்கை 29 இலட்சம் ஆகும்.

அந்த எண்ணிக்கையில் பெரும்பாலானோர் பொருளாதார நெருக்கடிகள் காரணமாக மாதாந்திர கட்டணத்தில் 50 வீதம் செலுத்துவதை வழக்கமாகக் கொண்டுள்ளனர் என்றும் அவர் மேலும் தெரிவித்தார். (ஐ)

# ஆற்றில் நீராடிய இரு சிறுவர்கள் பலி!

நுவரெலியா, மே 08

ஆற்றில் நீராடிய இரு சிறுவர்கள் மூழ்கி உயிரிழந்தனர்.

நுவரெலியா - மதுரட்டை - பதியபலல்ல பகுதியில் இடம்பெற்ற இந்த சம்பவத்தில், 12 மற்றும் 13 வயது சிறுவர்களே உயிரிழந்தனர்.

இருவரும் நீராடிய நிலையில் ஒருவர் நீரில் மூழ்கிக்கொண்டிருந்தபோது மற்றவர், அவரை காப்பாற்ற முற்பட்டபோதே இருவரும் நீரில் அடித்துச் செல்லப்பட்டனர் என்று தெரிய வருகின்றது.

கடந்த சில நாட்களாக பெய்துவரும் கனமழை காரணமாக ஆறு பெருக்கெடுத்திருந்தமையும் குறிப்பிடத்தக்கது. (ஐ)

# கொழும்பில் இன்று 10 மணிநேர நீர்வெட்டு

கொழும்பு, மே 08

நீர்க் குழாய் பராமரிப்பு பணிகள் காரணமாக இன்று திங்கட்கிழமை காலை 10 மணி முதல் இரவு 8 மணி வரை 10 மணித்தியாலங்களுக்கு தண்ணீர் விநியோகம் தடைப்படும் என்று தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபை அறிவித்துள்ளது.

கொழும்பின் கொலன்னாவை நகர சபை பகுதி, மொரகஸ்முல்ல, ராஜகிரிய, ஒபேசேகரபுர, பண்டாரநாயக்கபுர, அதுல் கோட்டே, நாவல, கொஸ்வத்தை ஆகிய பகுதிகளிலேயே இந்த நீர் வெட்டு நடைமுறைப்படுத்தப்படவுள்ளது. (ஐ)

ஈழநாடு



# தி. மு. கவின் தேசிய அரசியல் கனவு கானல் நீராகிறதா?

## கூட்டணி, சொந்தக் கட்சி பிரச்னைகளால் தடுமாற்றமா?



சிவகுமார் இராஜகுலம்

தமிழகத்தில் ஆளும்கட்சியான திமுகவின் அரசியலில் ஒரு மாத இடைவெளியில் மிகப்பெரிய மாற்றத்தை பார்க்க முடிகிறது. தேசிய அளவில் பா.ஜ.க.வுக்கு எதிராக எதிர்க்கட்சிகளை அணி திரட்டப் போவதாக சூளுரைத்த அந்தக் கட்சி, இப்போது சொந்த மாநிலத்தில் கூட்டணிக் கட்சிகளை சமாளிப்பதில் பிசியாகியுள்ளது. அக்கட்சியைச் சேர்ந்த முக்கிய தலைவர் ஒருவர் அமைச்சர் பதவியில் நீடிப்பாரா? மாட்டாரா? என்று சந்தேகம் எழும் அளவுக்கு நிலைமை மாறியுள்ளது.

அப்படி இந்த ஒரு மாத இடைவெளியில் என்ன நடந்தது? தேசிய அளவில் செயல்படப் புறப்பட்ட திமுக மீண்டும் சொந்த மாநிலமான தமிழ்நாட்டு அரசியலிலேயே ஒட்டுமொத்த கவனத்தையும் குவிக்கும் நிலைமை வந்துவிட்டதா? கூட்டணிக் கட்சிகளுடன் அதன் உறவு சிக்கலாகியுள்ளதா? சொந்தக் கட்சியில் என்ன பிரச்னை?

தமிழ்நாட்டில் 2018-ம் ஆண்டுக்குப் பிறகு இடைத்தேர்தல், நாடாளுமன்ற தேர்தல், சட்டமன்ற தேர்தல், உள்ளாட்சி தேர்தல் என அனைத்து தேர்தல்களிலும் திமுக கூட்டணி அப்படியே தொடர்கிறது.

### ஸ்டாலின் பிறந்தநாள் பொதுக் கூட்டத்தில் தேசிய தலைவர்கள்

2021-ம் ஆண்டு சட்டமன்ற தேர்தல் வெற்றிக்குப் பிறகு தேசிய அளவிலான பிரச்னைகளில் திமுகவின் குரல் வலுவாக ஒலிக்கத் தொடங்கியது. குறிப்பாக, சமூக நீதி, மாநில சுயாட்சி, மத சார்பின்மை போன்றவற்றில் திமுகவின் குரல் ஓங்கி ஒலித்தது. சமீப காலமாக தேசிய அரசியலில் பா.ஜ.க.வுக்கு எதிராக எதிர்க்கட்சிகளை ஓரணியில் திரட்டவும் திமுக முனைப்பு காட்டுகிறது.

அந்த வரிசையில், மார்ச் ஒன்றாம் தேதி சென்னையில் நடைபெற்ற மு.ஸ்டாலினின் பிறந்தநாள் பொதுக்கூட்டம் குறிப்பிடத்தக்கது. காங்கிரஸ் தலைவர் மல்லிகார்ஜுன கார்கே, சமாஜ்வாதி தலைவர் அகிலேஷ், ராஷ்ட்ரீய ஜனதா தளம் தலைவர் தேஜஸ்வி, காஷ்மீர் முன்னாள் முதல்வர் பரூக் அப்துல்லா உள்ளிட்ட தேசிய தலைவர்கள் பங்கேற்றதால் அந்த பொதுக்கூட்டம் தேசிய அளவில் கவனம் ஈர்த்தது.

### சமூக நீதிக்கான அகில இந்திய கூட்டமைப்பு தொடக்கம்

தொடர்ந்து, பல்வேறு மாநில முதலமைச்சர்கள் மற்றும் பிற மாநில கட்சிகளின் தலைவர்களுக்கு கடிதங்கள் எழுதி, அதன் மூலம் மத்திய அரசுக்கும், பாரதிய ஜனதாவுக்கு எதிரான அணி திரட்டலை மு.க.ஸ்டாலின் தொடர்ந்தார்.

அதன் ஒரு பகுதியாக, திமுகவே முன்னின்று தொடங்கிய சமூக நீதிக்கான அகில இந்திய கூட்டமைப்பின் முதல் கூட்டத்தில் மு.க.ஸ்டாலின் ஆற்றிய உரை முக்கியமானது. அப்போது, பாரதிய ஜனதாவுக்கு எதிராக நாடு முழுவதும் ஒத்த கருத்துள்ள கட்சிகள் ஒன்றிணைய வேண்டிய தன் அவசியத்தை அவர் எடுத்துரைத்தார்.

### திமுகவின் வேகத்திற்கு தடை போட்ட நிகழ்வுகள்

தேசிய அளவில் இலக்குகளை நிர்ணயித்து திமுக முனைப்புடன் செயல்படத் தொடங்கிய நேரத்தில்தான், தமிழ்நாட்டில் வட மாநிலத்தவர் தாக்கப்படுவதாக வதந்திகள் பரவின. இதுகுறித்த உறுதிப்படுத்தப்படாத செய்திகளை ட்விட்டரில் பகிர்ந்ததால், பா.ஜ.க. செய்தித் தொடர்பாளர் பிரசாந்த் படேல் உம்ராவ் உள்ளிட்ட சிலர் மீது வழக்குப்பதிவும் செய்யப்பட்டது. இது இந்தி பேசும் மாநிலங்களைச் சேர்ந்த கட்சிகளை திமுகவின் முயற்சிக்கு எதிராக நிறுத்தும் முயற்சியாகவே அப்போது அரசியல் அரங்கில் பார்க்கப்பட்டது.

அந்த சர்ச்சை ஓய்ந்த நிலையில், 12 மணி நேர வேலைச் சட்ட மசோதா, திருமண மண்டபங்களில் மது பயன்படுத்த அனுமதி போன்ற நடவடிக்கைகளால் சொந்த கூட்டணிக் கட்சிகளின் எதிர்ப்பை திமுக சம்பாதித்தது. 12 மணி நேர சட்ட மசோதாவை எதிர்த்து சட்டமன்றத்திலேயே மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி, விடுதலைச் சிறுத்தைகள் கட்சி ஆகியவை கடும் வாதம் புரிந்ததுடன், வெளிநடப்பும் செய்தன. திமுகவின் சித்தாந்த தாய்க் கழகமான திராவிடர் கழகமும் அதனை எதிர்த்தது. இதன் தொடர்ச்சியாக 12 மணி நேர வேலைச் சட்ட மசோதா மீதான நடவடிக்கையை நிறுத்திவைத்த தமிழ்நாடு அரசு, மே ஒன்றாம் தேதி உழைப்பாளர் தினத்தன்று அந்த மசோதா திரும்பப் பெறப்படுவதாகவும் அறிவித்தார். அது போல், டாஸ்மாக் குறித்த அரசாணையும் திரும்பப் பெறப்பட்டுவிட்டது.

அடுத்தக்கட்டமாக, தமிழ்நாடு நிதியமைச்சர் பி.டி.ஆர்.பழனிவேல் ராஜன் பேசியதாகக் கூறப்படும் ஓடியோ பதிவுகள் அடுத்தடுத்து வெளியாகி திமுகவிலேயே சலசலப்பை ஏற்படுத்தின. அதுகுறித்து பி.டி.ஆர். பழனிவேல் ராஜன் 2 முறை விளக்கம் அளித்துவிட்டார். முதலமைச்சர் மு.க.ஸ்டாலினும் கூட 'உங்களில் ஒருவன்' கேள்வி பதில் வீடியோவில் அதுகுறித்து பதில் அளித்துவிட்டார். ஆனாலும் கூட பி.டி.ஆர். பழனிவேல் தியாகராஜன் சர்ச்சை இன்னும் முழுமையாக ஓயவில்லை என்றே அரசியல் நோக்கர்கள் கூறுகின்றனர்.

### "திமுக கூட்டணியில் எந்த பிரச்னையும் இல்லை"

ஒரு மாதத்திற்கு முன்பு வரை, இன்னும் துல்லியமாக சொல்லப்போனால் 20 நாட்களுக்கு முன்பு வரையிலும் கூட, தேசிய அரசியல் சார்ந்த பெரியபெரிய இலக்குகளை பேசி வந்த திமுக தற்போது கூட்டணிக் கட்சிகளுடனான கருத்து வேறுபாடுகளை தீர்ப்பதிலும், சொந்தக் கட்சி பிரச்னையிலும் கவனம் செலுத்த வேண்டிய நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளது. ஓரிரு நாட்களுக்கு முன்பு கூட, மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் முன்னாள் எம்.பி. டி.கே.ரங்கராஜனின் பேச்சைக் கண்டித்து திமுகவின் அதிகாரப்பூர்வ நாளேடான முரசொலியில் கட்டுரை வெளியிடப்பட்டிருந்தது.

இந்த பின்னணியில் பார்க்கும் போது, திமுகவின் நிலை சற்று இறங்கியுள்ளதோ என்ற கேள்வி எழுவதைத் தவிர்க்க முடியவில்லை. அதுகுறித்து திமுகவின் அமைப்புச் செயலாளர் ஆர்.எஸ்.பாரதியிடம் பேசினோம். அவரோ, "கூட்டணிக் கட்சிகளுக்குள் எந்த பிரச்னையும் இல்லை. அனைத்தும் பேசித் தீர்க்கப்பட்டுவிட்டன. சி.பி.எம். மாநிலத் தலைவர் கே. பாலகிருஷ்ணன் திமுக தலைவரும், முதலமைச்சருமான மு.க.ஸ்டாலினை சந்தித்துப் பேசவிருக்கிறார். பி.டி.ஆர். பிரச்னை முடிந்துபோன ஒன்று. அதுகுறித்து பி.டி.ஆர். விளக்கம் அளித்துவிட்டார். தலைவரும் பேசிவிட்டார். ஆகவே அது பற்றி இனி பேச ஒன்றுமில்லை." என்று பதிலளித்தார்.

அவர் மேலும் பேசுகையில், "தேசிய அரசியலில் எதிர்க்கட்சிகளின் கூட்டணியை திரட்ட திமுக முனைவதால், எங்களுக்கு பல விதங்களிலும் தொல்லை தர பா.ஜ.க. முயற்சிக்கிறது என்பதில் சந்தேகமில்லை. இன்றைய பிரச்னைகள் பலவற்றின் பின்னணியிலும் பா.ஜ.க.வே. இருக்கிறது. ஆனால், பா.ஜ.க.வின் இது போன்ற செயல்பாடுகள் அந்தக் கட்சியின் சரிவை இன்னும் துரிதப்படுத்தவே செய்யும். 2024-ம் ஆண்டு நாடாளுமன்ற தேர்தலைப் பொருத்தவரை, "யார் பிரதமராக வரக்கூடாது?" என்பதை முன்னிறுத்தியே எங்களது உத்தி இருக்கும். அடுத்த பிரதமரை தேர்வு செய்வதில் திமுக முக்கிய பங்கு வகிக்கும்." என்றார்.

எதிர்க்கட்சிகள் கூட்டணி வென்றால் பிரதமர் காங்கிரசில் இருந்து வருவாரா? அல்லது வேறு யாரேனும் வரக் கூடுமா? என்ற கேள்விக்கு, 'யார் வரக்கூடாது? என்பதே எங்களது தேர்தல் உத்தி. நான் ஏற்கனவே கூறியபடி, தேர்தலுக்குப் பிறகு பிரதமர் யார் என்பதை தீர்மானிப்பதில் நாங்கள் முக்கிய பங்கு வகிப்போம்" என்று அவர் பதிலளித்தார்.

### "பொன்னான வாய்ப்பை எடப்பாடி பழனிசாமி வீணாக்கிவிட்டார்"

அண்மைக்கால அரசியல் மாற்றங்கள் குறித்து மூத்த பத்திரிகையாளர் கார்த்திகேயனிடம் கேட்ட போது, "திமுகவின் நிலையில் எந்தவொரு சறுக்கலும் ஏற்பட்டிருப்பதாக கருதவில்லை. அதேபோல், தமிழ்நாட்டில் திமுக கூட்டணியில் எந்தவொரு பிரச்னையும் இருப்பதாகத் தெரியவில்லை. நேற்று கூட தேசியவாத காங்கிரஸ் தலைவர் பதவியில் இருந்து விலகிய சரத்பவாரை பதவியில் நீடிக்க வலியுறுத்தியிருந்தார். தேசிய அளவில் மத சார்பற்ற சக்திகளை ஒருங்கிணைக்க அவரது பங்களிப்பு முக்கியம் என்பதை அவர் சுட்டிக்காட்டியிருந்தார். கூட்டணிக்கட்சிகளைப் பொருத்தவரை கருத்துவேறுபாடு இருக்கவே செய்யும். ஆனால், தேர்தல் என்று வரும் போது பா.ஜ.க.வுக்கு எதிரான நிலைப்பாட்டில் இந்த கட்சிகள் அப்படியே கூட்டணியைத் தொடரும். ஆகவே, 2024-ம் ஆண்டு நாடாளுமன்ற தேர்தலில் இந்த கூட்டணி அப்படியே களம் காணும் என்பதில் மாற்றம் இருக்காது" என்றார்.

12 மணி நேர வேலைச்சட்ட மசோதா, திருமண மண்டபங்களில் மது பயன்பாட்டிற்கு அனுமதி போன்றவற்றால் திமுகவின் செல்வாக்கு குறைந்துள்ளதா? அதிமுக பொதுச்செயலாளராக அங்கீகாரம் பெற்றுள்ள எடப்பாடி பழனிசாமி வலுப்பெற்றுள்ளாரா என்ற கேள்வியை அவரிடம் முன்வைத்தோம். அதற்குப் பதிலளித்த அவர், '12 மணி நேர வேலைச்சட்ட மசோதா, டாஸ்மாக் விவகாரங்களால் மக்களிடையே ஆளும் திமுக மீது ஓரளவு அதிருப்தி எழுந்தது உண்மைதான். ஆனால், அதனை சரியாக பயன்படுத்திக் கொள்ள எடப்பாடி பழனிசாமி தவறிவிட்டார்.

12 மணி நேர வேலைச்சட்ட மசோதாவுக்கு எதிராக சட்டமன்றத்தில் திமுகவின் கூட்டணிக் கட்சிகளான மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்டும், விடுதலைச் சிறுத்தைகள் கட்சியும் கடுமையாக எதிர்வினையாற்றின. ஆனால், அந்த நேரத்தில் பிரதான எதிர்க்கட்சியான அதிமுக அவையிலேயே இல்லை. திமுக சார்ந்த தொழிற்சங்கம் கூட எதிர்ப்பைப் பதிவு செய்ய, எடப்பாடி பழனிசாமியோ ஓர் அறிக்கை வெளியிட்டதுடன் திருப்திப்பட்டுக் கொண்டார். எடப்பாடி பழனிசாமிக்கு தங்கத் தாம்பாளத்தில் வைத்து கொடுக்கப்பட்ட வாய்ப்பை வீணடித்துவிட்டார்" என்று கூறினார். (பிபிசி)



# வெடுக்குநாறி மலையிலிருந்து தையிட்டிக்கு

நிலாந்தன்

தையிட்டி விகாரைக்கு எதிரான போராட்டத்தை நொதிக் கச் செய்தது தமிழ்த் தேசிய மக்கள் முன் னணிதான். பொலிசாரோடு முரண்பட்ட தன்மூலம் அதை உணர்ச்சிகரமான ஒரு விவகாரமாக மாற்றியதும் அந்தக் கட்சி தான். அதன் விளைவாகத் தமிழரசுக் கட் சியும் உட்பட ஏனைய கட்சி நாடாளு மன்ற உறுப்பினர்கள் அப்பகுதிக்கு வர வேண்டிய ஒரு நிர்ப்பந்தம் ஏற்பட்டது. நீதிமன்றம் தலையிடும் ஒரு நிலைமை உருவாகியது.

எனினும் போராட்டம் பெருமளவுக்கு கட்சிப் பிரமுகர்களின் போராட்டமாகவே இருந்தது.கொஞ்சம் தொண்டர்களும் காணப்பட்டார்கள். முன்னணி பொலிசாரோடு முரண்பட்டதுங்கூட அதன் பாணியில் வளமையானது என்று சொல்லலாம். அரச படைகளோடு முரண்படுவதை ஒரு சாகசமாக முன்னணி செய்து வருகின்றது. இதுபோன்ற போராட்டங்களில் அவ்வாறான சாகசச் செயலுக்கும் ஒரு பொருள் உண்டு. அது பொலிசாரை நிதானமிழக்கச் செய்யும். அதன் தக்கபூர்வ விளைவாக சிங்களபௌத்த மயமாக்கல் மேலும் அம்பலப்படும் என்பது உண்மை. ஆனால் அறவழிப் போராட்டங்கள் மட்டுமல்ல ஆயுதப் போராட்டங்களும் சாகசங்களால் வெற்றி பெறுவதில்லை.

இதுவிடயத்தில் சில அடிப்படையான கேள்விகள் உண்டு. அந்த விகாரை திடீரென்று வானத்திலிருந்து தரைக்கு வரவில்லை. அது கடந்த நான்கு வருடங்களாக கட்டப்பட்டு வருகிறது. அதற்கு அத்திவாரம் வைத்தபோதே அது விவகாரம் ஆக்கப்பட்டது. அதைக் கட்டியெழுப்பும் வரையிலும் ஏன் தமிழ்க் கட்சிகள் பார்த்துக் கொண்டிருந்தன? இப்பொழுதும் விகாரை முழுமையாக திறக்கப்படவில்லை. அதற்கு கலசம் வைக்கும் நிகழ்வு ஏற்பாடு செய்யப்பட்ட பொழுதுதான் தமிழ்த்தேசிய மக்கள் முன்னணி களத்தில் இறங்கியது. நாவற் குழியிலும் அப்படித்தான்.


இதில் ஒன்று தெளிவாகத் தெரிகிறது. அத்திவாரம் வெட்டப்படும் பொழுதும் அதைத் தடுக்க முடியவில்லை. அது கட்டி முடிக்கப்படுவதையும் தடுக்க முடியவில்லை. அது ஒரு மதம் சார்ந்த பொதுக் கட்டிடம் என்ற அடிப்படையில் அதை இனி அகற்றுவது மேலும் விவகாரமாகி விடும். எனவே இங்கு தொகுத்துப் பார்த்தால் தெரியவருவது என்னவென்றால், தமிழ்க் கட்சிகளின் இயலாமை தான். தமிழ்க் கட்சிகளின் நிகழ்வுகளை மையமாகக் கொண்ட அரசியல்தான். (**Event based**)

நாவற்குழியில் சிங்கள மக்கள் குடியமர்த்தப்பட்டபொழுது நாடாளுமன்ற உறுப்பினர் சிறீதரன் அங்கு போனார். முரண்பட்டார். அதுபோலவே தையிட்டி விகாரை விவகாரத்திலும் தொடக்கத்திலேயே அது பிரதேசசபையில் பிரஸ்தாபிக்கப்பட்டிருக்கிறது. எனவே இது விடயத்தில் 5 ஆண்டுகள் தூங்கிக் கிடந்துவிட்டு திடீரென்று விழித்த அரசியலை எப்படிப் பார்ப்பது?

ஆயிரம் விகாரைகள் கட்டப் போவதாக ரணில் பல ஆண்டுகளுக்கு முன்பே தனது தேர்தல் விஞ்ஞாபனத்தில் தெரிவித்திருந்தார். அவர் சொன்னதைச் செய்கிறார். அது அரசுடைய தரப்பு. திணைக்களங்கள் அவர்களுடைய உபகரணங்கள். படைத்தரப்பு அதன் காவல்காரன். எனவே எல்லா வளங்களையும் கொட்டி அவர்கள் சொன்னதைச் செய்கிறார்கள். ஆனால் தமிழ் அரசியல்வாதிகள் அவ்வாறு சொன்னதைச் செய்யும் சக்தி உடையவர்களா? அதற்குத் தேவையான நீண்ட கால நோக்கிலான வழி வரைபடம் அவர்களிடம் உண்டா? இல்லையென்றபடியால்தான் அவர்கள் நிகழ்வுகளை மையமாக வைத்து எதிர்ப்பு அரசியல் செய்கின்றார்களா? அவர்கள் எதிர்த்தபோதிலும் விகாரைகள், தாதுகோபங்கள் கட்டப்பட்டு கொண்டேயிருக்கின்றன.

தமிழ்க்கட்சிகளிடம் தெளிவான வழி வரைபடம் இல்லை என்பதைத்தான் தையிட்டி விவகாரம் நமக்கு உணர்த்துகின்றது. சிங்களபௌத்த மயமாக்கல் என்பது, தமிழ்மக்கள் ஒரு தேசமாக இருப்பதைச் சிதைக்கும் நோக்கிலானது. எனவே தமிழ்மக்கள் ஒரு தேசமாகத் திரண்டால்தான் அதைத் தடுக்கலாம். செல்வராஜா கஜேந்திரன் தையிட்டியில் வைத்து அதைச் சொன்னார். ஆனால் சொன்னால் மட்டும் போதாது. தமிழ் மக்களை ஒரு தேசமாகத் திரட்டுவதற்கு யார் தடை ?

ஏனைய கட்சிகளைத் துரோகிகள், ஒட்டுக் குழுக்கள், கைக்கூலிகள் என்றெல்லாம் கூறிக்கொண்டு எப்படி ஒற்றுமைப்படுவது? இனி தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியை கட்சிகளின் ஒருங்கிணைப்புக்குள் கொண்டுவர முடியாது. ஒன்றில்



தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி ஒரு பிரதான நீரோட்ட கட்சியாக வளர்ச்சி பெற வேண்டும். அல்லது ஏனைய கட்சிகள் தாங்கள் ஒரு பெரிய கூட்டாக வளர்ச்சி பெற வேண்டும்.

எந்தக் கூட்டாக இருந்தாலும் அது

> **தியாகியாய், துரோகியாய், கைக்கூலியாய், ஒட்டுக்குழுவாய், வடக்காய், கிழக்காய், வன்னியாய், யாழ்ப்பாணமாய், கட்சியாய், சாதியாய், சமயமாய், இன்னபிறவாய், சிதறிப்போகும் சிறிய தமிழ்மக்களால், அரசாங்கம் கட்டிக் கொண்டிருக்கும் விகாரைகளிலிருந்து ஒரு செங்கல்லைத்தானும் அசைக்க முடியுமா?**

தேசத்தை கட்டியெழுப்புவது என்ற நோக்கத்தோடு உருவாக்கப்பட வேண்டும். நிச்சயமாக தேர்தல் வெற்றிக்கான கூட்டாக இருக்கக் கூடாது. அத்தகைய அடிப்படையில் கூட்டுக்களை உருவாக்கத் தவறியதன் விளைவாகத்தான் தேச நிர்மானத்திற்கான அடுத்தடுத்த கட்ட வளர்ச்சிகளுக்குப் போக தமிழ் அரசியலால் முடியவில்லை.

தேசத்தை எப்படிக் கட்டியெழுப்புவது என்று சிந்தித்து அதற்குரிய வழி வரைபடத்தைத் தயாரித்து இருந்திருந்தால், சிங்கள பௌத்த மயமாக்கலை எதிர்கொள்வதற்கு உரிய கட்டமைப்புகளை உருவாக்கியிருந்திருப்பார்கள். கட்டமைப்புகள் இல்லாத வெற்றிடத்தில்தான், நிகழ்வுகளை மையமாகக் கொண்டு எதிர்ப்பு அரசியல் செய்ய வேண்டிவந்தது. அதை ஒரு சட்ட விவகாரமாகச் சுருக்க வேண்டிவந்தது. இது ஒரு சட்ட விவகாரம் அல்ல. இது ஒரு அரசியல் விவகாரம். இதை அணுகுவதற்கு அரசியல் ரீதியான கட்டமைப்புகளை உருவாக்க வேண்டும். ஒரு கட்சியிடமும் அப்படிப்பட்ட கட்டமைப்புகள் இல்லை என்பதைத்தான் தையிட்டியில் குந்தி கொண்டிருந்த நாடாளுமன்ற உறுப்பினர்கள் நமக்கு உணர்த்தினார்கள். சில தொண்டர்களைத் தவிர மக்களை அங்கே கொண்டுவர முடியவில்லை.

எனவே இங்கு தேவையானது என்னவென்றால், தேசத்தை நிர்மாணிப்பதற்குரிய கட்டமைப்புகள் எவை எவை என்று கண்டு அவற்றை கட்டியெழுப்புவதுதான். இது பல ஆண்டுகளாக நான் எழுதிவரும் ஒரு விடயந்தான். ஒரு தேசத்தை நிர்மாணிக்கத் தேவையான கட்டமைப்புகள் எவையெவை? ஒரு மக்கள் கூட்டத்தைத் தேசமாக வனையும் அம்சங்களைப் பலப்படுத்துவதற்குரிய கட்டமைப்புக்களே அவை. ஒரு மக்கள் கூட்டத்தைத் தேசமாக வனையும் அம்சங்கள் எவை? நிலம்,மொழி, இனம் அல்லது சனம், பொதுப் பண்பாடு, பொதுப் பொருளாதாரம் போன்றவைதான். எனவே மேற்கண்ட அம்சங்களை பலப்படுத்தவும் பாதுகாக்கவும் தேவையான சுயகவசங்கள் என்று வர்ணிக்கத்தக்க கட்டமைப்புகளை புலம்பெயர் தமிழ்ச் சமூகத்தின் பங்களிப்போடு உருவாக்கலாம். தேசத்தை நிர்மாணிக்க வேண்டும் என்று கூறும் ஒரு கட்சி அதற்கு தேவையான பொருத்தமான கட்டமைப்புகளை ஏன் இதுவரை உருவாக்கவில்லை? அதற்கு பதில் வேண்டும்.

தையிட்டியில் தமிழ்மக்கள் ஒரு தேசமாக நிற்கவில்லை. கட்சிப் பிரமுகர்கள்தான் நின்றார்கள். அது ஒரு நிகழ்வு. அதுபோல பல நிகழ்வுகளை நாங்கள் கடந்த 14 ஆண்டுகளில் கண்டு விட்டோம். நிகழ்வுகளை மையமாகக் கொண்ட அரசியலின் தோல்வியே இது. இப்பொழுது தேவையாக இருப்பது மூலோபாய ரீதியில் சிந்தித்து கட்டமைப்புகளை உருவாக்கி நீண்ட கால அடிப்படையில் தேசத்தைக் கட்டியெழுப்புவதுதான். அவ்வப்போது நிகழ்வுகளுக்கு எதிர்வினையாற்றும் அரசியல் எனப்படுவது தேசத்தை நிர்மாணிப்பதற்கு உரியதல்ல. தேசத்தை நிர்மாணிப்பது என்பது எதிர்ப்பு அரசியல் மட்டுமல்ல. அது கட்டியெழுப்பும் அரசியலுந்தான் (**Constructive**). எதைக்கட்டியெழுப்பு வது? எதிர்க்கத் தேவையான கட்டமைப்புகளைக் கட்டியெழுப்புவது.

இன்றைக்கு தையிட்டி. நாளைக்கு வேறொரு இடத்தில் வேறு ஒரு பௌத்த மதக் கட்டுமானத்துக்கு அத்திவாரம் வைக்கப்படும். அப்பொழுதும் அந்த நிகழ்வுக்கு எதிராக தமிழ்க்கட்சிகள் போராடக்கூடும். வழக்குத் தொடுக்கக்கூடும். பொலிசோடு தள்ளுமுள்ளுப்படக் கூடும். வழக்கில் வெல்லவும்கூடும். ஆனால் அவை யாவுமே நிகழ்வுகள்தான். தேசத்தைக் கட்டியெழுப்புவதற்கான தொடர் செயற்பாடுகளாக இருக்கப்போவதில்லை. சிங்களபௌத்த மயமாக்கலைத் தடுக்கப்போவதில்லை.

இப்பொழுது வெடுக்குநாறி மலையில் இருந்து கவனக்குவிப்பு தையிட்டிக்குத் திரும்பி விட்டது. அதுகூட சிங்கள பௌத்த மயமாக்கலுக்குச் சாதகமான ஒரு விசயம்தான். தமிழ்மக்களின் கவனத்தை,தமிழ்க் கட்சிகளின் கவனத்தை அவ்வப்போது வெவ்வேறு நிகழ்வுகளின் மீது திசை திருப்புவது. தமிழ் மக்களின் கூட்டுக் கவனத்தைச் சிதற விடுவது.

அண்மை வாரங்களாக தமிழ்ச் சமூகத்துக்குள் காணப்படும் சாதி ஏற்றத் தாழ்வுகளைக் குறித்தும் சாதி ஒடுக்கு முறைகளைக் குறித்தும் விமர்சனங்கள் வெளிவருகின்றன. தேசிய விடுதலை எனப்படுவது சமூக விடுதலையுந்தான். சமூக விடுதலை இல்லாத தேசிய விடுதலை, விடுதலையே அல்ல. இந்த விளக்கத்தோடு உள்ளூரில் காணப்படும் சாதி ஒடுக்குமுறைகளுக்கு எதிராகவும் போராட வேண்டிய பொறுப்பு தமிழ் கட்சிகளுக்கும் செயற்பாட்டாளர்களுக்கும் உண்டு. மத முரண்பாடு, சாதி முரண்பாடு, நாவற்குழி, தையிட்டி வெடுக்குநாறி மலை, குருந்தூர் மலை போன்ற அனைத்து அம்சங்களும் தமிழ்மக்களின் கவனத்தை அவ்வப்போது சிதறடிக்கின்றன. இவற்றிற்கு எதிராக தனித்தனியாக போராட்டத் தேவையில்லை. இவை அனைத்தும் தேச நிர்மானத்துக்கு ஏற்பட்ட சவால்களே. எனவே தேசத்தை ஜனநாயக அடிச்சட்டத்தின் மீது கட்டியெழுப்பும்போது இந்த விடயங்களை எதிர்கொள்வதற்கான அடிப்படைக் கட்டமைப்புகளும் உருவாக்கப்பட்டு விடும்.

இது மே மாதம். 2009 ஆம் ஆண்டு தமிழ் மக்கள் மத்தியில் இருந்த ஒரு கருநிலை அரசு தோற்கடிக்கப்பட்ட மாதம். “யுத்தத்தை வெற்றி கொண்டவர்கள் நாங்கள்” என்று தையிட்டியில் வைத்து ஒரு பொலிஸ் அதிகாரி கூறுகிறார். அதன் பொருள் இதுதான். நீங்கள் தேசமாக இருப்பதை நாங்கள் தோற்கடித்து விட்டோம் என்று பொருள். ஆனால் கடந்த 14 ஆண்டுகளாக தமிழ்மக்கள் ஒரு தேசமாக மேலெழுவதைத் தோற்கடித்ததில் அரசாங்கத்தைவிடவும் தமிழ்க் கட்சிகளுக்கே பங்கு அதிகம். இதை மறுவளமாகச் சொன்னால் தமிழ்மக்களை ஓரளவுக்காவது தேசமாகத் திரட்டியது அரசாங்கந்தான். ஒடுக்குமுறைதான் தமிழ்க் கட்சிகளை ஒர் உணர்ச்சிப்புள்ளியில் சந்திக்க வைக்கின்றது. தையிட்டியில் அது நடந்தது. மு.திருநாவுக்கரசு சிவத்தம்பி போன்றவர்கள் கூறுவதுபோல எதிரிதான் தமிழ்த் தேசியத்தின் பிரதான பலமா?

தியாகியாய், துரோகியாய், கைக்கூலியாய், ஒட்டுக்குழுவாய், வடக்காய், கிழக்காய், வன்னியாய்,யாழ்ப்பாணமாய், கட்சியாய், சாதியாய், சமயமாய், இன்னபிறவாய், சிதறிப்போகும் சிறிய தமிழ்மக்களால், அரசாங்கம் கட்டிக் கொண்டிருக்கும் விகாரைகளிலிருந்து ஒரு செங்கல்லைத்தானும் அசைக்க முடியுமா?

# மேடைகளில் பேசுவதால் மட்டும் நாட்டை கட்டியெழுப்ப முடியாது!

## எதிர்க்கட்சித் தலைவர் சஜித்

கொழும்பு, மே 08

நாட்டை அழித்த ராஜபக்ஷ தலைமையிலான மொட்டு அரசாங்கத்துக்கு மாற்று வழியை நாட்டு மக்கள் தேடும் போது, ராஜபக்ஷர்களையும் திருடர்களையும் பாதுகாக்கும் அரசாங்கத்துக்கு எதிராக மாற்று வழி தேடும் போது அந்த மாற்று நாட்டில் திருட்டு, கொலைகளை செய்யாத மாற்றாக இருக்க வேண்டும் என எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவித்தார்.



இந்நாட்டின் 75 ஆண்டுகால ஜனநாயக வரலாற்றில், எதிர்க்கட்சிகள் தொகுதி வாரியாகத் தம்மை ஒருங்கிணைத்து எவ்வாறெனினும் அரச அதிகாரத்தைப் பெற்றுக் கொள்வதாக இருந்தாலும் தற்போதைய எதிர்க்கட்சிக்கு அதிகாரம் இல்லாவிட்டாலும், மக்களுக்கு பெரும் சேவையை செய்துள்ளதாகவும், வெறும் மேடைகளில் பேசுவதால் நாட்டைக் கட்டியெழுப்ப முடியாது எனவும் எதிர்க்கட்சித் தலைவர் தெரிவித்தார்.

நாட்டின் மாற்றுக் கட்சிகள் என்று கூறும் தரப்புகள் அதிகாரம் இன்றி மக்களுக்கு எதுவும் ஆற்றவில்லை எனவும், எனவே, அதிகாரம் இல்லாவிட்டாலும் மக்களுக்கு சேவை செய்யக்கூடிய தரப்புகளுக்கு நாட்டை கட்டியெழுப்ப சந்தர்ப்பம் வழங்கப்பட வேண்டுமென்றே நாட்டு மக்கள் தீர்மானிக்க வேண்டும் என தெரிவித்த எதிர்க்கட்சித் தலைவர், தாம் ஆட்சியில் இல்லாத போதும் ஐக்கிய மக்கள் சக்தி ஆற்றிய பணிகளையும் நினைவு கூர்ந்தார்.

அதிகாரம் இல்லாமல் இவ்வாறான சேவையை மேற்கொள்வார்கள் என்றால், அதிகாரத்தைப் பெற்றுக் கொண்டு எவ்வளவு சேவை மேற்கொள்ள முடியும் எனவும் மக்கள் புத்திசாலித்தனமாக சிந்தித்துப் பார்க்க வேண்டும் எனவும் எதிர்க்கட்சித் தலைவர் குறிப்பிட்டார்.

சீரழிந்து, வங்குரோத்தாகி பல்வேறு விடயங்களால் பிளவுபட்டுள்ள நாட்டை ஐக்கிய மக்கள் சக்தி தரப்பாலே மீண்டும் கட்டியெழுப்ப முடியும் எனவும், இதைவிடுத்து வேறு மாற்று இல்லை எனவும் எதிர்க்கட்சித் தலைவர் மேலும் தெரிவித்தார்.

"வெற்றிக்கான பயணம்" எனும் கருப்பொருளில் மொனராகலை தேர்தல் தொகுதிக் கூட்டத்தில் நேற்று நடைபெற்ற கூட்டத்தில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ மேற்கண்டவாறு தெரிவித்தார்.

# கடன் மறுசீரமைப்பு தொடர்பில் இந்தியாவுடன் உயர்மட்ட பேச்சு!

புதுடில்லி, மே 08

கடன் மறுசீரமைப்பு செயன்முறை, இலங்கைக்கும் இந்தியாவுக்கும் இடையிலான பொருளாதார ஒருங்கிணைப்பு மற்றும் இலங்கையில் இந்திய முதலீடுகள் உள்ளிட்ட முக்கிய விடயங்கள் குறித்து இரு தரப்பு அவதானம் செலுத்தப்பட்டுள்ளது.

இந்தியாவுக்கான இலங்கை உயர்ஸ்தானிகர் மிலிந்த மொரகொட மற்றும் இந்திய பிரதமர் அலுவலகத்தின் பிரதம செயலாளர் கலாநிதி பிரமோத் குமார் மிஷ்ரா ஆகியோருக்கிடையிலான விசேட சந்திப்பொன்று கடந்த வெள்ளிக்கிழமை டில்லியில் இடம்பெற்றுள்ளது.

இந்த சந்திப்பின் போதே இவ்விடயங்கள் தொடர்பில் அவதானம் செலுத்தப்பட்டுள்ளது.

சந்திப்பின் போது இலங்கையின் கடன் மறுசீரமைப்பு செயன்முறை குறித்து கலந்துரையாடியுள்ள உயர்ஸ் தானிகர் மிலிந்த மொறகொட , தற்போதைய பொருளாதார நெருக்கடியில் இலங்கைக்கு இந்தியா வழங்கி வரும் ஆதரவுக்கு நன்றி தெரிவித்துள்ளார்.



மேலும் கடன் மறுசீரமைப்பு செயன் முறை உட்பட பொருளாதாரம் குறித்த தற்போதைய முன்னேற்றங்கள் தொடர்பிலும் தெளிவுபடுத்தினார். இலங்கையின் பொருளாதார மீட்சியில் இந்தியாவுடனான பொருளாதார ஒருங்கிணைப்பு முக்கிய பங்கை வகிப்பதாகவும் உயர்ஸ் தானிகர் குறிப்பிட்டுள்ளார்.

இலங்கைக்கும் இந்தியாவுக்கும் இடையிலான மேலும் பொருளாதார ஒருங்கிணைப்பு, இலங்கையில் இந்திய முதலீடுகள் , சுற்றுலாத்துறையை மேம்படுத்துதல், இருதரப்பு வர்த்தகத்தை மேலும் மேம்படுத்துவதற்கான வழிமுறைகள், மின்சாரம் மற்றும் வலுசக்தி துறையில் ஒத்துழைப்பு மற்றும் ரூபாய் வர்த்தகம் உள்ளிட்ட முக்கிய விடயங்கள் தொடர்பில் இதன் போது அவதானம் செலுத்தப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# குடும்பமாக சேர்ந்து கொள்ளையடிக்க உருவாக்கப்பட்டதே 'மொட்டு' கட்சி!

கொழும்பு, மே 08

"மொட்டுக் கட்சி என்பது ஒரு கட்சியல்ல. அது குடும்பம். குடும்பமாகச் சேர்ந்து கொள்ளையடிப்பதற்காக உருவாக்கப்பட்ட கட்சி. இனி அதை யாராலும் கட்டியெழுப்ப முடியாது."

இவ்வாறு கூறியுள்ளார் மொட்டு கட்சியில் இருந்து பிரிந்து சென்ற பாராளுமன்ற உறுப்பினர் சந்திம வீரக்கொடி.

அவர் மேலும் கூறுகையில்,

மொட்டு கட்சிக்கு இனி யார் தலைவராக வந்தாலும் அந்தக் கட்சியை இனிக் கட்டி எழுப்ப முடியாது. அது கட்சியல்ல ஒரு குடும்பம். ராஜபக்ஷவின் குடும்பம்.

அந்தக் குடும்பத்தின் இருப்புக்காக அடுத்த அரசியல்வாதிகளை அழித்து - பொருளாதாரத்தை நாசமாக்கி - மக்களின் எதிர்பார்ப்புக்களை முடிவுக்குக் கொண்டு வந்து குடும்பமாகச் சேர்ந்து கொள்ளையடிப்பதற்காக உருவாக்கப்பட்ட கட்சி இது.

யாருக்குத் தலைவர் பதவி கொடுத்தாலும் ,யாருக்கு அமைச்சுப் பதவிகள் கொடுத்தாலும் இந்தக் கட்சியை இனிக் கட்டியெழுப்ப முடியாது என்பதை ஜனாதிபதி உள்ளிட்ட மொட்டுக் கட்சியினர் புரிந்து கொள்ள வேண்டும்." - என்றார்.








## ‘இலங்கை முஸ்லிம்களின் தேசிய பங்களிப்பு’ நூல் வெளியீட்டு விழா!

கல்முனை, மே 08

கலாநிதி ரவூப் ஸெய்ன் எழுதிய ‘இலங்கை முஸ்லிம்களின் தேசிய பங்களிப்பு’, எனும் நூலின் அறிமுக விழாவும் விசேட உரையும் நேற்று முன்தினம் சனிக்கிழமை மாளிகைக்காட்டில் நடைபெற்றது.

மட்டக்களப்பு தேசிய கல்வியல்கல்லூரியின் சிரேஷ்ட விரிவுரையாளர் அஷ்ஷெய்க் அன்ஸார் பழீல் மௌலானா தலைமையில் நடைபெற்ற இந்த விழாவில் தென்கிழக்குப் பல்கலைக்கழகத்தின் தமிழ்த் துறை சிரேஷ்ட பேராசிரியர் எம். றமீஸ் அப்துல்லாஹ் நூல் பற்றிய அறிமுகத்தை செய்து வைத்தார்.

இந்த நிகழ்வில் பெருமளவானவர்கள் பங்கேற்றிருந்தனர். (ஐ)

## பயங்கரவாத எதிர்ப்பு சட்டம் தொடர்பில் தெளவூட்டல்!

மட்டக்களப்பு, மே 08

அரசாங்கத்தால் முன்மொழியபட்டுள்ள புதிய பயங்கரவாத எதிர்ப்புச் சட்டம் தொடர்பாக மக்களுக்கு தெளிவூட்டலை வழங்கும் வகையில் மட்டக்களப்பு மாவட்ட ஊடகவியலாளர்களுக்கான கலந்துரையாடல் நேற்றுமுன்தினம் நடைபெற்றது.

கிழக்கு சமூக அபிவிருத்தி மையத்தின் ஏற்பாட்டில், அதன் பணிப்பாளர் புஹாரி மொகமட் தலைமையில் கலந்துரையாடல் இடம்பெற்றது.

இதில் வளவாளராக சட்டத்தரணி சுவஸ்திகா அருளிங்கம் கலந்து கொண்டார். (ஐ)

## சவுக்கடி கடலில் நீராடிய இரு மாணவர்கள் மூழ்கி பலி!

மட்டக்களப்பு, மே 08

வகுப்புக்கு செல்வதாகக்கூறி கடலில் குளித்த இரு மாணவர்கள் நீரில் மூழ்கி உயிரிழந்தனர்.

மட்டக்களப்பு - கொக்குவில் பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட சவுக்கடி கடற்கரை பகுதியில் இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

இதில், கறுப்பங்கேணியை சேர்ந்த டானியல் றோகித் (வயது 16), இருதயபுரத்தை சேர்ந்த நிரோசன் பிரவீன்த் (வயது16) ஆகியோரை உயிரிழந்தனர். இவர்கள் இருவரும் இம்முறை சாதாரண தர பரீட்சை எழுதவிருந்தனர் என்று தெரிய வருகின்றது.

சனிக்கிழமை மாலை இரு மாணவர்களும் ஆட்கள் இல்லாத நேரத்தில் நீராடியுள்ளனர். இந்த நிலையில் நேற்று இவர்களின் சடலங்கள் கண்டுபிடிக்கப்பட்டன.

மட்டக்களப்பு திடீர் மரண விசாரனை அதிகாரி எம். யூ. அப்துல் ஹக்கீம் சம்பவம் நடந்த இடத்துக்கு சென்று சடலங்களை பார்வையிட்டு மரண விசாரணையை நடத்தினார். (ஐ)

# திருமலை பொது மருத்துவமனையை இடம்மாற்றுவதற்கு நடவடிக்கை!

### அபிவிருத்தி திட்டங்கள் பாதிப்பு சிரமங்களுக்குள் நோயாளர்கள்!

திருகோணமலை, மே 08

**திருகோணமலை பொது மருத்துவமனையை தற்போதிருக்கும் இடத்தில் இருந்து 6ஆம் கட்டை பகுதிக்கு மாற்றுவதற்கான நடவடிக்கைகள் இடம்பெற்று வருகின்றன என்று கூறப்படுகின்றது.**

அத்துடன், தற்போதைய மருத்துவமனை கட்டடத்தை சீன சுற்றுலா விடுதி ஒன்றுக்கு வழங்கவும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்று அறிய வருகின்றது.

இந்த விடயம் தொடர்பில் கடந்த பெப்ரவரி 15ஆம் திகதி மருத்துவமனையில் உயர்மட்ட கலந்துரையாடல் ஒன்று இடம்பெற்றுள்ளது. அன்றைய தினமே, 6ஆம் கட்டை பகுதியில் மருத்துவமனையை அமைக்கத் தீர்மானிக்கப்பட் டுள்ள 50 ஏக்கர் காணியையும் அதிகாரிகள் பார்வையிட்டுள்ளனர்.

இதனிடையே, கந்தளாய் மருத்துவமனையை மாற்றுவதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகக் கூறப்படுகின்றது.




இடப்பற்றாக்குறை, கழிவு முகாமைத்துவம், கடல் சார் அனர்த்தம், பாதுகாப்பு உள்ளிட்ட காரணங்களுக்காக திருகோணமலை பொது மருத்துவமனையை இடம் மாற்ற நடவடிக்கை எடுக்கப்படுவதாகக் கூறப்படுகின்றது.

இதனிடையே, இந்த இட மாற்றம் காரணமாக மருத்துவமனையில் சில பிரிவுகளை அமைக்கும் பணிகள் நிறுத்தப்பட்டுள்ளன. குறிப்பாக ஜப்பானின் நிதிப் பங்களிப்பில் அமையவிருந்த இதய சத்திர சிகிச்சை தொகுதி நிறுத்தப்பட்டது. இதனால், நோயாளிகள் சிகிச்சை பெறுவதில் பாதிப்புகளை எதிர்நோக்குகின்றனர் என்று கூறப்படுகின்றது.

இதனிடையே, திருகோணமலை மாவட்டத்துக்கு உரித்தான மருத்துவமனையாக இது இருக்கின்றபோதிலும் பல பௌதிக வளப் பற்றாக்குறைகள் காணப்படுகின்றன என்று தெரிவிக்கப்பட்டது. (ஐ)

## மட்டக்களப்பில் நேற்று குருதி கொடை

மட்டக்களப்பு, மே 08

வெசாக் தினத்தை முன்னிட்டு மட்டக்களப்பு - ஜெயந்திபுரம் பௌத்த மத்திய நிலையத்தின் ஏற்பாட்டில் இரத்த தான முகாம் நேற்று நடைபெற்றது.

எகெட் கரித்தாஸ் அனுசரனையில் ‘உதிரம் கொடுப்போம் உயிர் காப்போம் ‘ எனும் தொனிப்பொருளில் இந்த நிகழ்வு நடைபெற்றது.

மட்டக்களப்பு போதனா மருத்துவமனையின் இரத்த வங்கியில் நிலவும் இரத்தப் பற்றாக்குறையை நிவர்த்தி செய்யும் வகையில் இந்த இரத்த தான முகாம் நடைபெற்றது. இதில் பொலிஸார், பொதுமக்கள எனப் பலர் பங்கேற்று இரத்த தானம் செய்தனர். (ஐ)



## எல்லைக் கிராமங்களில் தமிழரசுக்கு வட்டார கிளை!

### சாண்கியன் எம். பி. நடவடிக்கை

மட்டக்களப்பு,

எல்லைக் கிராமங்களில் இலங்கைத் தமிழரசு கட்சியின் வட்டாரக் கிளைகளை அமைப்பதற்கு அந்தக் கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் இரா. சாணக்கியன் எம். பி. நடவடிக்கை எடுத்துள்ளார்.

இதற்காக களப்பயணம் சென்ற அவர் தலைமையிலான குழுவினர் குடும்பிமலை, இரணைக்குளம், மருதங்கேணிக்குளம், பனிச்சங்குளம் ஆகிய பகுதிகளுக்கு சென்றுள்ளனர். இதன்போது, ஆதிவாசிகள் சமூகத்தினரைச் சந்தித்து அவர்களின் பிரச்னைகள் தொடர்பில் சாணக்கியன் எம். பி. கேட்டறிந்தார்.

இதன்போது மருதங்கேணிக்குளம் பிரதேசத்திலுள்ள ஆதிவாசிகள் சமூகத்தினரின் தலைவரைச் சந்தித்துக் கலந்துரையாடிய பாராளுமன்ற உறுப்பினர் அவர்களின் குறை களைக் கேட்டறிந்து கொண்டார். (ஐ)

## அறநெறிப் பாடசாலை மாணவரின் புத்தாண்டு விளையாட்டு நிகழ்வு

கொழும்பு, மே 08

தமிழ் - சிங்கள சித்திரை புத்தாண்டை முன்னிட்டு மண்முனை வடக்கு பிரதேச செயலக கலாசார பிரிவின் ஏற்பாட்டில் மண்முனை வடக்கு பிரதேச செயலகத்துடன் மட்டக்களப்பு மகாநரசிங்க வைரவர் அறநெறி பாடசாலை ஆசிரியர்கள் மற்றும் மாணவர்கள் இணைந்து சித்திரை புத்தாண்டு நிகழ்வை நடத்தினர்.

மட்டக்களப்பு அரசினர் ஆசிரியர் கலாசாலை மைதானத்தில் நேற்று இந்த நிகழ்வுகள் நடைபெற்றன.

மண்முனை வடக்கு பிரதேச செயலாளர் வி. வாசுதேவன் தலைமையில் நடத்தப்பட்ட சித்திரை புத்தாண்டு பாரம்பரிய கலாசார கிராமிய விளையாட்டு நிகழ்வில், அறநெறி பாடசாலை மாணவர்களின் விளையாட்டு நிகழ்வுகள் நடைபெற்றன. அத்துடன், இவற்றில் வெற்றி பெற்றவர்களுக்கு பரிசில்களும் வழங்கப்பட்டன.

இந்த நிகழ்வில் அறநெறி பாடசாலை ஆசிரியர்கள், மாணவர்கள், பெற்றோர் என பலர் கலந்துகொண்டனர். (ஐ)



## ஆடு வளர்ப்பால் ஏற்பட்ட தர்க்கம் கொலையில் முடிவடைந்தது!

மட்டக்களப்பு, மே 08

ஆடுகள் பயிர்களை மேய்ந்ததால் ஏற்பட்ட தர்க்கம் கொலையில் முடிந்துள்ளது.

மட்டக்களப்பு - வாழைச்சேனை, நாப்பதாவில் பகுதியில் நேற்று முன்தினம் இடம்பெற்ற இந்தச் சம்பவத்தில் 74 வயது நபர் ஒருவர் கொலையானார்.

கொலையானவருக்கு சொந்தமான ஆடுகள் நீண்டகாலமாக கொலைச் சந்தேக நபரின் தோட்டத்தில் உள்ள பயிர்களை அழித்து வந்துள்ளன. இது தொடர்பில் இருவருக்கும் இடையே முரண்பாடு காணப்பட்டது.

இந்தப் பிரச்னை மோதலில் முடிந்ததில், சந்தேகநபர் மற்றையவரை அரிவாளால் வெட்டிக் கொன்றார் என்று கூறப்படுகின்றது.

இந்தச் சம்பவத்துடன் தொடர்புடைய சந்தேகநபர் கைது செய்யப்பட்டுள்ளார். (ஐ)

# பக்முட் நகரத்தின்மீது ரஷ்யா பொஸ்பரஸ் குண்டு தாக்குதல்!

கீவ், மே 08

**முற்றுகையிடப்பட்ட பக்முட் நகரின்மீது பொஸ்பரஸ் குண்டுகளை வீசி ரஷ்யா தாக்குதல் நடத்தியுள்ளது என்று உக்ரைன் குற்றஞ்சாட்டியுள்ளது.**



இதனிடையே, ரஷ்யாவின் முற்றுகைக்குள் இருந்து தப்பிக்க இலட்சக்கணக்கான மக்களை தனது பகுதிகளிலிருந்தும் உக்ரைன் வெளியேற்றி வருகின்றது.

பக்முட் நகரத்தின் வெள்ளை பொஸ்பரஸ் மழையாக பொழியாகிறது. இதனால், அந்த நகரமே எரிகின்றது. இது தொடர்பான ட்ரோன் காணொலி காட்சிகளை உக்ரைன் இராணுவம் வெளியிட்டுள்ளது.

பொஸ்பரஸ் ஆயுதங்கள் தடை செய்யப்படவில்லை. எனினும், பொதுமக்கள் வசிக்கும் பகுதிகளில் இந்த இரசாயன ஆயுதத்தைப் பயன்படுத்துவது போர் குற்றமாகும்.

பக்முட் நகரத்தை ரஷ்யா பல மாதங்களாக முற்றுகையிட்டுள்ளது. இந்த நகரை கைப்பற்ற முடியாது இருப்பது ரஷ்யாவுக்கு பெரும் பின்னடைவு மற்றும் மதிப்பிழப்பாகக் கருதப்படுகின்றது. பக்முட்டுக்கான போரில் ஆயிரக்கணக்கான படையினரை ரஷ்யா இழந்து விட்டதாகக் கூறப்படுகின்றது.

இந்த நிலையிலேயே பொஸ்பரஸ் குண்டு தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது. எனினும், இந்தத் தாக்குதல் எப்போது நடத்தப்பட்டது என்பது குறித்து உறுதியான தகவல்கள் வெளியிடப்படவில்லை. எனினும், உக்ரைன் வெளியிட்ட காணொலி ட்ரோன் மூலம் பதிவு செய்யப்பட்டதாகும்.

முன்னர், மரியுபோல் முற்றுகையின்போது ரஷ்யா அந்த நகரின்மீது பொஸ்பரஸ் குண்டுகளை வீசித் தாக்கியதாகக் குற்றஞ்சாட்டப்பட்டது. பக்முட் நகரில் 80 ஆயிரம் பொதுமக்கள் வசித்தனர். தற்போது அங்கு எவரும் வசிக்கவில்லை என்றும் கூறப்படுகின்றது. (ஐ)

## பொஸ்பரஸ் குண்டு

பொஸ்பரஸ் என்பது மெழுகு போன்ற ஒரு பொருளாகும். இது 800 பாகை செல்சியஸ் அளவில் எரியும். இது இலகுவாக தீப்பற்றக்கூடியது. ஒட்சிசன் வாயுவுடன் சேர்ந்த வேகத்திலேயே தீப்பற்றும். இதனை அணைப்பது கடினமாகும். இது மனிதர்களில் எரிகாயங்களை ஏற்படுத்துவதுடன் ஆடைகள் மற்றும் எரிபற்று நிலையுள்ள பொருட்களில் தீயைப் பற்ற வைக்கிறது. இதனால், ஏற்படும் காயங்கள் மிகத் தீவிரமானவையாக இருக்கும். இந்த ஆயுதங்களை மக்கள் வசிக்கும் பகுதிகளில் பயன்படுத்த தடை விதிக்கப்பட்டுள்ளது. முன்னர் ஈராக் - சிரியாவில் ஐ. எஸ்ஸினருக்கு எதிராக அமெரிக்கா இந்த இரசாயன ஆயுதத்தை பயன்படுத்தியது.

நமது நாட்டில் 2006 - 2009 வரையான காலப் பகுதியில் இறுதிப் போர் நடவடிக்கையிலும் இந்தக் குண்டை இராணுவம் பயன்படுத்தியதாக வலுவான குற்றச்சாடுகள் உள்ளன என்பதும் நினைவில் கொள்ளத்தக்கது.

# கொங்கோவில் திடீர் மழை; 176 பேர் மரணம் பலர் மாயம்!

பிராசவில்லி, மே 08

ஆபிரிக்க நாடான கொங்கோ குடியரசில் திடீரென பெய்த மழையால் 176 பேர் உயிரிழந்தனர். அத்துடன், 100இற்கும் மேற்பட்டவர்கள் காணாமல் போயுள்ளனர்.

அந்த நாட்டின் தெற்கு கிவு மாகாணத்திலேயே இந்தப் பாதிப்பு ஏற்பட்டுள்ளது. இரவு முழுவதும் தொடர்ந்து பெய்த மழையால் ஆறுகள் பெருக்கெடுத்து ஓடின. இதனால், வெள்ளம் கரை புரண்டு ஓடியது. இந்தக் காட்டாறால் வெள்ளத்தில் அடித்துச் செல்லப்பட்டு பலர் உயிரிழந்தனர்.

வெள்ளத்தில் அகப்பட்டும், மண்ணில் புதையுண்டும் 176 பேர் உயிரிழந்தனர். அவர்களின் சடலங்கள் மீட்கப்பட்டுள்ளன. இதனிடையே நூற்றுக்கும் மேற்பட்டவர்களை காணவில்லை என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. அங்கு மீட்பு பணிகள் தொடங்கப்பட்டுள்ளன.

இதனிடையே, காட்டாற்று வெள்ளத்தில் சிக்குண்டு உயிரிழந்தவர்களுக்காக இன்று திங்கட்கிழமையை தேசிய துக்கதினமாக அந்த நாட்டு அரசு அறிவித்துள்ளது. (ஐ)



# ஆஸியில் இந்து கோவில்மீது மர்மநபர்கள் மீளவும் தாக்குதல்!




சிட்னி, மே 08

அவுஸ்திரேலியாவின் சிட்னியில் அமைந்துள்ள சுவாமி நாராயணன் கோவில் மீது மீண்டும் தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது.

அவுஸ்திரேலியாவில் சமீப காலமாக இந்து கோவில்கள் மீதான தாக்குதல்கள் அதிகரித்துள்ளன.

இந்த நிலையிலேயே, நேற்றுமுன்தினம், கோவிலன் சுவரை மர்ம நபர்கள் தாக்கி சேதப்படுத்திவிட்டு தப்பிச் சென்றுள்ளனர்.

இது தொடர்பில் பொலிஸில் முறைப்பாடு செய்யப்பட்டது. பொலிஸார் விசாரணைகளை நடத்தி வருகின்றனர்.

இந்தக் கோவிலில் காலிஸ்தான் கொடி பறக்க விடப்பட்டிருந்ததாகவும் எனவே, காலிஸ்தான் ஆதரவாளர்களே இந்தத் தாக்குதலை நடத்தியிருக்கலாம் என்று பொலிஸார் கருதுகின்றனர். இதையடுத்து, அவர்களை பிடிப்பதற்கான நடவடிக்கைகளை பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர். (ஐ)

# சூடானின் போரிடும் தரப்புகள் சவூதியில் பேச்சை ஆரம்பித்தன!



ஜெட்டா, மே 08

சூடானின் போரிடும் படைகளின் பிரதிநிதிகள் நேரடிப் பேச்சுகளை சவூதி அரேபியாவில் ஆரம்பித்துள்ளன. சூடான் இராணுவம், இராணுவ விரைவு ஆதரவு படைகளின் பிரதிநிதிகளே ஜெட்டா நகரில் நேற்று முன்தினம் இந்தப் பேச்சை ஆரம்பித்தனர்.

இந்தப் பேச்சுக்கு சவூதி அரேபியா, அமெரிக்கா நிதியுதவி அளித்துள்ளன.

பல வாரங்களுக்கு முன்னர் தொடங்கிய இந்த சண்டையில் பல போர் நிறுத்தங்கள் முறிவடைந்துள்ளன. இந்த நிலையிலேயே ஜெட்டாவில் பேச்சை ஆரம்பித்துள்ளன. பேச்சுக்கு முன்னதாக இரு தரப்பு பிரதிநிதிகளும் “போர் நிறுத்தம் குறித்து விவாதிப்போம். மோதலுக்கு முற்றுப்புள்ளி வைக்கப்போவதில்லை”, என்று கூறினர்.

சூடான் தலைநகர் கார்ட்டூமிலேயே மோதல்கள் நடந்து வருகின்றன. இதனால், நூற்றுக்கணக்கான பொதுமக்கள் கொல்லப்பட்டனர். கிட்டத்தட்ட 4 இலட்சத்து 50 ஆயிரம் பொதுமக்கள் இடம்பெயர்ந்துள்ளனர். இவர்களில் ஒரு இலட்சத்து 15 ஆயிரத்துக்கும் மேற்பட்டவர்கள் அயல் நாடுகளில் தஞ்சம் அடைந்துள்ளனர் என்று சர்வதேச அமைப்புகள் தெரிவித்துள்ளன.

இதனிடையே, கடந்த 11 நாட்கள் போரில் மட்டும் 190 சிறுவர்கள் உயிரிழந்தனர். ஆயிரத்து 700 பேர் காயமடைந்துள்ளனர். எனினும், இந்தப் புள்ளிவிவரம் அதிகமானதாக இருக்கும் என்று ஐ. நா. சிறுவர் முகவர் அமைப்பு தெரிவித்துள்ளது. (ஐ)



பிரித்தானிய பேரரசு உள்ளிட்ட 15 நாடுகளின் அரசராக மூன்றாம் சார்ள்ஸ் நேற்று முன்தினம் லண்டன் வெஸ்ட்மினிஸ்ரர் அபே தேவாலயத்தில் நேற்று முன்தி னம் முடி சூடிக்கொண்டபோது...!

# கருவில் இருந்த சிசுவுக்கு மூளையில் சத்திர சிகிச்சை!

## அமெரிக்க மருத்துவர்கள் சாதனை

வாஷிங்டன், மே 08

தாயின் கருவில் இருந்த சிசுவுக்கு மூளையில் சத்திர சிகிச்சை செய்து அமெரிக்க மருத்துவர்கள் சாதனை புரிந்துள்ளனர்.

அமெரிக்காவை சேர்ந்த பெண் ஒருவர் பாஸ்டனில் உள்ள மருத்துவமனையில் தனது 34ஆவது வார கர்ப்ப கால பரிசோதனைக்காக சென்றிருக்கிறார். அப்போது வயிற்றில் இருக்கும் அவரின் சிசுவுக்கு மூளையிலிருந்து இதயத்துக்கு இரத்தத்தை எடுத்தும் செல்லும் நாளங்கள் வளர்ச்சி அடையாமல் இருந்ததை மருத்துவர்கள் கண்டறிந்தனர்.

மூளையில் ஏற்படும் இந்த வகையிலான பாதிப்பை மருத்துவர்கள் ‘கேலன் நரம்பு தவறான உருவாக்கம்’ (Vein of Galen malformation) என்று குறிப்பிடுகின்றனர். இந்த பாதிப்பு குறித்து மருத்துவர் ஆர்பாக் கூறும்போது,

“இந்த நிலையில் உள்ள அனைத்து குழந்தைகளும் 50 - 60 வீதமானவை உடனடியாக மிகவும் நோய்வாய்ப்படும். மேலும், 40 வீதம் இறந்து விடுகின்றன என்று தெரிய வருகின்றது. உயிர் பிழைக்கும் குழந்தைகளில் பாதி பேர் கடுமையான நரம்பியல் மற்றும் அறிவாற்றல் பிரச்னைகளை அனுபவிக்கிறார்கள்”- என்றார்.

இந்த நிலையில் அக்குழந்தைக்கு தாயின் வயிற்றிலேயே சத்திர சிகிச்சை செய்ய பாஸ்டனில் உள்ள டேரன் ஆர்பாக் தலைமையிலான மருத்துவர்கள் குழு முடிவு செய்தது. இதனைத் தொடர்ந்து வெற்றிகரமாக சிசுவுக்கு மருத்துவர்கள் சத்திர சிகிச்சையை செய்து முடித்துள்ளனர். சத்திர சிகிச்சை முடிந்து இரண்டு நாட்களுக்குப் பிறகு அக்குழந்தை பிறந்தது. டென்வர் என்று பெயரிடப்பட்டுள்ள அக்குழந்தை தற்போது நலமாக உள்ளது.

இந்த அறுவை சிகிச்சை காரணமாக, மூளை மற்றும் இதய நோயால் குழந்தை பாதிக்கப்படாமல் இருக்கும் என்று மருத்துவர்கள் தெரிவித்துள்ளனர். தாயின் வயிற்றில் உள்ள சிசுவுக்கு மூளையில் அறுவை சிகிச்சை நடப்பது உலகில் இதுதான் முதன்முறையாகும். (ஐ)

# 11 வருடங்களின் பின்னர் சென்னை அணி வெற்றி!



சென்னை, மே 08

மும்பை இந்தியன்ஸ் அணிக்கு எதிரான போட்டியில் 6 விக்கெட்கள் வித்தியாசத்தில் சென்னை அணி வென்றது. இதன்மூலம், மும்பை அணிக்கு எதிராக 11 ஆண்டுகளுக்குப் பிறகு சென்னை சேப்பாக்கத்தில் வெற்றியை பதிவு செய்தது சென்னை சுப்பர் கிங்ஸ் அணி.

16ஆவது ஐ. பி. எல். தொடரின் லீக் போட்டிகள் இறுதிக் கட்டத்தை நெருங்கி வருகின்றன. இந்நிலையில், நேற்று முன்தினம் சென்னை சேப்பாக்கம் மைதானத்தில் நடைபெற்ற ஆட்டத்தில் சென்னை சுப்பர் கிங்ஸ் மற்றும் மும்பை இந்தியன்ஸ் அணிகள் மோதின.

இதில் நாணயச் சுழற்சியில் வென்ற சென்னை அணி பந்துவீச்சைத் தேர்வு செய்தது. இதன்படி மும்பை அணி நிர்ணயிக்கப்பட்ட 20 ஓவர்கள் முடிவில் 8 விக்கெட்களை இழந்து 139 ஓட்டங்களைச் சேர்த்தது. 140 ஓட்டங்கள் எடுத்தால் வெற்றி என்ற இலக்குடன் களமிறங்கிய ருதுராஜ் கெய்க்வாட் 2 சிக்ஸர்களை விளாசி அதிரடி காட்டினார். ஆனால், பியூஸ் சாவ்லா வீசிய 4வது ஓவரில் பிடிகொடுத்து ருதுராஜ் ஆட்டமிழந்தது ரசிகர்களுக்கு ஏமாற்றம் அளித்தது.

டெவன் கொன்வே நிதான ஆட்டத்தை வெளிப்படுத்த, அவருக்கு கைகொடுக்காமல் அஜிங்க்யா ரஹானே 21 ஓட்டங்களில் கிளம்பினார். அம்பதி ராயுடு அவசரமாக வெளியேறினாலும், ஒரு சிக்ஸர் விளாசிய கையுடன் 12 ஓட்டங்களை அணிக்கு சேர்த்துகொடுத்தார். டெவன் கொன்வே - சிவம் துபே இணைப்பாட்டம் அமைத்து மும்பையின் பந்துகளை விளாசினர். அதிலும் சிவம் துபே விளாசிய இரு சிக்ஸர்களும் ரசிகர்களுக்கு உற்சாகம் அளித்தது. இப்படியாக 15 ஓவர்களில் 3 விக்கெட்களை இழந்து 123 ஓட்டங்களை அடைந்தது சென்னை.

21 பந்துகளில் 10 ஓட்டங்கள் எடுக்க வேண்டிய சூழலில் கொன்வே 44 ஓட்டங்களில் ஆட்டமிழக்க டோனி களத்துக்கு வந்தது அரங்கை அதிர வைத்தது. டோனி அடிப்பார் என பார்த்தால் துபே சிக்சர்ஸ் அடித்து திருப்புமுனை கொடுத்தார். 15 பந்துகளில் ஓர் ஓட்டம் எடுக்க வேண்டிய சூழலில் சிங்கிள் தட்டி வெற்றியை பதிவு செய்தார் டோனி.

மும்பை அணி தரப்பில் பியூஸ் சாவ்லா 2 விக்கெட்களையும் ஆகாஷ் மத்வால், டிரிஸ்டன் ஸ்டப்ஸ் ஆகியோர் தலா ஒரு விக்கெட்டை வீழ்த்தினர்.

முன்னதாக, அதன்படி மும்பை அணியின் தொடக்க ஆட்டக்காரராக களமிறங்கிய கமரூன் கிறீன் 2ஆவது ஓவரிலேயே 6 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தார். அவருடன் இணைந்து களமிறங்கிய இஷான் கிஷன் 7 ஓட்டங்களில் ஆட்டமிழக்க, அடுத்து களத்துக்கு வந்த கேப்டன் ரோஹித் ஷர்மா வழக்கம்போல ரன் எடுக்காமல் டக்அவுட் ஆனார்.

நேஹால் வதேரா - சூர்யகுமார் யாதவின் கூட்டணி 10 ஓவர் வரை விக்கெட் இழப்பில்லாமல் பார்த்துக்கொண்டது. 11ஆவது ஓவரில் ஜடேஜா வீசிய பந்துகள் சூர்யகுமார் யாதவின் விக்கெட்டை பதம் பார்க்க, 26 ஓட்டங்களுடன் அவரும் கிளம்பினார். 15 ஓவர்களில் 4 விக்கெட்களை இழந்த மும்பை வெறும் 93 ஓட்டங்களை மட்டுமே சேர்த்திருந்தது.

நேஹால் வதேரா சிறப்பாக ஆடினார். வதேரா 64 ஓட்டங்களில் போல்ட் ஆனார்.

அடுத்து வந்த டிம் டேவிட் 2 ஓட்டங்கள், அர்ஷாத் கான் ஓர் ஓட்டம், டிரிஸ்டன் ஸ்டப்ஸ் 20 ஓட்டங்கள் என கடைசி 2 ஓவர்களில் மட்டும் 3 விக்கெட்களை இழந்த மும்பை நிர்ணயிக்கப்பட்ட 20 ஓவர் முடிவில் 8 விக்கெட்களை இழந்து 139 ஓட்டங்களைச் சேர்த்தது.

சென்னையின் பந்துவீச்சில் மதீஷ பத்திரண 3 விக்கெட்களையும் தீபக் சஹார், துஷார் தேஷ்பாண்டே ஆகியோர் தலா 2 விக்கெட்களையும், ரவீந்திர ஜடேஜா ஒரு விக்கெட்டையும் வீழ்த்தினர்.

இதுவரை சென்னை சேப்பாக்கம் மைதானத்தில் மும்பை - சென்னைக்கு இடையிலான 7 போட்டிகள் நடந்துள்ளன. இதில் 2008 மற்றும் 2010ஆம் ஆண்டுகளில் மட்டுமே சென்னை வெற்றிபெற்றுள்ளது. 2012, 2013, 2015, 2019-ம் ஆண்டு மட்டும் இரண்டு போட்டிகள் நடந்தன. இதில் மும்பையே வென்றிருந்தது. இந்த நிலையில் கிட்டதட்ட 11 ஆண்டுகளுக்கு பிறகு சென்னை சேப்பாக்கம் மைதானத்தில் மும்பைக்கு எதிரான ஆட்டத்தில் வெற்றிபெற்றுள்ளது சென்னை.

(ஐ)

# பெங்களூர் அணியை வீழ்த்தியது டில்லி அணி!



புதுடில்லி, மே 08

றோயல் சலஞ்சர்ஸ் பெங்களூர் அணிக்கு எதிரான போட்டியில் டில்லி கப்பிட்டல்ஸ் அணி 7 விக்கெட்கள் வித்தியாசத்தில் அபார வெற்றி பெற்றுள்ளது.

182 ஓட்டங்கள் என்ற இலக்கை துரத்திய டில்லி அணியின் தலைவர் டேவிட் வோர்ணர் அதிரடி தொடக்கம் கொடுத்தாலும் விரைவாகவே ஆட்டமிழந்தார். பவர் பிளே முடிவதற்குள்ளாகவே 22 ஓட்டங்களில் வோர்ணர் தனது விக்கெட்டை பறிகொடுத்தார். வோர்ணர் நடையைக் கட்டினாலும் மற்றொரு தொடக்க வீரரான பில் சால்ட் பெங்களூர் பந்துவீச்சை துவம்சம் செய்தார்.

இதனால் டில்லி அணி 10 ஓவர்களில் 120 ஓட்டங்களை எட்டியது. மிட்செல் மார்ஷ் 26 ஓட்டங்கள் எடுத்து விக்கெட்டானர். இறுதி நேரத்தில் பில் சால்ட் 45 பந்துகளில் 87 ஓட்டங்கள் எடுத்து அணியின் வெற்றிக்கு உதவினார்.

இறுதிக்கட்டத்தில் ரூசோவ் அதிரடியாக ஓட்டங்கள் சேர்க்க டில்லி அணி 16.4 ஓவர்களில் 187 ஓட்டங்கள் எடுத்து 7 விக்கெட் வித்தியாசத்தில் வெற்றி பெற்றது. ரூசோவ் இறுதிவரை ஆட்டமிழக்காமல் 35 ஓட்டங்கள் சேர்த்தார்.

பெங்களூர் தரப்பில் ஹசல்வூட், ஹர்ஷல் பட்டேல், கரண் சர்மா தலா ஒரு விக்கெட் வீழ்த்தினர்.

முன்னதாக, நாணயச் சுழற்சியில் வென்ற பெங்களூர் அணி துடுப்பாட்டத்தைத் தெரிவு செய்தது. அந்த அணியின் தொடக்க ஆட்டக்காரர்களாக களமிறங்கிய பப் டு பிளசிஸ், விராட் கோலி இணை 10 ஓவர்களுக்கு விக்கெட் இழப்பின்றி ஓட்டங்களை சேர்த்தனர்.

11ஆவது ஓவரில் பப் டு பிளசிஸ் 45 ஓட்டங்களில் ஆட்டமிழக்க அடுத்து வந்த மக்ஸ்வெல் அதே ஓவரில் டக்அவுட்டானார். 15 ஓவர்கள் வரை தாக்குப்பிடித்த விராட் கோலி 55 ஓட்டங்களுடன் முகேஷ் குமார் வெளியேற்ற 16 ஓவர்கள் முடிவில் 3 விக்கெட்களை இழந்த ஆர்சிபி 137 ஓட்டங்களை சேர்த்திருந்தது.

விராட் கோலி விட்டுச் சென்ற இடத்தை நிரப்பும் வகையிலான மஹிபால் லோமரோரின் 3 சிக்ஸ்களுடனான அதிரடி ஆட்டம் பெங்களூர் ரசிகர்களுக்கு நம்பிக்கையைக் கொடுத்தது. கூடவே தினேஷ் கார்த்திக் தன் பங்குக்கு ஒரு சிக்ஸரை விளாசி இருப்பை பதிவு செய்துவிட்டு 11 ஓட்டங்களுடன் கிளம்பினார்.

அவருக்கு அடுத்து வந்த அனுஜ் ராவத் சிக்ஸர் அடிக்க நிர்ணயிக்கப்பட்ட 20 ஓவர்கள் முடிவில் 4 விக்கெட்களை இழந்த றோயல் சலஞ்சர்ஸ் பெங்களூரு அணி 181 ஓட்டங்களைச் சேர்த்தது. மஹிபால் லோமரோர் 54 ஓட்டங்களிலும், அனுஜ் ராவத் 8 ஓட்டங்களிலும் ஆட்டமிழக்காமல் களத்தில் இருந்தனர்.

டில்லி அணி தரப்பில் மிட்செல் மாஷ் 2 விக்கெட்டுகளையும், முகேஷ்குமார், கலீல் அஹமத் ஆகியோர் தலா ஒரு விக்கெட்டையும் வீழ்த்தினர். (ஐ)

# 19,000 ஓட்டங்கள் கடந்தார் புஜாரா

லண்டன், மே 08

கவுண்டி சம்பியன்ஷிப் போட்டியில் சதம் விளாசிய இந்தியாவின் புஜாரா, முதல் தர போட்டியில் 19,000 ஓட்டங்களை கடந்தார்.

இங்கிலாந்தில், கவுண்டி சம்பியன்ஷிப் பிரிவு-2 தொடர் நடக்கிறது. வொர்செஸ்டரில் நடக்கும் போட்டியில் வொர்செஸ்டர்ஷைர், சசக்ஸ் அணிகள் விளையாடுகின்றன. வொர்செஸ்டர்ஷைர் முதல் இன்னிங்ஸில் 264 ஓட்டங்கள் எடுத்தது. பின் முதல் இன்னிங்சை தொடக்கிய சசக்ஸ் அணிக்கு புஜாரா சதம் கடந்து கைகொடுத்தார். இவர், 189 பந்தில், ஒரு சிக்ஸர், 19 பௌண்ட்ரிகளுடன் 136 ஓட்டங்கள் எடுத்தார்.

தவிர இவர், அவுஸ்திரேலியாவின் ஸ்டீவ் ஸ்மித்துடன் இணைந்து 4ஆவது விக்கெட்டுக்காக 61 ஓட்டங்களை சேர்த்தார். சசக்ஸ் அணி முதல் இன்னிங்சில் 373 ஓட்டங்கள் குவித்தது.

சசக்ஸ் அணிக்காக இதுவரை 4 போட்டிகளில் விளையாடியுள்ள புஜாரா, மூன்று சதங்களைப் பதிவு செய்துள்ளார். சமீபத்தில் குளோசெஸ்டர்ஷைர் (151), துர்ஹாம் (115) அணிகளுக்கு எதிராக சதம் அடித்திருந்தார். யார்க் ஷெயார் அணிக்கு (18, 13 ஓட்டங்கள்) எதிராக மட்டும் சோபிக்கவில்லை.



புஜாரா இதுவரை 249 முதல் தர போட்டியில், 59 சதங்கள், 75 அரைசதங்களுடன் 19,126 ஓட்டங்கள் குவித்துள்ளார். இதன்மூலம் முதல் தர போட்டியில் 19 ஆயிரம் ஓட்டங்களை எட்டிய 6ஆவது இந்திய வீரர் என்ற பெருமை பெற்றார். ஏற்கனவே கவாஸ்கர் (25,834 ரன்), சச்சின் (25,396), டிராவிட் (23,794), லட்சுமண் (19,730), வசிம் ஜாபர் (19,410) இந்த மைல்கல்லை கடந்துள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது.

(ஐ)

# பாபர் அசாம் 5,000!

கராச்சி, மே 08

பாகிஸ்தான் கிரிக்கெட் அணியின் தலைவரான பாபர் அசாம் ஒருநாள் அரங்கில் விரைவாக 5,000 ஓட்டங்களை எடுத்த வீரர் என்ற சாதனையைப் படைத்துள்ளார்.

கராச்சியில் பாகிஸ்தான் - நியூசிலாந்து அணிகள் நேற்றுமுன்தினம் 4ஆவது ஒருநாள் போட்டியில் மோதின. இதில், பாகிஸ்தான் அணி 102 ஓட்டங்கள் வித்தியாசத்தில் நியூசிலாந்தை வீழ்த்தி தொடரை 4-0 என்று கைப்பற்றியது.

இந்தப் போட்டியில், அணித் தலைவர் பாபர் அசாம் மிக அருமை யாக ஆடி 107 ஓட்டங்களை எடுத்தார். இது அவரின் 18ஆவது ஒரு நாள் சதமாக அமைந்தது. இந்த நிலையில், ஒருநாள் அரங்கில் 5,000 ஓட்டங்களை விரைவாக எடுத்த வீரர் என்ற சாதனையை படைத்தார். அவர் 99 போட்டிகளில் 97 இன்னிங்ஸ்களில் ஆடி 18 சதங்கள், 26 அரைச்சதங்களுடன் இந்த சாதனையைப் படைத்தார். அவரின் சரா சரி 59.85 ஆகும். (ஐ)

# தமிழ் மக்களுக்கான தீர்வில் நான் அக்கறையாக உள்ளேன்!

## லண்டனில் ஜனாதிபதி ரணில்

**லண்டன், மே 08**
**தமிழ் மக்களின் அரசியல் தீர்வு விடயத்தில் நான் அக்கறையாக உள்ளேன் என்று லண்டன் சென்றுள்ள ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தமிழ் புத்திஜீவிகளுடனான சந்திப்பில் தெரிவித்துள்ளார்.**

அரசியல் தீர்வு விடயங்களை முன்னோக்கி கொண்டு செல்வதற்கு தமிழ் கட்சிகளும் அரசாங்கத்தோடு இணைந்து ஒத்துழைப்புக்களை வழங்க முன்வருவார்கள் என்று நான் நினைக்கிறேன். தமிழ் கட்சிகளுடனான சந்திப்பில் தமிழ் மக்களின் அரசியல் மற்றும் அபிவிருத்தி தொடர்பில் விரிவாகக் கலந்துரையாடவுள்ளேன் - என்றும்



ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க இதன்போது தெரிவித்தார் என்று கூறப்பட்டது.

(ஐ)

# டுபாய்க்கு பறந்தார் பஸில்



கொழும்பு, மே 08
முன்னாள் அமைச்சர் பஸில் ராஜபக்ஷ கட்டுநாயக்கா பண்டாரநாயக்க சர்வதேச விமான நிலையத்தின் ஊடாக வெளிநாட்டுக்கு நேற்று சென்றுள்ளார்.

அவருடன் அவரின் மனைவியும் சென்றுள்ளார். எமிரேட்ஸ் விமான சேவைக்கு சொந்தமான ஈ. கே.-649 விமானத்தின் ஊடாக அவர், டுபாய் நோக்கி பயணித்துள்ளார்.

(ஐ)

# நீர்கொழும்பில் வெள்ளம்; ஒருவரை காணவில்லை!



கொழும்பு, மே 08
கடந்த சில தினங்களாக தொடர்ந்து பெய்து வந்த அடை மழை காரணமாக நீர்கொழும்பு கட்டுவ, புவக்வத்த பிரதேசத்தில் வீடுகள் வெள்ளத்தில் மூழ்கியுள்ளன. ஒருவர் காணாமல் போயுள்ளார்.

வெள்ளம் காரணமாக சிலர் தமது வீடுகளை விட்டு வெளியேறி உறவினர்களின் வீடுகளில் தங்கியுள்ளனர். பலத்த மழை பெய்யும்போதும் ஆறு பெருக்கெடுத்து பாய்வதால் தங்கள் வீடுகளுக்குள் வெள்ளம் வருவதாக பிரதேச வாசிகள் தெரிவிக்கின்றனர்.

இதேவேளை, வெள்ளத்தில் சிக்கி ஒருவர் காணாமல் போயுள்ளார். முஹமத் சலீம் (வயது 59) என்பவரே இவ்வாறு காணாமல் போயுள்ளார் என்றும் தெரிவிக்கப்பட்டது.

(ஐ)

# அலங்கார பொருட்களின் இறக்குமதியை நிறுத்தியதால் 90 கோடி ரூபாய் சேமிப்பு

## ரஞ்சித் சியாம்பலப்பிட்டிய தகவல்



கொழும்பு, மே. 08
அலங்கார பொருட்கள் இறக்குமதி செய்வதை நிறுத்தினோம். அதனால் 90 கோடி ரூபாயை சேமித்துள்ளோம் என நிதி இராஜாங்க அமைச்சர் கலாநிதி ரஞ்சித் சியாம்பலப்பிட்டிய தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்-

அலங்கார பொருட்கள் இறக்குமதி செய்வதை நிறுத்தினோம். அலங்காரம் என்னும் விடயதானத்துக்குள்தான் வெசாக் அலங்காரங்களும் உள்ளடங்கியுள்ளன.

இதனால் அலங்காரங்கள் குறைந்துவிட்டனவா என்ற கேள்வி எனக்குள் உள்ளது.

இதற்கு முன்னர் பல பிரிவுகளாக 90 கோடி ரூபாய்க்கு அலங்காரங்கள் கொண்டு வரப்பட்டிருந்தன. ஆனால் இம்முறை அந்த 90 கோடி ரூபாயையும் தடுத்துள்ளோம். எம்மால் முடிந்ததை இந்த நாட்டுக்கு செய்யவேண்டும் என உறுதிகொள்ள வேண்டும்-என்றார்.

(அ)

# 20 இலட்சம் இந்திய சுற்றுலாவிகளை ஈர்ப்பதே இலங்கை அரசின் இலக்கு!



கொழும்பு, மே 08
இந்த ஆண்டில், 20 இலட்சம் இந்திய சுற்றுலாப் பயணிகளை ஈர்ப்பதை இலக்காகக் கொண்டுள்ளதாக சுற்றுலாத்துறை அமைச்சர் ஹரீன் பெர்ணான்டோ தெரிவித்தார்.

இந்த ஆண்டின் முதல் காலாண்டில் இலங்கை சுமார் 530 மில்லியன் அமெரிக்க டொலர்களை சுற்றுலாத்துறையின் மூலம் ஈட்டியுள்ளது.

கடந்த ஆண்டு இதே காலப் பகுதியில் இந்த வருமானம் 482.3 மில்லியனாக இருந்தது. இந்தநிலையில் 2023ஆம் ஆண்டின் இறுதியில் சுற்றுலாத்துறையில், மொத்தம் 3 பில்லியன் டொலர் வருவாய் கிடைக்கும் என எதிர்பார்ப்பதாக ஹரீன் பெர்னாண்டோ குறிப்பிட்டார்.

(ஐ)

# பாரவூர்தி கவிழ்ந்த விபத்தில் 3 சிறுவர் உட்பட 10 பேர் காயம்!

கொழும்பு, மே 08
பாரவூர்தி (லொறி) கவிழ்ந்து ஏற்பட்ட விபத்தில் 3 சிறுவர்கள் உட்பட 10 பேர் காயமடைந்து மருத்துமவமனையில் சேர்க்கப்பட்டுள்ளனர். இவர்களில் நால்வரின் நிலைமை கவலைக்கிடமாக உள்ளது என்று மருத்துவமனை வட்டாரங்கள் தெரிவித்தன.

களுத்துறை - பாணந்துறை - வலானை பகுதியில் நேற்று ஞாயிற்றுக்கிழமை காலை இந்த விபத்து இடம்பெற்றுள்ளது.

கொழும்பில் வெசாக் தோரணங்களை பார்ப்பதற்காக சென்றுவிட்டு மத்துகமை நோக்கி பயணித்து கொண்டிருந்த குழுவினரே இவ்வாறு விபத்தில் சிக்கினர்.

இவர்கள் பயணித்த பாரவூர்தி முப்பது அடி உயர மின் கம்பத்தையும் இரண்டு இரும்பு வேலிகளையும் மோதியதன் பின்னர் கவிழ்ந்து விபத்துக்கு உள்ளானது என்று பொலிஸாரின் விசாரணைகளில் தெரியவந்துள்ளது.

விபத்துக்கு உள்ளான பாரவூர்தியில் 17 பேர் பயணித்திருந்தனர் என்று விசாரணைகளில் தெரியவந்துள்ளது.

சாரதிக்கு ஏற்பட்ட நித்திரை கலக்கமே விபத்துக்குக் காரணம் என்று தெரிவிக்கப்பட்டது.

(ஐ)

# கண் சத்திர சிகிச்சை செய்த 10 பேர் பார்வையை இழந்தனர்!

## நுவரெலியா பொது மருத்துவமனையில்

நுவரெலியா, 08
கண் சத்திரசிகிச்சை செய்துகொண்ட 10 நோயாளர்களுக்கு பார்வை பாதிப்பு ஏற்பட்டுள்ளதாகத் தெரிய வந்துள்ளது.

பாதிக்கப்பட்டவர்கள் நுவரெலியா மாவட்ட பொது மருத்துவமனையில் சத்திரசிகிச்சை செய்துகொண்டவர்கள் என்று தெரியவருகின்றது.

கடந்த ஏப்ரல் மாதம் 5 ஆம் திகதி முதல் சத்திரசிகிச்சை செய்து கொண்டவர்கள் என்றும் பார்வை பாதிப்புக்குள்ளான 10 பேரும் மருத்துவமனையில் தொடர்ந்தும் தங்கவைக்கப்பட்டுள்ளனர் எனவும் தெரிவிக்கப்பட்டது.

ஓரளவு பார்வை குறைபாட்டை கொண்டிருந்த இவர்கள் அனைவரும் சிகிச்சையின் பின்னர் முழுமையாக பார்வையை இழந்துள்ளனர் என்று தெரிய வருகின்றது. பாதிக்கப்பட்ட அனைவரும் 50 வயதுக்கும் மேற்பட்டவர்களாவர்.

இந்தவிடயம் தொடர்பாக நுவரெலியா மாவட்ட பொது மருத்துவமனையின் பணிப்பாளர் மகேந்திர செனவிரட்னவிடம் வினவிய போது,

இவ்விடயம் உண்மை, தேசிய மருத்துவமனையிலிருந்து கிடைத்த ஒரு தொகுதி ப்ரெட்னிசொலோன் மருந்தை பயன்படுத்தியமையே இந்த சிக்கலுக்கு காரணம் என்று கருதுவதாகத் தெரிவித்தார்.

தற்போது அவர்கள் அனைவருக்கும் தீவிர சிகிச்சை வழங்குகிறோம். இன்னும் ஓரிரு தினங்களில் அவர்கள் குணமடைந்து விடுவார்கள். மேலதிக தகவல்கள் எதுவும் நாங்கள் கூற முடியாது. இந்த விடயம் தொடர்பான விசாரணைகளை முன்னெடுக்கப்பட்டுள்ளது அத்துடன் தற்போது கண் சத்திர சிகிச்சையை தற்காலிகமாக நிறுத்தி வைத்துள்ளோம் - என்றார். (ஐ)

# பெரமுன கட்சியின் உறுப்பினர்கள் ஐ. தே. கட்சியில் ஐக்கியமாகினர்!

வவுனியா, மே 08
வவுனியா மாவட்ட உள்ளூராட்சி மன்றங்களின் முன்னாள் உறுப்பினர்கள் குழு ஒன்று ஐக்கிய தேசியக் கட்சியில் இணைந்து கொண்டது.

இவர்களில் வவுனியா தெற்கு சபைக்கு இம்முறை போட்டியிடும் பொதுஜன பெரமுனவின் முதன்மை வேட்பாளர் கசுன் சுமதிபாலவும் ஒருவர்.

கசுன் சுமதிபால கடந்த உள்ளூராட்சி மன்ற தேர்தலில் சிறீ லங்கா பொதுஜன பெரமுனவில் போட்டியிட்டு வெற்றிபெற்ற உள்ளூராட்சி மன்றத்தின் தலைவராகவும் செயல்பட்டிருந்தார்.

ஐக்கிய தேசியக் கட்சியின் பொதுச் செயலாளர் பாலித ரங்கே பண்டார வவுனியா மாவட்டத்துக்கு நேற்று முன்தினம் வந்திருந்த நிலையில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் வேலைத்திட்டத்தை வலுப்படுத்தும் நோக்கில் ஐ. தே. கவில் இணைந்து கொள்வதாக கசுன் சுமதிபால அறிவித்துள்ளார். அத்துடன், பொதுஜன பெரமுனவின் பல முன்னாள் பிரதேச சபை உறுப்பினர்களும் ஐக்கிய தேசியக் கட்சியில் ஐக்கியமாகினர். இதேவேளை, முன்னாள் பிரதி அமைச்சர் பிரேமரத்ன சுமதிபாலவும் ஜனாதிபதிக்கு ஆதரவளிப்பதாக தெரிவித்துள்ளார். (ஐ)

## கிளிநொச்சி...

546 குடும்பங்க ளும், பூநகரி பிரதேச செயலாளர் பிரிவில் 390 குடும்பங்களும், பச்சி லைப்பள்ளி பிர தேச செயலாளர் பிரிவில் ஆயிரத்து 327 குடும்பங்களும் உணவு நெருக்கடி நிலை யால் பாதிக்கப்பட்டுள் ளன.

இதேவேளை, கரைச்சியில் 5 வயதுக்கு உட்பட்ட 54 சிறுவர்களும் 5 முதல் 16 வயது வரையான ஆயிரத்து 234 சிறுவர்களும், கண்டாவளையில் 5 வயதுக்கு உட்பட்ட 180 சிறுவர்களும், 5 முதல் 16 வயது வரையான 704 சிறுவர்களும், பூநகரியில் 5 வயதுக்கு உட்பட்ட 261 சிறுவர்களும், 5 முதல் 16 வயது வரையான 507 சிறுவர்களும், பச்சிலைப் பள்ளியில் 5 வயதுக்கு உட்பட்ட 73 சிறுவர்களும், 5 முதல் 16 வயது வரையான 320 சிறுவர்களும் போசாக்கு இன்மையால் பாதிக்கப்பட்டுள்ளனர்.

இந்த நான்கு பிரதேச செயலாளர் பிரிவுகளிலும் 318 வரையான கர்ப்பவதி தாய்மார்களும் உணவு நெருக்கடி மற்றும் போசாக்கு இன்மையை எதிர்கொண்டு வருகின்றனர். (ஐ)

## வெடுக்கு...

இந்த நிகழ்வில் அனைவரும் பெரும் மக்கள் திரள்வாகப் பங்கேற்குமாறு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.

அண்மைக்காலமாக சைவ ஆலயங்கள் பௌத்த ஆக்கிரமிப்புக்கு உள்ளாகி வரும் எமது நிலத்தையும் - அடையாளத்தையும் பேணிக் காக்கும் விதத்தில் இந்த நிகழ்வில் சகலரும் பங்கேற்க வேண்டும் என்று அனைத்துத் தரப்பினரும் அழைப்பு விடுத்துள்ளனர்.

வெடுக்குநாறிமலை ஆதிசிவன் ஆலய விக்கிரகங்கள் கடந்த மார்ச் 26ஆம் திகதி இனந்தெரியாதவர்களால் உடைத்தெறியப்பட்டன. இதற்கு எதிராக கடும் கண்டனங்கள் எழுந்தன. இந்த நிலையில், நீதிமன்ற உத்தரவின் அடிப்படையில் அண்மையில் விக்கிரங்கள் மீண்டும் பிரதிஷ்டை செய்யப்பட்டன என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ)

## கந்தரோடை...

பெற்று வருகின்றது. இந்த நிலையிலேயே இந்தப் போராட்டம் நேற்று முன்னெடுக்கப்பட்டது.

அங்குள்ள தனியார் காணி ஒன்றை பாராளுமன்ற உறுப்பினர் திலங்க சுமதிபால கொள்வனவு செய்து விகாரை கட்டுவதற்காக வழங்கியுள்ளார். அங்கு விகாரை கட்டும் பணிகள் ஆரம்பிக்கப் படவுள்ளன என்பதும் குறிப்பிடத்தக்கது. (ஐ)

## மக்கள் ...

அதிகரிக்காமல் இந்த நிலையை எதிர்கொள்ள முடியாது.

ஆனால், இவ்வாறு வருமானத்தை பெருக்குவது ஒருபோதும் சாத்தியமில்லை. இதனால் மக்கள் கடும் நெருக்கடிக்கு உள்ளாகுவர்.

இந்த காலகட்டத்தில் 119வீதம் வரிச்சுமையை மக்கள் மீது திணிக்க அரசு திட்டமிட்டுள்ளதால் நிலைமை மேலும் மோசமாகும்.

2023 ஆம் ஆண்டு 27 ஆயிரத்து 871 பில்லியன் ரூபாயாக இருந்த வரிச்சுமை 2028 ஆம் ஆண்டில் 44 ஆயிரத்து 601 பில்லியன் ரூபாயாக உயரும். இந் நிலையை சமாளிக்க, ஒருவரின் உணவு நுகர்வு அளவை பாதியாகக் குறைக்க வேண்டும். இது இடம்பெற்றால், பெரும்பாலான மக்கள் உணவுப் பற்றாக் குறையால் நோய் வாய்ப்பட்டு மரணமடைவார்கள்.

இந்த பேரிடரில் இருந்து மக்களை மீட்பதற்கு அரசாங்கம் அதிக முயற்சியையும் கூடுதல் செலவையும் செய்ய வேண்டி இருக்கும். தற்போது பொருளாதாரம் 3 முதல் 4வீதம் வரை சுருங்கி வருவதால், மக்களுக்கு நிவாரணம் வழங்குவது கடினம் - என்றும் கூறினார். (ஐ-சி)

## பணத்துக்காக...

முன்னர் வரை இங்கு தமிழ் பௌத்தர்கள் வாழ்ந்தார்கள். தமிழ் பௌத்த சின்னங்களை ஆக்கிரமிப்பதற்காகத்தான் பௌத்த விகாரைகள் தற்போது கட்டப்பட்டு வருகின்றன. பௌத்தர்களே இல்லாத இடங்களில் அவை கட்டப்படுகின்றன.

விகாரைகளை கட்டி, அதை பராமரிக்க மெதுமெதுவாக ஆட்களை கொண்டு வந்து, சிங்கள பிரதேசங்களாக்கும் நடவடிக்கைகள் நடந்து வருகின்றன. இந்த ஆட்சியில், பல விடயங்கள் நிறுத்தப்படலாம் என்று பலர் நினைத்தனர். ஆனால், நிறுத்தப்படவில்லை. ஜனாதிபதிக்கு பலமுறை முறையிட்டும் அது கவனிக்கப்படவில்லை. இவற்றை நிறுத்த நாம் முயற்சிகள் எடுக்க வேண்டும். பேச்சு, சாத்வீக வழி, பாராளுமன்றம் ஊடாக இதனை முயற்சிக்க வேண்டும். அவற்றை செய்து கொண்டிருந்தாலும், அவற்றின் வேகம் போதாது என நினைக்கிறேன்.

நான் கந்தரோடையில் இருக்கிறேன். இந்த கிராமத்திலுள்ள பெரும்பாலான மக்களுக்கு இந்த பிரச்னை சரியாகப் புரியவில்லை. எப்படி சிங்கள - பௌத்த மத அடையாள மாற்ற முயற்சிகள் நடக்கின்றன என்பது அவர்களுக்கு விளங்கவில்லை.

அது மாத்திரமல்ல, சற்று அதிக பணம் கிடைக்கிறது என்றால் காணிகளை விற்கிறார்கள். முக்கியமாக வெளிநாட்டில் உள்ளவர்கள். வெளிநாட்டில் உள்ள ஒருவர்தான் கந்தரோடையில் விகாரை கட்டப்படவுள்ள காணியையும் விற்றவர். வெளிநாட்டிலுள்ள பலர், இங்குள்ள காணிகளை பிற சமூகத்தவர்களுக்கு விற்பதால் ஏற்படும் அபாயத்தை புரிந்து கொள்ளாமல் தொடர்ந்து விற்று வருகிறார்கள். சில இடங்களில் காணிகள் விற்கப்பட்டுள்ளதை அறிகிறோம். நல்லூரிலும் காணிகள் விற்கப்படுகின்றன.

இங்குள்ள இராணுவத்தினர் வெறும் காணிகளை அடையாளம் கண்டு, அவற்றின் உரிமையாளர்களை அடையாளம் கண்டு, அவற்றை வாங்கும் செயல்பாட்டில் ஈடுபடுகிறார்கள்.

ஆகவே, சிறியளவு பணம் அதிக மாக கிடைக்கிறது என்பதற்காக மாற்று சமூகத்தினருக்கு விற்பதை நிறுத்துங்கள். இங்கு பௌத்த விகாரை கள் கட்டுவதற்கு எதிராக போராட்டங் கள் நடத்தப்பட வேண்டும். இப்போது நடக்கும் போராட்டங்கள் மிகச்சிறியவை. ஐந்து, பத்துப் பேருடன் நடக்கும் போராட்டங்களால் அரசாங்கத்துக்கு நெருக்கடி ஏற்படாது. பெருமெடுப்பிலான போராட்டங்களை அனைவரும் இணைந்து மேற்கொள்ள வேண்டும்

பௌத்த விகாரைகள் கட்டப்படுவது என்பது ஒரு பிரச்னை அல்ல. ஆனால், தமிழர்கள் வாழும் பகுதிகளை ஆக்கிரமித்து கட்டப்படுகின்றன என்பதே குறிப்பிடத்தக்க விடயமாகும்.

பௌத்தர்கள் இல்லாத இடத்தில் விகாரை ஒன்றை அமைத்து அந்த விகாரையை பேணி பாதுக்காக்கும் வகையில் பௌத்த பிக்குகளை கொண்டு வந்து கொஞ்சம் கொஞ்சமாக தமிழர் பகுதிகள் ஆக்கிரமிக்கப்படுகின்றன.

இந்த அரசாங்கத்திடமிருந்தாவது, தமிழர்களின் பிரச்னைக்கு தீர்வு கிடைக்கும் என எதிர்ப்பார்க்கப்பட்ட போதிலும் அதற்கான எந்தவித நடவடிக்கையில் முன்னெடுக்கப்படவில்லை - என்றார். (ஐ-03)

## தேர்தல்கள்...

ஆனால், தற்போது உள்ளூராட்சி சபைத் தேர்தல் காலவரையறையின்றி ஒத்திவைக்கப்பட்ட நிலையில், நிபந்தனையின் கீழ் அரசமைப்பு ரீதியாக தேர்தல் ஆணைக்குழுவை நியமிக்க முடியும் என்று சபாநாயகர் மகிந்த யாப்பா அபேவர்த்தன தெரிவித்துள்ளார்.

எனவே, நியமிக்கப்பட முடியாத ஏனைய அனைத்து ஆணைக்குழுக்களும் அடுத்த வாரத்தில் நியமிக்கப்படும் என்று எதிர்பார்க்கப்படுவதாகவும் சபாநாயகர் மேலும் தெரிவித்துள்ளார். (ஐ-சி)

# மேற்கு நாடுகளை ஆதரிக்காததாலேயே மகிந்த, கோட்டாபய பதவி இழந்தனர்!

### மொட்டுக் கட்சி எம். பி. சொல்கிறார்

கொழும்பு, மே 08

“மேற்கு நாடுகளுக்குத் தேவையான வகையில் செயல்படாததால்தான் மகிந்த, கோட்டாபய ஆகியோர் பதவிகளில் இருந்து விரட்டப்பட்டனர்” - என்று மொட்டுக் கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் டி. வீரசிங்க தெரிவித்தார்.

அவர் மேலும் கூறுகையில்,

பல சந்தர்ப்பங்களில் இந்த நாடு சர்வதேச அழுத்தத்துக்கு உள்ளாகி இருக்கின்றது. போர்க் காலத்திலும் அப்படித்தான். போரை நிறுத்துமாறு பல நாடுகள் அழுத்தம் கொடுத்தன. அதை முறியடித்ததால்தான் போரை வெற்றிகொள்ள முடிந்தது.

பொருளாதாரப் பிரச்னை தலைதூக்கிய போது மக்கள் வீதிக்கு இறங்கிப் போராடினர். இந்த மக்களின் போராட்டத்தைப் பயன்படுத்தி ஆட்சி மாற்றத்தை ஏற்படுத்துவதற்குச் சிலர் நடவடிக்கை எடுத்தனர். ஆனால், அவர்களால் அந்த இலக்கைப் பூரணப்படுத்த முடியவில்லை.

மேற்கு நாடுகளுக்குத் தேவையான வகையில் செயற்படாததால் மஹிந்த, கோட்டாபய ஆகியோர் பதவிகளில் இருந்து நீக்கப்பட்டனர் என்று நாங்கள் நம்புகின்றோம். இது தொடர்பில் விமல் வீரவன்ஸ கூறிய விடயங்களில் நாம் உடன்படுகின்றோம். அவர் கூறிய மேலும் சில விடயங்கள் பற்றி எமக்கு எதுவும் தெரியாது.

மஹிந்த, கோட்டாபய ஆகியோர் பதவியில் இருந்து விலகியதும், எதிர்க்கட்சித் தலைவர் உள்ளிட்ட பலரை அழைத்துப் பதவியை ஏற்குமாறு கூறினோம். அவர்கள் வரவில்லை. இறுதியில் ரணிலே பாரமேற்றார். இன்று அரசியல் ஸ்திரத்தன்மை ஏற்பட்டுள்ளது. அதனால்தான் சர்வதேச நாணய நிதியத்தின் நிதி எமக்குக் கிடைத்தது.

பழைய நிலைமை இப்போது இல்லை. ஆர்ப்பாட்டங்கள் இல்லை. பெற் றோல் வரிசை இல்லை. மின் வெட்டு இல்லை. ஜனாதிபதி செய்கின்ற நல்ல வேலைத்திட்டங்களுக்கும் நாம் ஆதரவு வழங்குவோம். ஆனால், பிழையான திட்டங்களை ஏற்கமாட்டோம்.” - என்றார். (ஐ)

## தேசிய...

மக்கள் சக்தி இணையுமா என்று அவரிடம் கேட்ட போதே இவ்வாறு கூறினார்.

மேலும், “அரசாங்கம் ஏனைய கட்சிகளில் உள்ள எம்.பிக்களுக்கு வலை வீசி வருகின்றது. இந்த அரசாங்கத்துக்கு பெரும்பான்மை ஆதரவு இருந்தால் - மொட்டுக் கட்சியின் முழுமையான ஆதரவு இருந்தால் எதற்காக அடுத்த கட்சிகளின் எம்.பிக்களுக்கு வலை வீச வேண்டும்?

மக்கள் கஷ்டத்தில் இருக்கின்ற இந்தச் சூழ்நிலையில் கோடிக்கணக்கான பணம் கொடுத்து எம். பிக்களை வாங்குவதற்கான தேவை ஜனாதிபதிக்கு ஏன் எழுந்துள்ளது?

அரசாங்கத்துக்குள் சிக்கல் எழுந்துள்ளது. அது ஆட்டம் காணத் தொடங்கியுள்ளது. இருக்கின்ற அரசாங்கமே உடையும் நிலையில் இருக்கும் போது தேசிய அரசாங்கம் எப்படிச் சாத்தியப்படும்?

தேசிய அரசாங்கம் உருவானாலும் - உருவாகாவிட்டாலும் நாம் அதில் இணை யமாட்டோம். தேர்தலில் வெற்றி பெற்று முழுமையான மக்கள் ஆணை ஒன்றைப் பெற்ற சக்தி வாய்ந்த அரசாங்கத்தை நாம் அமைப்போம்.” - என்றார். (ஐ)

## வடக்கு...

தன, பாலித ரங்கே பண்டார, முன் னாள் மாகாண சபை அமைச்சர் செந்தில் தொண்டமான், மூத்த நிர்வாக அதிகாரி பி. எஸ். எம். திருமதி சார்ள்ஸ் ஆகியோரே இவ்வாறு பரிந்துரைக்கப்பட்டுள்ளனர்.

இந்த நிலையில், வட மாகாண ஆளுநர் ஜீவன் தியாகராஜா, கிழக்கு ஆளுநர் அநுராதா யஹம்பத், வடமேல் ஆளுநர் வசந்த கரன்னகொட, சப்ரகமுவ ஆளுநர் டிக்கிரி கொப்பேகடுவை, ஆகியோரை தமது பதவிகளில் இருந்து விலகுமாறு ஜனாதிபதி அறிவித்துள்ளார்.

ஆனால், இவர்கள் பல்வேறு அரசியல் தலைவர்களை நாடிச் சென்று இந்த முடிவை மாற்றியமைத்து தருமாறு கோரி வருகின்றனர். எது எப்படி இருப்பினும் பிரித்தானிய பயணத்தை முடித்துக் கொண்டு நாடு திரும்பும் ஜனாதிபதி நாளை செவ்வாய்க்கிழமை ஆளுநர்களை நியமிப்பார் என்று அறிய வருகின்றது. (ஐ-சி)

# வெளிநாட்டு பணியாளருக்கு ரூ.20 இலட்சம் கடன்

கொழும்பு, மே 08

வெளிநாட்டில் பணிபுரியும் இலங்கையர்களுக்கு 20 இலட்சம் ரூபாய்க்கு மேலதிகமாக பெற்றுக்கொள்ளும் கடனுக்கு 4 சதவீத வட்டியில், கடன் வசதிகளை வழங்க அமைச்சரவை இணங்கியுள்ளதாக தொழிலாளர் மற்றும் வெளிநாட்டு வேலைவாய்ப்பு அமைச்சர் மனுஷ நாணயக்கார தெரிவித்துள்ளார்.

அதன்படி, கடன் வழங்கும் திட்டத்தை விரைவில் தொடங்க முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

அரச மற்றும் வர்த்தக வங்கிகளுக்கு குறைந்த வட்டியில் கடன் வழங்குவதில் சிக்கல் ஏற்படாத வகையில் இந்த கடன் திட்டம் அமுல்படுத்தப்படும் - என்றும் அவர் கூறினார். (ஐ)

## வைகாசி...

ரியர் சி. சிறீசற்குணராசா.

வைகாசி விசாகம் என்பது முருகப் பெருமான் பிறந்த நாள். இந்த நாள் எமக்கு உரியது. இதனை சிங்களவர்கள் வெசாக் என்று கொண்டாடுகிறார்கள். ஆனால், இந்த நாள் எமக்கு உரியது. புத்த பகவான் காயாவில் இந்துக் குடும்பத்திலேயே பிறந்தார்.

இந்தப் பொருளாதார நெருக்கடியிலும் பால் உற்பத்தியில் யாழ்ப்பாணம் தன்னிறைவு கண்டுள்ளது. இதற்கு இங்குள்ள மக்களின் அயராத உழைப்பே காரணம் - இவ்வாறு நேற்று முன்தினம் கல்வியங்காடு ஞானபாஸ்கரோதய சனசமூக நிலையத்தின் 103ஆவது ஆண்டு நிறைவு விழாவில் விருந்தினராகக் கலந்து கொண்டபோது தெரிவித்தார். (ஐ)

## மின்சாரம்...

வில் இந்தச் சம் பவம் இடம்பெற்றுள்ளது.

கண்ணதாசன் இராகு லன் (வயது -18) என்ப வரே இவ்வாறு உயிரிழந்தார். உயிரிழந்தவர் யாழ்ப்பாணம் மத்திய கல்லூரியில் க. பொ. த. உயர்தரப் பிரிவில் கல்வி கற்கும் மாணவராவார்.

இந்தச் சம்பவம் தொடர்பில் மேலும் அறியவருவதாவது,

நேற்று முன்தினம் இரவு யாழ்ப்பாணம் பகுதியில் கடும் மழை பெய்தது. இந்த நிலையில், அவர் வீட்டில் வளர்த்த ஆடு குட்டி ஈன்றுள்ளது. அதனை அவர் வேறு இடத்துக்கு மாற்ற முயன்றுள்ளார்.

அப்போது அருகில் இருந்த பலா மரத்தில் பொருத்தப்பட்டிருந்த மின் குமிழ் மூலம் ஏற்பட்ட மின் கசிவு மழை நீருடன் தொடர்புபட்டதால் மின்சாரம் தாக்கி இளைஞர் பலியானார். (ஐ-03)

ஈழநாடு
Eelanadu ඊළනාඩු

# சமஷ்டி குறித்து பேசுவதானால் பேச்சில் நாங்கள் பங்கேற்போம்

## தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி



யாழ்ப்பாணம், மே 08

**தமிழ் மக்களின் அதிகாரப் பகிர்வு தொடர்பான பேச்சு சமஷ்டி அடிப்படையில் முன்னெடுப்பதற்கு தயார் என்று ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க பகிரங்கமாக அறிவித்தால் நாம் பேச்சில் பங்கேற்பதற்கு தயாராகவுள்ளோம் என்று தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் தலைவரும் யாழ். மாவட்ட பாராளுமன்ற உறுப்பினருமான கஜேந்திரகுமார் பொன்னம்பலம் தெரிவித்துள்ளார்.**

தமிழ் கட்சிகளுடன் பேச்சு நடத்த எதிர்வரும் 11, 12, 13ஆம் திகதிகளில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க அழைப்பு விடுத்துள்ளார். இந்நிலையில், அந்த அழைப்பை ஏற்று பேச்சில் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி பங்கேற் குமா என்பது தொடர்பில் வினவியபோதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் பேச்சுக்கான அழைப்பு தொடர்பில் அனைவரும் விழிப்புடன் இருக்க வேண்டியது அவசியமாகின்றது. அவர் மக்கள் ஆணையற்ற ஒருவர். இவ்வாறான பேச்சுகளை செய்வதன் ஊடாக அவர் தனக்கான அங்கீகாரத்தை உறுதிப்படுத்த முனைகின்றார் என்பது முதலாவது விடயமாகின்றது.

இதேநேரம், சுதந்திர தினத்துக்கு முன்னதாக தீர்வை வழங்குவேன் என்று கூறி அதற்கு முன்னதாக முன்னெடுத்த பேச்சுகளின்போது அவர் ஒற்றையாட்சிக்குள் 13ஆவது திருத்தத்தை அடிப்படையாக வைத்தே இனப்பிரச்சனைக்கு தீர்வை வழங்க முடியும் என்று கூறினார். அதன் பின்னர் பௌத்த தேரர்கள் போராட்டத்தை முன்னெடுத்த போது அந்த விடயத்தையும் கைவிட்டுள்ளார்.

அத்துடன், எம்முடன் நடத்திய பேச்சின்போது, இனப்பிரச்னைக்கான தீர்வு குறித்து அவர் மாவட்ட சபை அடிப்படையிலேயே தீர்வை வழங்கும் மனோநிலையிலேயே இருந்தார் என்பதை அறிந்துகொண்டுள்ளோம்.

இவ்வாறானதொரு பின்னணியை உடைய நபரின் அழைப்பை ஏற்று நாம் எவ்வாறு பேச்சில் பங்கேற்பது என்பது பெருங்கேள்வியாகும்.

அதேநேரம், ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, இதய சுத்தியுடன் இனப்பிரச்னைக்கு தீர்வு காண்பதற்கு விரும்புவாராக இருந்தால், எமது மக்களின் அபிலாஷைகளை நிறைவேற்றுவேன் என்ற ஆகக் குறைந்த நம்பிக்கையை வெளிப்படுத்தும் வகையில், சமஷ்டி அடிப்படையில் அதிகாரங்களை பகிர்ந்தளிப்பது தொடர்பில் தமிழ் மக்களின் பிரதிநிதிகளுடன் பேசப் போகின்றேன்' என்பதை பகிரங்கமாக அறிவிக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கின்றோம்.

இந்த விடயத்தை ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க நிறைவேற்றுவாராக இருந்தால் நாம் பேச்சு மேசையில் அமர்வதற்கு தயாராக உள்ளோம் - என்றார். (ஐ)

# ஆளுநர் பதவியை தக்கவைப்பதற்கு உதவுமாறு கோட்டாவிடம் கோரிக்கை

கொழும்பு, மே 08

பதவி பறிக்கப்பட்ட ஆளுநர்கள் தமது பதவியில் தொடர்ந்து அமர உதவுமாறு முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவிடம் கோரியுள்ளனர் என்று தகவல்கள் வெளியாகியுள்ளன.

முன்னாள் ஜனாதிபதியின் நெருங்கிய வட்டாரங்களே இந்த தகவலை தெரிவித்தன.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தனது பிரித்தானிய பயணத்தின் பின்னர் புதிய ஆளுநர்களை நியமிப்பார் என்று தெரிவிக்கப்படுகின்றது.

மே 10ஆம் திகதிக்குப் பிறகு புதிய நியமனம் இடம்பெறும் என்று வட்டாரங்கள் உறுதிப்படுத்துகின்றன.

ஆனால், இந்த செய்தியால் பதவி பறிபோனதால் ஆளுநர்கள் கலக்கம் அடைந்துள்ளதாக தெரியவருகின்றது. இதில், ஒரிருவர் முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவிடம் முறையிட்டுள்ளனர்.

"ஐயா, நீங்கள் எங்களை இந்தப் பதவிகளில் நியமித்தீர்கள். தயவு செய்து இந்த பதவிகளை எங்களுக்காக பாதுகாக்கவும் - தயவு செய்து இந்த பதவிகளில் தொடர்ந்து அமர எமக்கு உதவுங்கள்.",

அவ்வாறானதொரு கோரிக்கை ஆளுநர்களிடம் இருந்து கிடைக்கப்பெற்றபோது, அதற்கு முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவும் பதிலளிக்க வேண்டி இருந்ததாக தகவல்கள் தெரிவிக்கின்றன.

"தற்போது நான் அரசியலில் இருந்து விலகி இருக்கின்றேன். ஜனாதிபதி நல்ல முடிவை எடுத்துள்ளார். எனது காலத்தில் எனக்கு உதவியாகவே உங்களை அந்தப் பதவிகளுக்கு நியமித்தேன். தற்போது அரச தலைவர் பொருத்தமான முடிவை எடுத்துள்ளார். எனக்கும் இதற்கும் எந்த தொடர்பும் இல்லை" என்று கூறியுள்ளாராம். (ஐ-சி)

# காப்புறுதி பணத்துக்காக மனைவியை திட்டமிட்டு கொன்றவருக்கு மறியல்!

கொழும்பு, மே 08

காப்புறுதி இழப்பீட்டைப் பெறுவதற்காக 40 வயது மனைவியைக் கொலை செய்த 25 வயதுடைய சந்தேகநபரான கணவர் எதிர்வரும் 11ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார்.

பிட்டிகல பொலிஸாரால் கைது செய்யப்பட்ட சந்தேக நபர் எல்பிட்டிய பதில் நீதிவான் துமிந்த லெய்வல முன்னிலையில் முற்படுத்தப்பட்டபோதே அவர் இந்த உத்தரவை பிறப்பித்தார்.

காலி, அதிமலே முகவரியில் வசிக்கும் 25 வயதுடைய நபரே இவ்வாறு விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார்.

முன்னதாக எல்பிட்டிய பிரதேசத்தில் இடம்பெற்ற வாகன விபத்தில் பெண்ணொருவர் உயிரிழந்த சம்பவம் திட்டமிட்ட கொலை என்றும் தனது மனைவியின் 50 இலட்சம் ரூபாய் காப்புறுதி பணத்தை பெற்றுக் கொள்வதற்காக குறித்த பெண்ணின் கணவரே இந்தக் கொலையைச் செய்துள்ளார் என்றும் பொலிஸார் கண்டுபிடித்திருந்தனர்.

கடந்த ஏப்ரல் மாதம் 30 ஆம் திகதி எல்பிட்டிய - பிடிகல பிரதான வீதியில் மாபலகம, நியகம பிரதேச செயலக அலுவலகத்துக்கு அருகில் இடம்பெற்ற வாகன விபத்தில் 40 வயது பெண் ஒருவர் உயிரிழந்தார்.

குறித்த பெண்ணின் கணவர் தனது நண்பரின் உதவியுடன் விபத்தை ஏற்படுத்தி அவரை கொலை செய்தார் என்று ஆரம்பக்கட்ட விசாரணைகளில் இருந்து தெரியவந்ததோடு, சந்தேக நபர் கைது செய்யப்பட்டு இருந்தார்.

மேலும் விபத்தை ஏற்படுத்த சந்தேக நபர் தனது நண்பருக்கு 20 இலட்சம் ரூபாயை வழங்குவதாக வாக்குறுதி அளித்தார் என்று தெரியவந்ததாக பொலிஸார் தெரிவிக்கின்றனர். பாதிக்கப்பட்ட பெண் சில காலம் வெளிநாட்டில் வேலை செய்து விட்டு நாடு திரும்பியிருந்தார். மேலும் அவரது பெயரில் 5 மில்லியன் ரூபாய் பெறுமதியான நான்கு ஆயுள் காப்புறுதிகள் இருந்துள்ளன.

காப்பீட்டுத் தொகையைப் பெற்றுக் கொள்வதற்காக சந்தேக நபர் தனது நண்பருடன் இணைந்து விபத்தைத் திட்டமிட்டுள்ளதுடன் குறித்த பெண் தனது உறவினரை சந்திக்க சென்றுக்கொண்டிருந்த போது அவர் மீது லொறியை மோதச் செய்து விபத்தை ஏற்படுத்தி கொலை செய்தார்.

சந்தேக நபரின் நண்பராக கருதப்படும் லொறி சாரதி சம்பவ இடத்திலிருந்து தப்பிச் சென்றுள்ளதோடு தற்போது பொலிஸாரால் தேடப்பட்டு வருகிறார் என்பதும் குறிப்பிடத்தக்கது. (ஐ-சி)

# ஆளும் கட்சியின் வரிசையில் மீண்டும் அமர்ந்த ஜீ. எல். பீரிஸ்!

கொழும்பு, மே 08

எதிர்க்கட்சி வரிசையில் உள்ள முன்னாள் அமைச்சரான ஜீ. எல். பீரிஸ் பழக்கதோசத்தில் ஆளும் கட்சி ஆசனத்தில் போய் அமர்ந்ததால் அரசியல் மட்டத்தில் பெரும் பரபரப்பு ஏற்பட்டதாக கொழும்பு வட்டாரங்கள் தெரிவித்தன.

அண்மையில் பாராளுமன்றில் சுவாரசியமான சம்பவம் ஒன்று இடம்பெற்றுள்ளது.

பேராசிரியர் ஜீ. எல். பீரிஸ் தவறுதலாக பாராளுமன்றத்தில் அரசாங்க கட்சி அமரும் ஆசனத்தில் அமர்ந்துள்ளார்.

பாராளுமன்றத்தின் எதிர்க்கட்சியின் பகுதி வழியாக பாராளுமன்றத்துக்குள் நுழையாமல், ஆளும் கட்சி வழித்தடத்தின் வழியாகச் சபைக்குள் நுழைந்த பேராசிரியர், ஆளும் கட்சியின் முன்வரிசையில் இருந்த தனது பழைய ஆசனத்தில் அமர்ந்தார்.

கடந்த காலங்களில் பொதுஜன பெரமுனவின் தலைவர் பதவி தொடர்பான பிரச்னைகளால் ஜீ. எல். பீரிஸ் மீண்டும் கட்சி மாறிவிட்டார் என்று சில பாராளுமன்ற உறுப்பினர்கள் நினைத்தனர் என்று தெரியவருகின்றது.

எவ்வாறாயினும், அரசியல் வட்டார தகவல்களின் படி ஜீ. எல். பீரிஸ் மீண்டும் எதிர்க்கட்சி வரிசையில் தமக்கு ஒதுக்கப்பட்ட ஆசனத்தில் சென்று அமர்ந்துள்ளார். (ஐ)

# தையிட்டி விகாரை தொடர்பில் மனோவுக்கு வந்த சந்தேகம்!

கொழும்பு, மே 08

தையிட்டி விகாரை ஒரே நாளில் கட்டப்பட்டதா என்ற கேள்வி தனக்கு எழுவதாக பாராளுமன்ற உறுப்பினர் மனோ கணேசன் தனது சமூக ஊடகத்தில் பதிவொன்றை இட்டுள்ளார்.

தையிட்டியில் கட்டப்பட்டுள்ள விகாரையை பாரக்கும் போது அந்த விகாரையை இராணுவம் ஒரே நாளில் கட்டி முடித்து விட்டதா? அல்லது பல வருடங்களாக இந்தக் கட்டுமானப் பணிகளை இராணுவம் திரை போட்டு மூடி வைத்திருந்ததா என்ற சந்தேகம் தனக்கு எழுவதாக பாராளுமன்ற உறுப்பினர் மனோ கணேசன் தனது ருவிற்றர் பக்கத்தில் பதிவிட்டுள்ளார். (ஐ)

# வங்கக் கடல் தாழமுக்கம் புயலாக மாற வாய்ப்பு!

கொழும்பு, மே 08

தென்கிழக்கு வங்கக் கடலில் உருவாகியுள்ள வளிமண்டலத் தளர்வு நிலையானது குறைந்த காற்றழுத்த தாழ்வுப் பகுதியாக உருவாகி, அடுத்த சில நாட்களில் புயலாக மாறும் என்று வளிமண்டலவியல் திணைக்களம் எதிர்வு கூறியுள்ளது.

மேல், சப்ரகமுவ, மத்திய, வடமேல் மற்றும் வடக்கு மாகாணங்களிலும் காலி மற்றும் மாத்தறை மாவட்டங்களிலும் அவ்வப்போது மழையோ அல்லது இடியுடன் கூடிய மழையோ பெய்யக் கூடிய சாத்தியம் காணப்படுகின்றது.

கிழக்கு மற்றும் ஊவா மாகாணங்களிலும் பொலநறுவை மாவட்டத்திலும் பல இடங்களில் பிற்பகலில் அல்லது இரவில் மழையோ அல்லது இடியுடன் கூடிய மழையோ பெய்யக் கூடிய சாத்தியம் காணப்படுகின்றது என்றும் திணைக்களம் அறிவித்துள்ளது. (ஐ)

# வயிற்றுப் போக்கு நோய் பரவல் நாட்டில் உயர்வு

கொழும்பு, மே 08

கடும் மழையுடனான காலநிலை நிலவும் இந்தப் பருவத்தில் வயிற்றுப்போக்கு நோய் பரவல் அதிகரித்துள்ளதாக சிறுவர் மருத்துவர் தீபால் பெரேரா தெரிவித்துள்ளார்.

மழைக்காலங்களில் ஈ போன்ற பூச்சிகளின் இனப்பெருக்கம் அதிகரித்தல் போன்றவை இந்நிலைமைக்குக் காரணமாக இருக்கலாமென அவர் மேலும் தெரிவித்தார்.

அதேவேளை ஈரலிப்பான காலநிலை தொடர்வதால் தொற்றுநோய்ப் பரவலும் அதிகரித்துள்ளதாக சுகாதார அதிகாரிகள் எச்சரித்துள்ளனர்.

மக்கள் இவ்வேளைகளில் அவதானத்துடன் செயற்பட வேண்டுமென அரச மருத்துவ அதிகாரிகளின் ஊடகத்துறைப் பேச்சாளர், வைத்தியர் சமில் விஜயசிங்க சுட்டிக்காட்டியுள்ளார். (ஐ)

இப்பத்திரிகை 707, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் அமைந்துள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் நிறுவனத்தினரால் 08.05.2023 அன்று ஏ9 வீதி, நாவற்குழியில் உள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.